# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"




ஆறுமுகசுவாமி—தேவிகாபுரம்

மாலை 4 ] பிலவ பங்குனி - ஏப்ரல் 1962 [ மணி 7

ரதி

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு



திருவானைக்கா கோயிலில் டாக்டர் C. P. இராமசுவாமி அய்யர் குழுவினரும்,
அறநிலைய ஆணையர் முதலியோரும்

## பொருளடக்கம்


1. திருவள்ளுவர்
2. நால்வர் நன்னெறி
3. திருஞானசம்பந்தர் அருளிய திருமுறை
4 தெய்வச்சேக்கிழார்
5. ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை
6. திருக்குறுக்கைக் கோயில் கல்வெட்டு வரலாறு
7. திருநாவுக்கரசு நாயனர்
8. படைவீடு
9. தேவிகாபுரம்
10. சிவஞானபோதம்

CONNEMARA PUBLIC LIBRARY
3 - APR 1962
MADRAS



திருவள்ளுவர்
(சென்னை மயிலாப்பூர் திருவள்ளுவர் கோயிலிலுள்ள திருவுருவம்)



வாசுகியம்மையார்
(சென்னை மயிலாப்பூர் திருவள்ளுவர் கோயிலிலுள்ள திருவுருவம்)

# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 4] பிலவ பங்குனி - ஏப்ரல் 1962 [மணி 7

## திருவள்ளுவர்

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு" என்று இறுமாந்து பாடினார் பாரதியார். அத்தகைய ஒப்புவமை யற்ற தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரின் வாழ்க்கை வரலாறு இருளில் பொதிந்து கிடக்கின்றது. பழந்தமிழ்ப் பெரும் புலவர்கள் பலருடைய வரலாறுகள் நமக்குக் கிடைக்காதது நாம் செய்த தவக் குறையே. திருவள்ளுவருடைய வாழ்க்கை வரலாற்றை, பின் வந்தோர் எழுதிய சில நூல்களாலும், காது வழிக் கேட்ட செய்திகளாலும் நாம் ஒருவாறு தெரிந்து கொண்டிருக்கிறோம். அவர் காலத்துப் புலவர்களும், மற்ற புலவர்களும் அவருடைய நூலின் பெருமையை எடுத்தோதினரே யன்றி அவருடைய வரலாற்றைப் பற்றிய குறிப்புக்களைச் சொன்னார்களில்லை. அவருடைய நூலில் அகச் சான்றுகள் எதுவுமில்லை. எனினும் ஒப்பற்ற தனிப் பெரு நூலை உலகுக்கு வழங்கிய புலவர் பெருமானின் வரலாற்றை ஓர் அளவாவது தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமே. ஆன்றோர் ஒருவர் வாழ்க்கையின் முதிர்ந்த அனுபவத்தின் முடிபுகளே ஒரு நூலாக மலர முடியும். அத்தகைய நூல்களே எந்தக் காலத்தும் அழியாமல் நிலைத்து நிற்கும்.

**பிறப்பிடம்:** ஆதி என்ற புலைப் பெண்ணும், பகவன் என்ற அந்தணனும் தங்களுக்குப் பிறந்த குழந்தைகளைப் பிறந்த இடத்திலேயே விட்டுச் சென்றனரென்றும், அந்த குழந்தைகளில் ஒன்றை மயிலாப்பூரில் விட்டுச் சென்றனரென்றும், அதை வள்ளுவச் சாதியினர் எடுத்து வளர்த்தனர் என்றும் ஒரு கதை வழங்குகிறது. "திருவள்ளுவர் தாம் மைப்புயலணி பொழில் மயிலாப்பூரில் வள்ளுவர் மனையிடை வளர்ந்தனர்" என்பது ஒரு பாடலின் பகுதி. அவர் பிறந்த இடமாகிய மயிலாப்பூரிலே அவர் பெயரால் ஒரு கோயில் திகழ்கிறது. வந்தவாசி என்னுமிடத்தில் பிறந்தார் என்று ஒரு சிலர் கூறுகின்றனர். வேறு சிலர் அவர் மதுரையில் பிறந்திருக்க வேண்டும் என்று சொல்கின்றனர். அதற்காதாரமாகக் கீழ்க்காணும் பாடலைக் கூறுகின்றனர்:—

உப்பநோக்கி உபகேசி
தோள் மணந்தான்
உத்தரமா மதுரைக்கு
அச்சென்ப—இப்பக்கம்
மாதனுபங்கி மறுவில்
புலச் செந்நாப்
போதார் புனற்கூடற்கு
அச்சு.

நல்கூர்வேள்வியார் என்னும் புலவர்பாடிய இப்பாடல் திருவள்ளுவமாலையில் இடம் பெற்றுள்ளது. நப்பின்னைப் பிராட்டியை மணந்த கண்ணபிரான் வட மதுரைக்கு ஆதாரம். ஏனெனில் அவன் 'கீதை என்ற ஒப்பற்ற நூலை அருளினான். அதே போல் தென் மதுரைக்கு ஆதாரமானவர் திரு

வள்ளுவர்-திருக்குறள் என்ற பெரு நூலை வழங்கியதால். இப்பாடலில் வருவனவற்றைக் கொண்டு வடமதுரையில் கண்ணன் பிறந்தான்; தென்மதுரையில் திருவள்ளுவர் பிறந்தார் என்று உய்த்துணர வேண்டும் என்பர்.

**தாய் தந்தையர் :** ஆதி, பகவன் என்பவர் தாய் தந்தையர் என்று கூறப்படுகிறது. "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்றபடி தாய் தந்தையர் பெயர் களை முதல் அதிகாரமான கடவுள் வாழ்த்தின் முதற் பாடலில் அமைத்துப் பாடினுர் என்று கூறுவோரும் உண்டு.

**வகுப்பு :** அவர் எந்த சாதியைச் சேர்ந்தவர் என்று அறுதியிட்டுக் கூறுவதற்கில்லை. வள்ளுவர் என்பது அவர் குடிப் பெயரென்றும், தொல்காப்பியர், சேக்கிழார் இவர்களைப் போன்று அவர் பிறந்த குடியை விளக்கியமையால் வள்ளுவர் என்ற பெயரே அவருக்கு அமைந் திருக்க வேண்டு மென்றும் கூறுகின்றனர். அவருடைய இயற் பெயர் என்ன வென்று தெரியவில்லை. **மாமூலனர்** என்ற சங்கப் புலவர்,

> அறம் பொருள் இன்பம்
> வீடென்னும் நான்கின்
> திறம் தெரிந்து செப்பிய
> தேவை—மறந்தேயும்
> வள்ளுவன் என்பானோர் பேதை
> அவன் வாய்ச்சொல்
> கொள்ளார் அறிவுடை யார்

என்ற பாடலில் வள்ளுவரைப் பிறந்த குலத்தால் அளவிட்டறிபவன் பேதை என்று கூறியிருக்கிறர். வள்ளுவர் என்போர் அரசாங்கத்தில் உயர் அலுவலில் இருந்தவர்கள் என்று சில ஆராய்ச்சிக் காரர்கள் கூறுகின்றனர். திருவள்ளுவரும் அத்தகைய பதவியில் இருந்திருக்க வேண்டும் என்பர்.

**சமயம் :** திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் தமிழ் நாட்டில் சைவம்,வைணவம்,சமணம், பௌத்தம் இந்தநான்கு சமயங்களும் பரவி யிருந்தன என்றும், அவற்றில் ஒன்றைக் கடைப் பிடித்துத் திருவள்ளுவர் வாழ்ந்திருக்க வேண்டும் என்றும் கூறுவர். திருக்குறள் கடவுள் வாழ்த்தில் வரும் 'எண்குணத்தான்' என்ற சொல்லை வைத்துக்கொண்டும், வேறு பல இடங்களில் கூறும் கருத்துக்களைக் கொண்டும் திருவள்ளுவர் சைவசமயத்தினர் என்று சைவ வாதிகள் கூறுகின்றனர். "அடியளந்தான்", "தாமரைக்கண்ணுன்" என்று திருமாலின் பெயர்களை நேரே குறிப்பிட்டுள்ளமையின் அவர் வைணவ மதத்தினர் என்று கூறுகின்றனர். "ஆதிபகவன்", "மலர்மிசைஏகினுன்" (பூமேல் நடந்தான்) என்ற சொற்களைக் கொண்டு அவர் சமண சமயத்தினர் என்று கூறுகின்றனர். "அறவாழியந்தணன்" என்ற சொல்லை அவர் பயன்படுத்தியிருப்பதாலும், கொல்லாமை, புலாலுண்ணுமை இவைகளைப் பற்றி வற்புறுத்திக் கூறியிருப்பதாலும், திருவள்ளுவர் பௌத்த சமயத்தைச் சார்ந்தவராயிருக்க வேண்டும் என்று கூறுகின்றனர். இந்த சமயங்களில் எதையும் சார்ந்தவர் அல்லர் என்று தக்க காரணங்களைக் காட்டி மறுத்து அவர் எம்மதமும் சம்மதம் என்ற பெருநோக்குடையவர் என்று சொல்வோரும் உண்டு. சமயம் என்ற பெயரால் சொல்லப்படாவிடினும் அவர் சில முடிந்த கொள்கைகளையுடையவர் என்பது மாத்திரம் விளங்காமற் போகாது. கடவுள் ஒருவர் உண்டு; அவருக்குப் பல பெயர்கள் உண்டு; உயிர்கள் பல; அவை நிலைபெற்றவை; பல பிறவிகள் உண்டு; கல்வி கற்பதன் பயன் இறைவன் திருவடிகளை வணங்குதல் என்பன போன்றவை அவருடைய கொள்கைகள். அவற்றைச் சமயம் என்ற பெயராலோ அல்லது வேறு எப்பெயராலோ அழைத்துக் கொள்ளலாம். சமயவாதிகள் திருவள்ளுவரைத் தத்தம் மதத்தினர் என்று போற்றி மகிழ்கின்ற ஒன்றே அவருடைய நூலின் பெருமைக்குப் போதிய சான்ருகும். அவ் விழுமிய நூல் உலகினுள்ள உயரிய சமய உண்மைகளையெல்லாம் தன்னகத்துக்குக் கொண்டு மிளிர்கிறது என்பது இதனுல் பெறப்படுகிறதன்ருே! கடைச்சங்கப் புலவரான **கல்லாடர்** என்பவர்,

> ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
> அன்றென்ப ஆறுசமயத்தார்—நன்றென
> எப்பா லவரும் இயைபவே வள்ளுவனுர்
> முப்பால் மொழிந்த மொழி

என்ற பாடலிற் கூறியிருப்பதுபோல எச் சமயக் கொள்கையுடையோரும் இசைந்து நிற்பதற்கு நிலைக்களனாக விளங்கும் நூல் திருக்குறளேயாகும்.

**காலம் :** கி. பி. 1962 ஆன இவ்வாண்டுக்குச் சமானமாக திருவள்ளுவர் ஆண்டு 1992-1993 என்று கணக்கிடுகின்றனர். ஆதலின் கிறிஸ்துவுக்கு 30 ஆண்டுகள் முன்னர் திருவள்ளுவர் இருந்திருக்க வேண்டுமென்பது. கி. மு. முதல் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் கி. பி. முதல் நூற்றாண்டின் முற்பகுதியிலும் அவர் வாழ்ந்திருக்க வேண்டுமென்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். தமிழ் மொழிக்கு அழியாப்பெரும் புகழைத்தந்த பெருமக்களாகிய கடைச்சங்கப் புலவர்கள் வாழ்ந்த காலத்தில் திருவள்ளுவர் தோன்றியிருக்க வேண்டும்.

சிலப்பதிகாரத்தை இளங்கோவடிகள் இயற்றிய காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டென்று பெரும்பாலான ஆராய்ச்சியாளர் கண்டமுடிபு. அவருடன் ஒருங்கு வாழ்ந்த புலவர்சிகாமணியான தண்டமிழ்ச் சாத்தனார் மணிமேகலை என்ற மற்றொரு பெருங்காவியத்தை யாத்தனர். அவர் அக்காவியத்தின் ஓரிடத்தில்,

> தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுமவர்
> பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்னப்
> பொய்யில் புலவன் பொருளுரை தேராய்

என்று கூறியிருப்பது, வள்ளுவர் குறளில் 'வாழ்க்கைத் துணைநலம்' என்ற அதிகாரத்தில் கூறிய

> **தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்**
> **பெய்யெனப் பெய்யுமழை**

என்ற குறட்பாவின் சொற்களை அப்படியே பொதிந்து அமைத்திருக்கிறார். ஆதலின் திருவள்ளுவர் காலம், சிலப்பதிகாரம் மணிமேகலை எழுந்த காலத்திற்கு முற்பட்டது என்பது தெற்றென விளங்குகிறது.

**வாழ்க்கை :** அவர் இல்லறத்தில் மனைவியுடன் வாழ்ந்தார் என்பது பெரும்பாலோரின் கருத்து. வாசுகி என்னும் அம்மையாருடன் வாழ்க்கை நடத்தினர் என்றும் அப்பெண்மணியின் கற்பு மேம்பாடு உலகறியப் பல அற்புதங்கள் நடந்ததென்றும் கர்ணபரம்பரையாகக் கதைகள் வழங்குகின்றன. அவர் ஒரு இல்லறத்து ஞானியாகத் திகழ்ந்திருக்க வேண்டுமென்று கொள்வது தவறாகாது.

**தொழில் :** அரசாங்கத்தில் அலுவல் பார்த்தவர் என்று ஒரு சிலர் கருதுகின்றனர். "இழைநக்கி நூல் நெருடும் ஏழை அறிவேனோ குழைநக்கும் பிஞ்ஞகன் கூத்து" என்று அவர் கூறியதாகக்கொண்டு அவர் நெசவுத் தொழில் செய்தார் என்று கூறுகின்றனர். ஆனால் திருக்குறளில் யாண்டும் நெசவுத் தொழிலைப் பற்றிய குறிப்பு இல்லை. வேளாண்மையைப்பற்றிப் பல இடங்களில் கூறியிருக்கிறார். வாணிகத்தைப் பற்றி ஒரு இடத்தில் குறித்திருக்கிறார்.

**பெயர்கள் :** நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப் புலவர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப்போதார் என்பன திருவள்ளுவரின் வேறு பெயர்களாக வழங்கி வருகின்றன.

**நூல் :** திருக்குறளுக்கு, முப்பானூல், உத்தரவேதம், தெய்வ நூல், திருவள்ளுவர், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை, என்று வேறு பெயர்களும் உண்டு. "பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ! பாரிலுள்ள நூலெல்லாம் வள்ளுவர் செய் நூலாமோ? என்ற கூற்றுக்கு ஆதாரமாக அப்பெருநூலின் சிறப்பியல்கள் சிலவற்றைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டியது மிக அவசியம்.

திருக்குறள் **உலகப் பொதுநூல்**; சாதி, சமயம், காலம் கடந்த தனிநூல். எல்லோராலும் எக்காலத்தும் போற்றப்பெற்று வருவதே இதற்குப் போதிய சான்றாகும். இது ஒரு உயர் **தனிமொழிச் செந்நூல்.** ஏறக்குறைய 12,000 சொற்கள் பொதிந்துள்ள இந்நூலில் 50 வேற்றுமொழிச் சொற்களே யுள்ளன என்பர் பேரறிஞர். அதன் தனித்தமிழ்த்தன்மை அதன் தொன்மைக்கும் சான்றாக நிற்கிறது. வேறு மொழிகளிலிருந்து திருக்குறள் மொழிபெயர்க்கப் பெற்றது என்று ஒரு சிலர் கூறுவதற்குத் தகுந்த ஆதாரம் யாதுமில்லை. ஆனால்

இந்த நூலே உலகிலுள்ள பலமொழிகளில் மொழி பெயர்க்கப்பெற்றிருக்கிறதென் பதை யாவரும் அறிவர். தமிழ்மொழிக்கே உரிய நூல் என்று காட்டுவதுபோல "அகர முதல் எழுத்தெல்லாம்" என்பதில் "அ" என்ற எழுத்தில் தொடங்கி, "கூடி முயங் கப்பெறின்" என்று "ன்" என்ற எழுத்தில் கடைசி குறள் முடிகிறது. 'தமிழ், திரு வள்ளுவனூர் ஓது குறட்பா உடைத்து' என்ற திருவள்ளுவமாலைப் பாடற்பகுதி ஈண்டு நோக்கத்தக்கது.

திருக்குறளுக்குப் பாட பேதங்கள் இல்லையென்பது ஒரு தனிச்சிறப்பு. சிலப் பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம், பெரியபுராணம் முதலிய நூல்களுக்குப் பாடபேதங்கள் உள்ளன. திருக்குறளில் அவ்வாறு இருக்க இடமில்லாமல் அமைத் திருப்பது திருவள்ளுவனுரின் பெரும் புல மையைக் காட்டுகின்றது. அவருடைய நூல் ஒரு நவமணி பதித்த பொற்கலன். போலி மணிகளை அதில் பதித்தால் அதை எவரும் எளிதில் தெரிந்துகொள்ளலாம். மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை யவர்களின் தலைமாணவரான திரிசிரபுரம் தியாகராஜ செட்டியார் என்னும் பெரும் புலவரிடம் மேல்நாட்டினர் ஒருவர்சென்று திருக்குறளுக்குச் சில திருத்தங்கள் செய்து கொண்டுவந்திருக்கிறேன் என்று சொன்ன வுடன் அவருடன் பேசமறுத்து உள்ளே சென்று கதவடைத்துக்கொண்டார் என்ற செய்தியை நாம் கேள்விப்பட்டிருக் கிருேம்.

இந்த நூலில் கடினமான சொற்கள் இல்லை; எளிய சொற்களையே கையாண் டிருக்கிருர்; அதிலும் பொருள் மயக்கம் தரும் சொற்களைப் பயன்படுத்தவில்லை. இனிய, தூய தமிழ்ச் சொற்களையே நாம் காணலாம். இடித்துரைக்க வேண்டிய இடத்தும் அவர் வன்மொழிகள் கூறுவ தில்லை. "மக்களே போல்வர் கயவர்" என்று சொல்லியிருப்பது இதற்கு ஒரு சான்ருகும்.

இனி, அறம், பொருள், இன்பம் என்ற தனிப்பகுப்பு திருவள்ளுவனுருக்கே உரியது. அவர் நூலின் அதிகாரவைப்பு முறையும் பெரிதும் போற்றத்தக்கது. ஒன்றையொன்று தொடர்ந்துசெல்வதைக் குறிப்புச் சொற்களால் உணரவைக்கிருர். எடுத்துக்காட்டாக, 'வான்சிறப்பு' என்ற அதிகாரத்தின் கடைசிகுறள் 'வான் இன்று அமையாது **ஒழுக்கு**' என்று முடி கிறது. 'நீத்தார் பெருமை' என்ற அடுத்த அதிகாரத்தின் முதல் குறள் "**ஒழுக்கத்து** நீத்தார் பெருமை" என்று தொடங்கு கிறது. 'வாழ்க்கைத்துணை நலம்' என்ற அதிகாரத்தின் கடைசியில் 'நன்கலம் நன் **மக்கட்பேறு**' என்று முடிகிறது. அடுத்த அதிகாரம் முதற்குறளில் '**மக்கட்பேறு**' என்ற சொற்ருெடர் காணப்படுகிறது.

அதிகார வைப்பு முறையிலும் ஒவ் வொரு அதிகாரத்திலும் பத்து குறட்பாக் களுக்குமேல் சொல்லவில்லை. ஒரே பொரு ளைப்பற்றி அதிகம் கூறவேண்டும்போது மேலும் அதிகாரங்களில் வேறு தகுதியான தலைப்புக்களின் கீழ்ச் சொல்லியிருக்கிருர். தவம், கூடாவொழுக்கம்; வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினைசெயல்வகை; நட்பு, நட்பாராய்தல், கூடாநட்பு, தீநட்பு; படைச்செருக்கு, படைமாட்சி என்பன போன்றவைகள் கண்டு கொள்க.

ஒரு பொருளைப் பிற அதிகாரங்களி லும் வற்புறுத்திச் செல்வதுண்டு. 'கட வுள் வாழ்த்'தில் 'கல்வி'யையும், 'புல்லறி வாண்மை'யில் 'ஈதலை'யும், 'பெருமை'யில் 'கற்பை'யும் 'சான்ருண்மை'யில் 'கண் ணேட்டம்', 'கொல்லாமை', 'அன்பு'இவை களையும், பண்புடைமை'யில் 'அன்பை' யும், 'சுற்றம் தழுவலை'ப் பல இடங்களி லும் கூறியிருக்கிருர். இப்படி அவர் கூறி யிருப்பதின் நோக்கம் அதன் சிறப்பு குறித்து வேறு தகுதியான சம்பந்தப்பட்ட அதிகாரங்களிலும் அமைந்திருக்க வேண் டும் என்பதே.

சுருங்கச்சொல்லி விளங்கவைக்கும் பெற்றியில் வள்ளுவனுரை விஞ்சியவர்கள் இல்லையென்றே கூறலாம். ஒன்றேமுக்கால் அடியில் பேருண்மைகளைத் திறம்படப் பொதிந்து காட்டியுள்ளது அவரையன்றி வேருெருவர்க்குச் சாலுமோ? சொற் செட்டு என்பதை அவர் நூலிலன்றி வேறு எவர் நூலிலும் காண்பதரிது. எடுத்துக் காட்டாக இரண்டு குறள்கள் கீழே தரப் படுகிறது.

நாடென்ப நாள்ளாவளத்தன, நாடல்ல
நாட வளந்தரு நாடு
காணுங்கால் காணேன் தவறாய, காணக்கால்
காணேன் தவறல்லவை.

முதற் குறளில் நாடு, வளம் என்னும் சொற்களையும், இரண்டாவதில், காண், தவறு என்ற சொற்களையும் கொண்டே அரிய கருத்துக்களை விளக்கியிருப்பது கண்டு மகிழத்தக்கது. சொற்கோவையும் இனிய ஓசைபட அமைத்திருப்பதையும் பல பாக்களில் காணலாம்.

'எல்லாப் பொருளும் இதன்பாலுள இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லை' என்று இந்நூலைப்பற்றிக் கூறப் பட்டிருக்கிறது. தாவரநூல், உளநூல் பிராணிநூல், பொருள்நூல், அரசியல் நூல், காமநூல், மருத்துவநூல், இசை நூல், நாடகநூல், வானநூல், கணிதநூல் இவைபோன்ற கலைகளுக்கெல்லாம் இந் நூலில் குறிப்புக்கள் இருக்கின்றன. இவை களுக்கெல்லாம் உதாரணங்கள் காட்டிக் கொண்டுபோனால் மிக விரியும். ஒன் றிரண்டு சொல்லாமல் விடுவதற்கில்லை. 'மருந்து' என்ற அதிகாரத்தை எடுத்துக் கொண்டால் முதல் ஏழு குறட்பாக்கள் வரையில் மருந்து என்பதைப்பற்றிச் சொல்லாமல் உணவுகொள்ளும் முறை யைப்பற்றியே கூறியிருக்கிறார். உணவு நியதியிருந்தால் உடலுக்கு ஊறு ஒன்றும் வராது என்பதை வற்புறுத்தவே அப் படிச் செய்திருக்கிறார். எட்டாவது குற ளில் "நோய்நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடி, வாய்ப்பச் செயல்" என்று கூறுகிறார். மருத்துவன் முதலில் என்ன நோய் என்று தெரிந்து கொள்ள வேண்டும்; பிறகு நோயின் காரணத்தைக் கண்டறிதல் வேண்டும்; அதைத் தணிக் கும் வழியையும் ஆராய்ந்து உடலுக்குப் பொருந்தும் படியாகச் செய்ய வேண்டும். Disease, origin of the disease,cure என்று தற்கால வைத்திய முறையில் கூறு வதை வெகு காலத்திற்கு முன்பே வள்ளு வர் வகுத்திருக்கிறார். நாடி என்ற சொல் மூன்று இடங்களில் வருவதை வாத,பித்த, சிலேத்தும நாடிகள் என்று சித்தவைத் திய முறையில் கூறுவதைக் குறிப்பது போல் அமைந்துள்ளது என்றும் அறிஞர் கள் கூறுவர்.

உவமைகள் கூறுவதில் வள்ளுவருக்கு உவமையாக எவரையும் கூற முடியாது. எளிய உவமைகளையும், அன்றாடம் மக்கள் கண்கூடாகப் பார்க்கும் பொருள்களை யுமே அவர் கூறுவார். தலையில் கூந்தல் இருக்கும்போது அதற்கு எண்ணெய் முத லிய வாசனைப் பொருள்கள் சேர்த்து அழகு செய்கிறோம். ஆனால் அது கீழே விழுந்துவிட்டால் வெறுக்கிறோம். மக்கள் உயர்வுக்குரிய நிலையிலிருந்து தாழ்ந்த போது அதேகதிதான். இதை,

தலையின் இழிந்தமயிர் அனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை

என்ற குறளில் அமைத்துக் காட்டுகிறார். நாடக அரங்கைக்கூர்ந்து கவனித்திருக் கிறார் வள்ளுவப் பெருந்தகையார். கூத்து நடைபெறத் தொடங்குவதற்கு முன்பே மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக வந்து நிறைந்து விடுகின்றனர். ஆட்டம் முடிந்த வுடனேயே அவ்வளவு மக்களும் சிறிது நேரத்திற்குள் வெளியேறி விடுகின்றனர். பெரிய செல்வம்கூட ஒருவனை இவ்வாறு தான் கொஞ்ச கொஞ்சமாக வந்து அடை யும். திடீரென்று அவ்வளவும் நீங்கிப் போதலும் உண்டு. இவ்வுண்மையை,

கூத்தாட்டு அவைக்குழாத்தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அது விளிந்தற்று

என்ற குறட்பாவில் அழகுபட விளக்கியுள் ளார். உவமை கூறும்போது அந்த உவ மைப்பொருளில் ஒரு உண்மையையும் புகட்டுவார். பண்புடைமை என்ற அதி காரத்தில்,

பண்பிலான் பெற்றபெருஞ் செல்வம்நன்பால்
கலம் தீமையால் திரிந்தற்று

என்பது ஒரு குறள். பண்பு இல்லாத ஒரு வன் அடைந்துள்ள பெருஞ்செல்வம், வைத்த பாத்திரத்தின் தீமையால் நல்ல பால் தன்சுவைகெட்டது போன்றதாகும். உவமை கூறுவதோடமையால் பாலை நல்ல பாத்திரத்தில் வைக்கவேண்டும் என்ற அறிவுரையும் பகர்கிறார்.

திருவள்ளுவர் தம்முடைய வாழ்க்கை யைப்பற்றிய குறிப்புக்களை எங்கும் கூறி னாரில்லை என்பதை முன்பு கண்டோம். மூன்று இடங்களில் யாம் என்று தன்மைப் பன்மையிலும், ஒரு இடத்தில் தன்மை ஒருமை தொக்கி நிற்கும் வகையிலும் கூறி

யிருக்கிறார். அந்த குறட்பாக்கள் பின்வருமாறு:—

பெறுமவற்றுள் யாம் அறிவதில்லை அறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற.

யாம்மெய் யாக்கண்ட வற்றுள்இல்லை எனைத்
[தொன்றும்
வாய்மையின் நல்ல பிற.

மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரியாம் கண்டது இல்.

இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்
கரப்பார் இரவன்மின் என்று.

மக்கட்பேறு, வாய்மை இவைகளின் பெருமையைக் கூறும்போதும், கயவர்களின் சிறுமையைக் கூறும்போதும் **யாம்** என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார். தம்மிடம் உள்ளதைக் கொடுக்காமல் ஒளிப்பவரிடம் சென்று இரப்பு செய்யவேண்டாம் என்று கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன் என்று மிகவும் பணிவுடன் கூறும்போது தன்மை ஒருமையில் பேசியிருக்கிறார்.

உலக மக்கள் தங்கள் வாழ்க்கையில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்ற பொது அறங்களை எடுத்து ஓதுகிறது திருக்குறள். அதன் ஆசிரியர் அவ்வாறே வாழ்ந்திருக்கவேண்டும் என்பது புலனாகிறது. எளிமை, தூய்மை, இனிமை, செம்மை, திட்பம், நுட்பம், செறிவு, செட்டு, தெளிவு என்று நூலில் காணப்படும் பண்புகளெல்லாம் அவர் வாழ்க்கையின் பிரதிபலிப்பே. "நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறை மொழி காட்டிவிடும்" என்ற அவர் கூற்றுக்கு அவரே எடுத்துக்காட்டாக விளங்குகிறார்.

திருக்குறளுக்குப் பத்து உரைகள் உள்ளனவாகச் சொல்லப்படுகிறது. அவற்றுள் சிறந்தது பரிமேலழகர் உரையே. டாக்டர் ஜி. யூ. போப் என்பவர் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார். இன்னும் சிலரும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கின்றனர்.

உலகப் பொதுமறையான திருக்குறள் என்றும் அழியாது நிலைத்திருக்கும் என்பதில் ஐயம் இல்லை. அவருடைய நினைவுச் சின்னமாக நமக்குக் கிடைத்திருப்பது அவர் பிறந்த இடமாகக் கருதப்படும் மயிலாப்பூரிலுள்ள அவருடைய கோயில் தான். அதில் அவருடையவும், அவர் மனைவியாருடையவுமான திருவுருவங்கள் இருக்கின்றன. (படம் காண்க) கோயிலின் மதிற்சுவர்கள், கர்ப்பக்கிரக விமானங்கள் முதலியவைகளைப் புதுப்பிக்கவும், ஒரு பெரு மண்டபம் எழுப்பவும் இரண்டு இலட்சம் ரூபா மதிப்பில் ஒரு திட்டமிடப்பட்டிருக்கிறது. அதற்கு ஒரு திருப்பணிக் குழுவும் அமைக்கப் பெற்றிருக்கிறது. நன்கொடை முதலியன அனுப்ப விரும்புகிறவர்கள் அக்கோயிலின் நிருவாக தர்மகர்த்தருக்கு எழுதிப் பேருதவி செய்யுமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

திருமுடிமிசையார் மயிர்முடியழகும்
தீர்க்கபுண்டர நுதலழகும்
திரண்மணி புயந்தை வருஞ்செவியழகும்
திகழ்நெடுந் தாடியினழகும்
அருமுடிசெப மாலிகை சின்முத்திரைசேர்
அபய நேர்வலக் கையினழகும்
அமிழ்துறழ் தமிழ்மா மறைமுறை
வரதமமை தரும் இடக்கையினழகும்
கருமுடியோகப் பட்டையினழகும்
கடிகொள்கீட் கோவண அழகும்
கழல்களிற்றிகிரி வளைவரையழகும்
கமலநல்லாதனத் தழகும்
தருமுடிமுகில்தோய் மயிலையினிடை
மாதவர்கள் கண்டு இறைஞ்ச வீற்றிருக்கும்
தழைபுகழ் திருவள்ளுவர் எனுநாம
சற்குரு சரணமே சரணம்.

---

**திருப்புல்லணை**—ஆதி ஜெகன்னாதசுவாமி கோயிலில் பங்குனி பிரம்மோற்சவம் 12—3—62 முதல் 22—3—62 வரை நடைபெற்றது.

**பேரளம்**—சுயம்புநாதசுவாமி கோயிலில் பங்குனி உத்திர மகோற்சவம் 11—3—62 முதல் 23—3—62 வரை நடைபெற்றது.

**கரூர்**—கல்யாண பசுபதீசுவரசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 13—3—62 முதல் 23—3—62 வரை நடைபெற்றது.

# நால்வர் நன்னெறி

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்
கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பின் அணைந்த
பிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர்
பதம் போற்றி
ஊழிமலி திருவாத வூரர்
திருத் தாள்போற்றி

நாலுபேர் போன வழியில் போகவேண்டும் என்று மக்கள் பேசிக் கொள்வதைக் கேட்டிருக்கிறோம். நல்ல முறையில் வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த பெருமக்களின் வாழ்க்கையைப் பின்பற்றி நாம் நடக்க வேண்டுமென்பதே இந்த பழமொழியின் பொருளாகும். அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற நால்வரின் அடிச்சுவடு பற்றி நாம் வாழ்க்கை நடத்த வேண்டுமென்றுகொள்ளுவதும் பொருத்தமுடையதே யாகும். அவர்களுடைய வரலாறுகளிலிருந்து எத்தகைய குறிக்கோள்களுடன் அவர்கள் வாழ்ந்தார்கள் என்பதை நாம் அவசியம் தெரிந்து கொள்ளவேண்டும். அவர்களுடைய வாழ்க்கையின் அனுபவங்களே தேவார திருவாசகங்களாக மலர்ந்தன.

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசகம் என்றுணர்

என்ற பாடலில் திருமுறைகளின் பெருமை கூறப்பட்டிருக்கிறது.

**திருஅவதாரம் :** அவதாரம் என்றால் மேலிருந்து கீழ் இறங்குதல் என்று பொருள். அறம் குறைந்து மறம்பெருகும் போது நான் உலகில் அவதரிப்பேன் என்று கண்ணபிரான் கீதையில் திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார். நால்வர் பெருமக்களும் இத்தகைய சூழ்நிலையில் தான் பிறந்தார்கள் என்பது அவர்களுடைய வரலாறுகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். அப்பர் சுவாமிகளின் பிறப்பைக் கூறும்போது சேக்கிழார்,

"உலகில் வரும் இருள் நீக்கி ஒளிவிளங்கு கதிர் போற்பின் மலரும் மருணீக்கியார் வந்து அவதாரம் செய்தார்" என்று கூறியிருக்கிறார் அதே போல சம்பந்தர், சுந்தரர் இவர்கள் பிறந்ததை, "தாவில் சராசரங்களெல்லாம் சிவம் பெருக்கும் பிள்ளையார் திரு அவதாரம் செய்தார்" என்றும், தீதகன்று உலகம்உய்யத் திருஅவதாரம் செய்தார் என்றும் சொல்லியிருக்கிறார். கடவுண் மாமுனிவர் தம்முடைய திருவாதவூரர் புராணத்தில் "பொய்ம்மையாம் உலகில் மாயப் பொங்கிருள் அகல—ஞானதினகரர் உதயம் செய்தார்" என்று மாணிக்க வாசகர் பிறப்பைக் கூறுகிறார். ஆகவே அஞ்ஞானம் ஒழிந்து மெய்ஞானம் பரவவும், என்றும் எங்கும் இன்பம் பெருகவும் இவர்கள் தோன்றினார்கள் என்று பெறப்படுகிறது. மற்றைய உலக மக்கள் போலவே இவர்கள் தாய் தந்தையர்க்கு மக்களாகப் பிறந்தார்கள் என்பதை நாம் மறக்கொணாது. புகழனார்—மாதினியாருக்கு அப்பரும், சிவபாத இருதயர்-பகவதியாருக்கு சம்பந்தரும், சடையனார்—இசைஞானியாருக்கு சுந்தரரும், சம்புபாதாசாரியார்—சிவஞானவதியாருக்கு மாணிக்க வாசகரும் அரும் பெரும் புதல்வர்களாய் அவதரித்தனர். அசாதாரணமாய் உலகில் தோன்றவில்லை, அன்னைவயிற்றில் தாம் பிறந்தார்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். இருள் நீங்கி—ஒளி விளங்க, எங்கும் சிவம் பெருக, தீமையகன்று—நன்மை பரவ, அறியாமை நீங்கி—அறிவு விளங்க இவர்கள் தோன்றினார்கள் என்பதால் நாமும் நம்முடைய அறியாமையைப் போக்கிக்கொண்டு, மற்றவர்க்கும் போக்க முயலவேண்டும்.

**கல்வி:** அறியாமையைப்போக்கி அறிவை விரிவு படுத்திக்கொள்ள கல்வி அவசியம். நால்வரும் கற்றனர். எவ்வாறு கற்றனர். என்பதை அவர்களுடைய வரலாற்று நூல்களிலிருந்தே எடுத்துக் காட்டலாம். "புலன் கொளுவமனம் முகிழ்த்த சுருள் நீக்கி மலர்விக்கும் கலைபயிலத் தொடங்குவித்தார்" என்றும், "சிந்தை மலர்ந்தெழும் உணர்வில் செழுங்கலையின் திறங்களெல்லாம் முந்து

முறையில் பயின்று" என்றும் அப்பர் கல்வி பயின்ற திறத்தைச் சேக்கிழார் கூறுகிறார். சம்பந்தரோ ஓதாதுணர்ந்த போத மூர்த்தி "நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்" என்று தாமே கூறிக்கொள்கிறார். அவர் ஞானம் பெற்றதைக் குன்றைமுனிவர் அழகிய பாடல் ஒன்றில் கூறுகிறார்.

சிவனடியே சிந்திக்கும் திருப்
பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினி
லோங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம்
உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம்
உணர்ந்தார் அந்நிலையில்.

"அளவில் தொல்கலைகளாய்ந்து திருமலி சிறப்பின் ஓங்கிச் சீர்மணப்பருவஞ் சேர்ந்தார்" சுந்தரர் என்று கூறப்படுகிறது. "எக்கலையும் கற்றுணர்ந்தார் ஈரெட்டாண்டகவையினில்" என்றும், "தவமணமும் திருநீற்றின் தன் மணமும் தவறாத சிவமணமும் பெறக் கல்விச்செல்வி மணம் புணர்வித்தார்" என்று மணிவாசகர் கல்வி கற்றதைப் பற்றிச் சொல்லப் பட்டிருக்கிறது. இதனால் நாமும் கல்வி கற்கவேண்டும் என்பதைத் தெரிந்து கொள்கிறோம். கல்வி கற்றதனோடு அமையாது இறைவன் திருவருளுக்குப் பாத்திர மாகும் நெறியையும் கடைப் பிடிக்க வேண்டும் என்பதை இவர்கள் வாழ்க்கை எடுத்துக் காட்டுகின்றது. 'கற்றதனால் ஆய பயன் என் கொல் வால் அறிவன் நற்றாள் தொழார் எனின்' என்பது வள்ளுவர் வாய் மொழி.

பொருட் செல்வம் : "வடுவிலா வையத்து மன்னிய மூன்றில் நடுவணது எய்த இருதலையும் எய்தும்" என்றபடி பொருள் இருந்தால் தான் அறமும் இன்பமும் பெறமுடியும். "பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை" என்பது பொய்யாமொழி. நிறைந்த கல்வியுடையார் பொருள் இல்லாமல் இருப்பதை நாம் உலகில் கண்கூடாகக் காண்கிறோம். ஆனால் சமய குரவர் நால்வரும் கல்விச் செல்வம் கைவரப் பெற்றதோடு பொருட்செல்வமுடையாாகவும் இருந்தனர். "மேதக்க வேளாண்குடி முதல்வர்", "அறம் புரிந்து விருந்தளிக்கும் மேன்மை" என்று அப்பருடைய செல்வநிலை குறிக்கப்படுகிறது. கலிப்பகையார் என்னும் சேனாபதிக்குப் பெண்கொடுக்கும் நிலையிலிருந்தார் என்றால் அவர் செல்வப் பெருங்குடியினர் என்று கூறவும் வேண்டும். சம்பந்தர் தந்தையாரான சிவபாதவிருதயரை "அந்தணர்குடி முதல்வர்" என்று சேக்கிழா. கூறுகிறார். சுந்தரர் "மாசிலா மரபில் வந்த வள்ளல்." நரசிங்க முனையரையர் என்ற அரசர் அவரை வளர்த்தார் என்றால் அவர் செல்வப் பிள்ளைதானே. சேரமான் பெருமாளான மன்னவருக்குத் தோழராகவும் இருந்தார். மாணிக்க வாசகர் "இந்திரச் செல்வம்" போன்ற செல்வமுடையவர். அமைச்சராகும் தகுதியுடைய பெருங்குடியிற் பிறந்தவர். உலக வாழ்க்கைக்கு கல்விச் செல்வத்தோடு பொருட்செல்வமும் இன்றியமையாதது என்பதை நாம் அறிந்து கொள்கிறோம். ஆனால் பொருட் செல்வத்தில் மாத்திரம் அளவற்ற ஆசை வைக்கக் கூடாது என்பதை நால்வர்வாழ்க்கையின் சிலநிகழ்ச்சிகளிலிருந்து அறிந்து கொள்ளவேண்டும் "ஓடும் பொன்னும் ஒக்கவே நோக்கும்" பண்பு அவர்களிடம் அமைந்திருந்தது. "மாட்டை (பொருளை)த் தேடி மகிழ்ந்து நீர் நும்முளே நாட்டுப் பொய்யெலாம் பேசிடும் நாணிலீர்" என்று அப்பர் கூறுகிறார். உழவாரப்படை கொண்டு கல்லும் புல்லும் செதுக்கும் போது வந்த பொன், மணிகளைப் பொய்கையில் வாரி எறிந்தார் அப்பெருமகனார். சம்பந்தர் அடியார் பொருட்டாகவே படிக்காசு பெற்றார். "தில்லைச் செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே" என்று இறைவன் திருவடி போற்றும் செல்வத்தை விடப் பெரியசெல்வம் இல்லையென்று அருளுகிறார். சுந்தரர் அடியார்க்காகவும் பரவையாருக்காகவுமே இறைவனிடம் பொருள் வேண்டிப் பெற்றார். திருப்புகலூரில் பொன் வேண்டிச் சென்றவர் "பொய்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர்ப்பாடுமின் புலவீர்காள், இம்மையே தரும் சோறும் கூறையும்... அம்மையே சிவலோக மாள்வதற்கு யாதும் ஐயுறவில்லையே" என்று பாடுகிறார். சுந்தரர் தாம் பெற்ற பொன்னை திருமுதுகுன்றத்தில் ஆற்றில் போட்டுவிட்டு திருவாரூர்க் குளத்தில் எடுத்தார் என்ற செய்தி யாவரும் அறிந்ததே. பாண்டிய மன்னன் போருக்குப் பயன்படுவதற்காக குதிரைகள் வாங்கும்படி மாணிக்கவாசகரிடம் கொடுத்த பொருளைக் கொண்டு திருப்பெருந்துறைக் கோயில் திருப்பணியைச் செய்தார்,

(தொடரும்)

# திருஞானசம்பந்தர் அருளிய திருமுறை

[ திரு. மாணிக்கவாசக அடிகள், தஞ்சை ]

சிவபிரானை வழிபட்டு, அவன் திருவருளைப்பெற்றுப் பேரின்பம் உற்றுச், சிவமாந் திரு எய்த விரும்புவோர்க்கு உரிய தவம் 1. சரியை, 2. கிரியை, 3. யோகம் என்று முத்திறம் ஆம். அத்தவம் மூன்றும் ஒன்றன் பின் ஒன்றாக மேற்கொள்ளத் தக்கது. அதுவே நெறி. அந்நெறியின் நீங்கினும் பயன் இல்லை. மாறினும் பயன் இல்லை. முறை பிறழ்தல் இன்றி அமைதல் வேண்டும். அரும்பும், மலரும், காயும், கனியும் சரியை முதலிய நான்கற்கும் உவமம் ஆக்கித் தெளிவித்தனர் நம் முன்னோர். அரும்பு போல்வது சரியை. மலர் போல்வது கிரியை காய் போல்வது யோகம். காயின் முன்னிலை மலர்; யோகத்தின்முன்னிலை கிரியை. மலரின் முன்னிலை அரும்பு; கிரியையின் முன்னிலை சரியை. அரும்பு முதலிய இம்மூன்றன் முடிவாய் விளங்கும் பயன் கனி. அச்சரியை முதலிய மூன்றன் முடிவாய் விளங்கும் பயன் ஞானம்.

'விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே'

என்று தாயுமானவர் அருளியதும்

"அறிதல் ஒப்புமையால், சரியை முதலிய நான்கும் ஞானமேயாம்." "ஆயினும், 'அரும்புமலர் காய்கனி' யாதல் போலச் சோபான முறையாகிய தம்முள் வேறுபாட்டால் முறையே ஒன்றற்கு ஒன்று அதிகமாய் நான்காம் எண்ணு முறைமைக்கண் நின்ற ஞானமே முடிவாகிய ஞானம் ஆம்." என்னும் சிவஞான பாடிய வசனமும் இங்கு அறியத்தகுவன. முன் இருகட்டுரையுள் வழிபடற்குரிய மெய்ப்பொருளும் வழிபாட்டு நெறிவகையுள் ஞானமும் யோகமும் திருமுறையினின்று விளக்கப்பட்டன. இதிற் கிரியை உணர்த்தப்படும்.

சிவஞானபோத வார்த்திகத்தில், "ஈண்டு இவ்வான்மாக்களுக்கு முற்செய் தவத்தால் ஞானம் நிகழும் என்றது; மேற்சரியை கிரியா யோகங்களைச் செய்துழி நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டியல்லது மோட்சத்தைக் கொடா ஆகலான்." என்றுளது. இதில், முற்செய்தவம் என்றது சரியை முதலிய மூன்றன் தொகுதியும் 'நன்னெறி' என்றது ஞானமும் ஆதல் வெளிப்படை. இங்குச் சிவஞான பாடியம் கூறியதாக, மேற்காட்டிய பகுதியால் உணர்ந்ததனை மறத்தலாகாது. ஞானமே நன்னெறி; ஏனைய மூன்றும் நன்னெறியும் அல்ல; ஞானமும் ஆகா; என்று எண்ணலாகாது. 'நன்மை எனப்படுவன எல்லாவற்றுள்ளும் சிறந்த நன்மை எனப்படுவது வீடுபேறு என்ப. அதனைத் தலைப்படுதற்கு ஏதுவாய்ச் சிறந்த நெறி ஆகலின், ஞானம் நன்னெறி எனப்பட்டது. 'வீட்டிற்கு நெறி என அவ்வச்சமயத்தாராற் கூறப்படுவன அனைத்தும் தன் கண்ணே வந்து கூட நின்ற பெருநெறி ஆகலானும் அது நன்னெறி எனப்பட்டது.' "நன்னெறி சன்மார்க்கம் என்பன ஒருபொருட்கிளவி." இவை சிவஞான முனிவர் எழுதியருளிய விளக்கம்.

சைவசித்தாந்த ஞான நூல்களிலும் திருமுறைகளிலும் 'தவம்' என்று உள்ள இடங்களில், இக்கருத்து நினைவில் வருதல் வேண்டும். திருக்குறளில், "உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு" என்று உள்ளதைக்கொண்டுரைத்தல் வழக்கமாயிருக்கின்றது. அது தவத்தை விளக்கி நின்ற குறள் அன்று. தவத்தின் அடையாளமாகிய தவம்புரிவோரது தன்மையை விளக்கி நிற்கும் பொருள் குறித்தது. தவஞ் செய்வோன், தனக்கு உற்ற நோயைப் பொறுத்தலும் தான்பிறவுயிர்க்குத் துன்பம் செய்யாதொழிதலும் ஆகிய இருவேறு தொழிலும் உடைமை தவத்தின் அடையாளம் ஆகக்கொள்ளல் வேண்டும். 'தவத்திற்கு உரு' வேறு, 'தவம்' வேறு. 'தவம்' என்னும் இடங்களில் எல்லாம் அக்குறட்பாவை எடுத்துக்காட்டும் வழக்கம் பொருந்தாது.

திருஞான சம்பந்தர் 'தவநெறி'யை வேண்டுகின்ற உண்மை திருமுறைகளில் சில இடங்களில் உண்டு. அங்கெல்லாம் கொள்ளத்தக்க கருத்து, இதுகாறும் எழுதிய

சைவத்தவமே ஆகும். ஆயினும், அவரது சிவஞான நிலையில் எத்தகைய அளவு அத் 'தவம்' என்னும் சொல்லாற் குறிக்கப்படுகின்றது என்னும் ஓர் ஆராய்ச்சியும் அங்கு இன்றியமையாதது.

"பாடினை அருமறை வரல்முறையால்
ஆடினை காணமுன் அருவனத்தில்
சாடினை காலனைத் தயங்கொளிசேர்
நீடுவெண் பிறைமுடி நின்மலனே
நினையே அடியார்தொழ நெடுமதிற் புகலிந்நகர்
தனையே இடம்மேவினை தவநெறி அருள்எமக்கே."

"புண்ணியர் தொழுதுஎழு புகலிந்நகர்
விண்ணவர் அடிதொழ விளங்கினனை
நண்ணிய ஞானசம்பந்தன் வாய்மை
பண்ணிய அருந்தமிழ் பத்தும்வல்லார்
நடலையவை இன்றிப்போய் நண்ணுவர் சிவனுலகம்
இடராயின இன்றித் தாம்எய்துவர் தவநெறியே."

என்னும்,

இவ்விரண்டு திருப்பாடலிலும் 'தவநெறி' குறிக்கப்பட்டுளது. முதலில் 'தவநெறி' என்றது திருஞான சம்பந்தரால் 'எமக்கு அருள்' எனப் புகலியிறைவனை வேண்டியதாகும். இரண்டாவதில் 'தவநெறி என்றது அத்திருப்பதிகத்தை ஓதவல்லவர்க்கு எய்துவதாகும். நடலை இன்றிப்போய்ச் சிவனுலகம் நண்ணுவர் (மறுமையில்). இடர் இன்றித் தவநெறி எய்துவர் (இம்மையில்). சிவனுலகம் நண்ணும் பக்குவத்திற்குத் தவநெறி அமையும் அவ்வோதுவார்க்கு. அவ்வளவு தவமோ திருஞானசம்பந்தர் வேண்டுவது? புகலியிறைவர் திருவருள்பெற்ற புகலிவேந்தர் வேண்டும் 'தவநெறி'யின் அளவு நம்மனோர் கணிக்க வல்ல பான்மையதன்று. அப்பெருமானார் திருவுள்ளமே அதனளவை அறிவதாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருப்பாட்டில், தவநெறி வேண்டிய ஒரு திருப்பதிகம் உண்டு. அதில், அச்சுவாமிகள் வேண்டிக்கொண்ட தவநெறியும் அத்திருப்பதிகத்தை ஓதவல்லார் பெறும் தவநெறியும் தன்மையாலும் அளவாலும் வேறுபடுதல்போல இங்கும் அவற்றின் பெரிய வேற்றுமையை நம் உளத்திற்கொள்ளல் வேண்டும்.

பல தவங்களுள், உயிர்க்கு இன்பத்துன்பங்களாகிய போகம் ஊட்டுவனவும், செய்தற்கு எளியனவும், அரியனவும், அவ்வச்சமயத்தவரால் தத்தம் ஆட்சியிற் கொள்ளப்பட்டனவும், சைவத்திறத்தனவும் என வெவ்வேறாய் நிற்கின்றன. சிவஞானசித்தியாருள், "ஊனம் இலாக் கன்மங்கள் தபம் செபங்கள் தியானம் ஒன்றுக்கு ஒன்று உயரும் இவை ஊட்டுவது போகம். ஆனமையால், மேலான ஞானத்தால் அரனை அருச்சிப்பர் வீடுஎய்த அறிந்தோர் எல்லாம்." என்றதில், வேள்வி (யாகம், வழிபாடு, பூஜை) ஐந்தனுள், ஞான வேள்வி அல்லாத நான்கும் போகம் ஊட்டும் என்று குறிக்கப்பட்டன. அவற்றுள் ஒன்று தவவேள்வி. ஊனம் இல்லாத்தவமே ஆயினும் அதில் ஒழுங்குற்றால் இன்பமும் ஒழுங்கற்றால் துன்பமும் ஆகிய போகம் தருவது அஃது என்றார். அத்தவத்தினும் முன்னிலையாயுள்ள தவங்கள் பல உள்ளன. அவற்றையே, சித்தியாருள் 'புறச்சமயநெறி நின்றும்' என்னும் தொடக்கத்துத் திருவிருத்தத்திலே, அறத்துறையடைவுக்கும் அருங்கலைத் தெரிவுக்கும் இடையே 'அருந்தவங்கள்' என்றார் அருணந்தி தேவநாயனார். எல்லாத்தவங்களினும் மேலான சித்தாந்த சைவத்தவத்தை,(அத்திருவிருத்தத்திலே) 'சைவத்திறத்து அடைவர்', இதில், சரியை கிரியாயோகம் செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர், என்று விளக்கியருளினார். இங்கு 'அறத்துறை' என்றது பிரமசரியம் முதலிய நான்காசிரம பேதத்தை. அவற்றைச் சார்த்துச்சொல்லிய தவம் அருந்தவம் எனப்படினும், அத்தவம் பெரும்பயனுடையன அல்ல. அவ்வுண்மையைத், 'தானம் யாகம் தீர்த்தம் ஆச்சிரமம் தவங்கள் சாந்திவிரதம் கன்மயோகங்கள் சரித்தோர் ஈனம்இலாச் சுவர்க்கம் பெற்று இமைப்பளவில் மீள்வர்' என்றதால் அறியலாம். இத்தவமும் தவவேள்வியும் சரியையாதிய தவத்திறமும் வெவ்வேறாகும்.

சைவத்தவம் ஆகிய 'இறப்பில் தவம்' பெரும்பயன் உதவுவன. இறப்பில்லாத அத்தவத்துள்ளும் சரியை முதலிய மூன்றும் ஊனம் இலாப்பத முத்திபயப்பன. ஞானநெறியே பரமுத்தி நல்குவது. இவ்வுண்மையை அதன் பிற்பகுதியில்,

"ஈசன்யோகக் கிரியாசரியையினில் நின்றோர்
ஊனம் இலாமுத்திபதம்பெற்று, உலகம் எல்லாம்
ஒடுங்கும்போது அரன்முன் நிலாதுஒழியின் [உற்பவித்து
ஞானநெறி அடைந்து அடைவர் சிவனை; அங்கும்
நாதனே முன்நிற்கில்நணுகுவர் நற்றாளே."

என்று விளக்கியவாற்றால் உணரலாம். சிவ ஞானபோத வெண்பாவில், சரியை முதலி யன இறப்பில்லாதன எனவே, ஏனைய இறப் புள்ள தவங்கள் எனல்தானே விளங்கும்.

'ஞாலமதில் ஞானநிட்டை யுடையோருக்கு
நன்மையொடு தீமையிலை நாடுவதொன்றில்லை
சீலம்இலை தவம் இல்லை'

என்றதிற் குறித்த தவம் சரியை முதலிய மூன்றும் ஆம். அவையே அவர்க்கு இல்லை எனின், ஏனைய தவம் எவ்வாறு வேண்டப் படும்? இங்கு இந்நிலையில், திருஞானசம்பந்தர் வேண்டியதவம் ஞானநெறியில் அடங்கும் உயரிய தனிப்பெருந் தவமே ஆகும். ஆயினும் அதன் அளவை மதிப்பிடவல்லார் எவரும் இலர். திருமுறைகளில் வரும் வேண்டுகோள் முத லியவற்றை அவரவர் தகுதிக்குத் தக்கப் பொருள்கொள்ளல் இக்காலத்தில் சைவர்க் கும் ஏனையோர்க்கும் 'சர்வசாதாரணம்' என் னும் ஓர் இழிந்த கருத்துடைய வழக்கில் அடங்குகின்றது. அதனதன் உயர்வறியும் உண்மை நிலையில் இல்லை.

சிறிய பிள்ளையாயிருந்ததால், அவர்பாட் டில் உலகியற் பொருட்காட்சியைக் குறித்த பாடல்கள் நிறைந்துள்ளன என்று எழுது கின்றவரும் பேசுகின்றவரும் பலர். காரணம் இயற்கைக்காட்சி வருணனை மிகையாம்.

இதுகாறும், திருஞானசம்பந்தர் திருப் பாசுரத்தில் வந்த 'தவநெறி' என்பதன் உட் கோள் வேறு மக்கள் கருத்து வேறு என்பது சிறிது விளக்கப்பட்டது. இவ்வாறே எண் ணிலாத உண்மைகள் உள்ளன.

இன்றைக்கும் சில இடங்களில், இத்த கைய பிழையுணர்ச்சி குடிகொண்டிருத்தல் அறியப்படும். தங்கள் செல்வம் நிலையாக இருக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு, 'நிலையுடைய பெருஞ்செல்வம் நீடுலகிற்பெற லாமே' என்று முடியும் திருப்பாசுரத்தைப் பாடி இன்புறுகின்றனர். தாம் அடையும் அழியும் இன்பத்தை உளத்திற்கொண்டு, அதை மேலும் மேலும் தொடர்ந்து பெற வேண்டும் ஆர்வத்தோடு, 'தன்னடைந்தார்க் கின்பங்கள் தருவானை' என முதலும் பேரின் பப்பாடலைப் பாடிக்களிப்பிக்கின்றனர் அவ்வற்றை ஓதுவோர். திருமுறைகளின் மெய்ப்பொருளுணர்ச்சியைப்பெறச் சைவசித் தாந்த சாத்திரப் பொருளுணர்ச்சி இன்றி யமையாது வேண்டுவதாகும். ஆதலின், சைவத்தின் வளர்ச்சியை விரும்பும் நல்லோர், உரிய இடங்களிலாதல் (திருக்கோயில் திரு மடங்கள்) சைவசித்தாந்த சாத்திரங்களையும் திருமுறைகளையும் போதிக்கும் ஞானநிலயங் களை அமைத்தல் அத்தியாவசியம் ஆகும்.

திருமுறைகளில், ஆண்டாண்டு, ஞான மும் யோகமும் குறித்துப் பாடியிருப்பினும், யாண்டும் வெளிப்படப் பொலிவன கிரியை யையும் சரியையும் குறித்த திருப்பாடல்களே (நிறைந்துள்ளன) ஆகும். அவற்றுள், கிரி யைக்குரிய குறிப்புக்கள் சிவபூஜை செய்யும் பெற்றியர் உள்ளத்திற்குத் தெளிவாதல் போல ஏனையிர்க்குத் தெளிவாகா. திருஞான சம்பந்தரும் மற்றை நாயன்மாருட் பலரும் இங்குத் திருமேனிதாங்கியிருந்தருளிய கால முழுதும் சிவபூசையை விடாமற் செய்தவ ராவர். அவர் சிவபூஜையைச் செய்யுங்கால் கொன்றைமலர்களைக்கொண்ட குறிப்பு அவர் திருமுறையிற் பலபல இடங்களில் அம்மல ரைக் கூறியவற்றால் விளங்குகின்றது என் பர் சான்றோர்.

திருஞானசம்பந்தர் திருப்பாடல் ஒன்று, "கொன்றைசூடி நின்றதேவை அன்றி ஒன்றும் நன்று இலோமே" என்று உணர்த்துகின்றது. திருவச்சிறுபாக்கத் திருப்பதிகத்திறுதியில், 'கைச்சிறுமறியவன்கழல்அலால் பேணுக்கருத் துடை ஞானசம்பந்தன் தமிழ் கொண்டு அச் சிறுபாக்கத்து அடிகளை ஏத்தும் அன்புடை அடியவர் அருவினை இலரே.' என்றுளது. இவற்றால், சிவபிரானடியை அன்றி வேறு யாதும் அவரது சிந்தனைக்கு உரியது அன்று என்பது தெளிவாயிற்று. இவ்விடங்களில், நம் திருநாவலூர்க்கோவின் திருவுள்ளம் தடைப்பட்டு நின்று ஆழ்ந்தது. அதனால், தாம் அருளிய திருத்தொண்டத் தொகையில், "வம்பு அறுவரிவண்டு மணம்நாற மலரும் மதுமலர் நற்கொன்றையான் அடி அலால் பேணு எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்" என்று திருவாய்மலர்ந்தருளலா யிற்று. ஆயினும், அத்திருத்தொண்டத் தொகைப்பகுதி யுண்மைக்கு ஆதாரமாகத் திருஞானசம்பந்தர் திருவாக்கில் எண்ணி லாதனவாய்த் தோன்றியுள்ளன. அவற்றை யெல்லாம் உணர்ந்தே நம்பியாரூரர், இங்க னம் பாடியருளினர்.

திருவீழிமிழலைத் திருப்பதிகத்தில், "போத கந்தனை உரிசெய்தோன்புயல் நேர்வரும் பொழில்மிழலை மாநகர் ஆதரஞ்செய்த அடிகள் பாதம் அல்லால் ஒர்பற்று இலமே" என்பதும், கோயிற்றிருப்பதிகத்தில்,

வருமாந் தளிர்மேனி மாதோர் பாகமாந்
திருமாந் தில்லையுட் சிற்றம் பலம்மேய
கருமான் உரியாடைக் கறைசேர் கண்டத்தெம்
பெருமான் கழல்அல்லாற் பேணு துள்ளமே."

என்பதும் அக்'கொன்றையான் அடி அலால் பேணு எம்பிரான் சம்பந்தன்' என்னும் தொகைக்கு விரி(மூலம்) ஆவனவே. இங்கு இவற்றைக் குறித்ததன் நோக்கம் ஈது:—திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் முதலிய ஆசிரியப்பெருமக்கள், சைவாசார சீடர்க்குத்தம் அருளொழுக்கத்தையும் காட்டி யாட்கொண்டவர்கள் என்பதும், திருமேனி நீங்குங் காறும் சிவபூஜை செய்து வந்தவர்கள் என்பதும், நாள்தோறும் சிவபூஜைக்குக் கொன்றைப்பூவைக் கைக்கொண்டவர்கள் என்பதும் நம் பெரியோர்கள் கொண்டிருந்த உண்மைகளாகும் என்பது.

'கொய்யாடு கூவினங் கொன்றைமாலை கொண்டு அடியேன் நான் இட்டுக்கூறி நின்று பொய்யாத சேவடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே' என்னுந் தேவாரத்தால், திருநாவுக்கரசுநாயனார் தம் திருமேனியைத் துறக்கும் திருநாளிலும் கொன்றைமாலை கொண்டு இட்டு வழிபட்டமையும் கூறி (ஸ்தோத்ரம் செய்து) நின்றமையும் வெளிப்படுகின்றன. அவ்வாறே, திருஞானசம்பந்தப் பெருமானும், 'ஏறுகந்தீர், இடுகாட்டெரியாடி வெண்ணீறுகந்தீர், விரிதேன்கொன்றை நாறுகந்தீர், திருநல்லூர்ப் பெருமணம் வேறுகந்தீர் உமைகூறுகந்தீரே' என்னுந் திருப்பாடலால், கொன்றை மலரால் வழிபாடு செய்தமை அறியப்படும்.

"அத்தனார் திருவடிக்கீழ் நினைவகலா அன்புருகும்
மெய்த்தன்மை உணர்வுடைய விழுத்தவத்து [மேலோர்தம்
சித்தநிலை திரியாது செய்பணியின் தலைநின்றார்"

என்னும் நிலைமை நம் ஆசாரியப் பெருமக்கள் நால்வர்க்கும் உரியதேயாதலின், தத்தம் செய்பணியின் தலைநின்ற அவர்களது உண்மையில் எவரும் எட்டுணையும் ஐயுறார்.

நம் பெருமக்கள் சிவஞான ரூபவான்களாய்ச் சிவாநந்தமே நுகரும் பெற்றியராய் விளங்கியிருந்தும், சிவபூஜையைத் தலைமையாகக்கொண்ட கிரியையையும், சரியையும், யோகஞானங்களைப்போல அதி முக்கியமாகக் கொண்டு வற்புறுத்துப் பாடியருளும் உண்மையைத் திருமுறையில் எங்கும் காணலாம்.

முதற்கட்டுரையில் வழிபடற்குரிய மெய்ப்பொருளையும், இதிற்கிரியையையும் குறித்தற்கு எண்ணியே முதலில், சித்தாந்த சைவத்திற் கூறப்பெறும் சிவபரம்பொருளை முதற்றிரு முறையினின்றும் விளக்கினேன். சென்ற திங்கட் கட்டுரையில் ஞானநெறியைச் சுருக்கி, யோக (ஒளி) நெறியை விரித்தெழுதினேன். இதற் பலர்க்குப் பயனாகுநிலவும் கிரியையைக் குறித்து எழுதவேண்டி, அதற்குரிய தக்க அடிப்படை யுணர்வு இதுகாறும் தோற்றலானேன்.

சைவர்கள் சிவபூஜையைச் செய்து வருதல் ஆக்கூர்ப்பெருமான் (சுயம்பு) அருளிய ஆகமநெறியை அணுவளவும் கடவாததாகும். அவன் திருப்பெயர் அளவில் நின்று, ஆகமநெறியை உணராமல், சிவபூஜை செய்வது சிவஞானத்தை விளைக்காது. தன்னைத்தான் வழிபட்டுக் காட்டிய முழுமுதல்வனும் அம்முதல்வனை வழிபட்டுத் தம் மக்களை வாழ்வித்தருளும் உலகன்னையும் அச்சிவபூஜா மார்க்கம் ஆகமமார்க்கம் என்று காட்டிய உண்மையைத், திருவையாறு முதலிய திருத்தலங்களிலும் திருக்கச்சியேகம்பத்திலும் நிகழும் திருவிழாக்களைக் கண்டு தெளிந்து கொள்ளக் கடவர் நன்மக்கள்.

பெரியபுராணத்தில், திருக்குறிப்புத் தொண்டநாயனார் புராணத்தில், பின்வருமாறு உளது. காஞ்சிமா நகரத்தில் அம்பிகை, பெருமானை, அருச்சனையால் வழிபட்டு அறம் பலவும் உலகு உய்யவைத்த மேன்மை பூண்ட அப்பெருமையை விளம்பிய பகுதி அது. உலகை ஆளுடையவள், சிவபிரான், வெள்ளிமால்வரைக் கயிலையில் வீற்றிருந்தருளி அருள்செய்யத், தொழுது, தெளிந்த உண்மைகளை உடைய சிவாகமத்திறன் எல்லாம் உள்ளவாறு தெரியக்கேட்டருளினாள். எண்ணில்லாத ஆகமங்களையும் அருளிய அக்கடவுள் விரும்பும் உண்மையாவது வழிபாடு ஒன்றே என்று உபதேசிக்கக் கேட்டாள் உல

கன்னே. கேட்டதை நினைத்துத் தெளிந்து அண்ணலாரை அருச்சனைபுரிய ஆதரித்து நின்றாள், பெருந்தவக் கொழுந்தாகிய பெண்ணின் நல்லாள். அந்நங்கையின் உள்நிறைந்த காதலை நோக்கினன் முந்நோக்கு நாயகன். திருவுள்ளத்தில் மகிழ்ச்சி நிறைந்தான். திருப்புன்முறுவல் தோன்றப், போகம் ஆர்த்த பூணணியுறுப்பினளை நோக்கி, 'நின்பால் அடுத்தது என்ன' என்று வினவினன். அவ் வினவிற்கு விடையாகக் கூறியது யாது? அது தான் இக்காலச் சைவர் உள்ளத்தில் ஊன்றி நிற்கத்தக்க மெய்ப்பேருண்மை.

"இங்கு நாத நீ மொழிந்த ஆகமத்தின் இயல்பினல் உனை அருச்சனைபுரியப் பொங்குகின்றது என் ஆசை என்று இறைஞ்சிப்போற்" றற்குரியள் எம்பெருமாட்டியும் எனில், ஏனையோர் சிவபூஜையை சிவாகமவிதிக்கு விரோதமாகச் செய்யத் துணியலாமோ? சிவாகமக் கிரியை எல்லாம் சிவஞானம் கிடைக்கச் செய்வன. "கிரியை எனமருவும் அவையாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்" என்பது சிவப்பிரகாசம்." கிரியாவிதிப்படி தீட்சை செய்து கொண்டு உபாயச்சரியை முதலிய நான்கும் அநுட்டித்து முடிந்தால் ஞானவிதிப்படி அநுட்டிக்கும் பேற்றை அது கூட்டுவிக்கும் என்பது கருத்து. கருணைப்பிரான் மொழிந்த ஆகமவழி பேணிப் போதுநீர்பையில் தொழுதனள்" "உம்பர்நாயகர் பூசனைக்கு அவர் தாம் உரைத்த ஆகமத்து உண்மையே தலைநின்று எம்பிராட்டி அர்ச்சனைபுரிவது"; "மெய்ப்பூசை எய்த ஆகம விதியெலாம் செய்தாள் உயிர்கள் யாவையும் ஈன்ற எம்பிராட்டி" என்னும் திருத்தொண்டர் புராணச் செம்மொழிகளை நோக்கின், ஆகமவிதி வழிபாடே ஆண்டவனுக்கு உகப்பாதல் புலப்படும். இதுகாறும் குறித்த உண்மையை உணர்ந்து, அவ்வுணர்ச்சியை அடிப்படையாகக்கொண்டு, இத்திருப்பாடலை உணர்ந்தால்தான் இதன் உண்மையுணர்ச்சி உண்டாகும், இன்றேல், தத்தமக்குத் தோன்றியதே மெய்ப்பொருள் எனக் கொள்ளல் நேர்ந்திடும்.

திருஞானசம்பந்தர் திருமுதுகுன்றத்தில் அருளிய திருப்பதிகத்திலே,

"எந்தை சிவன்என்று இரவிமுதலா இறைஞ்சுவார்
சிந்தையுள்ளே கோயில் ஆகத் திகழ்வானை
மந்திஏறி இனமா மலர்கள் பலகொண்டு
முந்தித் தொழுது வணங்கும் கோயில்
[முதுகுன்றே"

எனப் போற்றியருளிய உண்மையை இங்கு நோக்குதல் நன்றாகும்.

1. இதில், 'எந்தை இவன் என்று' என்றது, எப்பொருளும் ஆக்குவான் ஈசனே எனும் உணர்வும்"; "எல்லாம் உடைய ஈசனே இறைவன்" என்னும் அறிவும், இவரே 'யாவருக்கும் தந்தைதாய்' என்னும் உண்மையும் உணர்த்திற்று. 2. 'இரவி முதலா இறைஞ்சுவார்' என்றது சூரியபூஜை முதல் சண்டேசுரபூஜை முடிவாக உள்ள சிவபூஜாக்ரமத்தை உணர்த்திற்று. இங்கு 'இரவி' என்பது ஆகுபெயராய்ச் சூரிய பூஜையைக் குறித்தது. "இறைஞ்சுவார்" என்றதாலும் அது பெறப்படும். 'இரவி முதலா'. என்றதால் சண்டேசுரர் (பூஜை) முடிவாக என்பது கொள்ளப்படும். சூரிய பூஜாதி சண்டேசுர பூஜாந்தம் ஆகிய சிவ பூஜையைக் குறிப்பதே இங்குக் காழிவேந்தர் திருவுள்ளத்தது. 3. 'இறைஞ்சுவார் சிந்தையுள்ளே கோயிலாகத் திகழ்வான்' என்றது சிவஞானமும் சிவமும் சிறந்து பிரகாசம்புரியும் உண்மையை உணர்த்திற்று. சிவசூரிய பூஜை முதலாகச் சண்டேசுரபூஜை முடிவாகச்சிவபூஜை புரிவாரது சிந்தையே சிவ ஞானத்தை அடையத்தகும். அச்சிவஞானம் அடையாமல் சிவத்தை அடைய முடியாது. சிவப்பிரகாசமும் சிவஞானப் பிரகாசமும் உள்ள இடமே திருக்கோயில்.

'திருக்கோயில்' என்னும் பெயர் வாய்ந்த இத்திங்கள் வெளியீடும் அப்பெருமைக்கு ஓரளவு உரியதாக நிலவுகின்றதை நினைவிற் கொள்க.

'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்', 'சிந்தையே கோயில்' 'காயமே கோயில்' 'ஓங்குடலம் திருக்கோயில்' 'அகம் அலரற்கோயில் இல்லை'. எல்லாருடைய சிந்தையும் கோயிலாகாது. இறைவனை இமைப்பளவும் எண்ணுதார் சிந்தை எவ்வாறு கோயில் எனப்படும்? படாதன்றோ? அதனால், இறைஞ்சுவார் சிந்தையே கோயில் ஆகக் கொள்ளப்பெற்றது. 'வஞ்சர் சிந்தையுட் சேர்விலாதார்' ஆதலின்,

"நகமெலாம் தேயக்கையால்
நாள்மலர் தொழுதுதூவி
முகமெலாம் கண்ணீர்வார
முன்பணிந்தேத்தும் தொண்டர்
அகம் அலாற்
கோயில் இல்லை"

# தெய்வச் சேக்கிழார்

(முன் தொடர்ச்சி)

திருச்செங்காட்டங்குடியில் உருத்திரா பதியார் சந்நிதியில் சிறுத்தொண்டர் குடும்பம் தலைவணங்கி நிற்கும் காட்சியைக் காணலாம். அதைக்கண்டே சேக்கிழார் ஒரு பாடலைப் பாடுகிறார்.

கொன்றவேணியார் தாமும் பாகம்
கொண்ட குலக்கொடியும்
வென்றிநெடுவேல் மைந்தரும் தம்
விரைப் பூங்கமலச் சேவடிக்கீழ்
நின்றதொண்டர், மனைவியார்,
நீடுமகனார், தாதியார்
என்றும் பிரியாதே இறைஞ்சி இருக்க
உடன் கொண்டேகினார்.

நம்பியாண்டார் நம்பி திருவந்தாதியில் அமர்நீதி நாயனாரும் அவர் மனைவியாரும் துலாத்தட்டில் ஏறினார் என்று கூறியிருக்கிறார். சேக்கிழாரடிகள்,

தலைவயானும் என் மனைவியும்
சிறுவனும் தகுமேல்
துலையில் ஏறிடப்பெறுவதுன்
அருள் எனத்தொழுதார்

என்று அமர்நீதியார், அவர் மனைவியார், மகனார் இம்மூவரும் துலைபுக்கனர் என்று கூறுகிறார். நம்பியாண்டார் நம்பி கூறாததைக் கூற இவருக்கு என் ஆதாரம் இருந்தது. அமர்நீதி நாயனார் பதி பழையாறை. அது சேக்கிழார் பலகாலம் தங்கியிருந்த அவர் அன்புத்தலமான திருநாகேசுவரத்துக்கு அண்மையில்தான் இருக்கிறது. பழையாறைக் கோயிலை அடிக்கடி பார்த்திருக்கும் வாய்ப்பு இருந்திருக்கும். அக்கோயிலில் அமர்நீதி நாயனார் மனைவியாரின் உருவச்சிலையைப் பார்த்தால் கையில் குழந்தை இருக்கிறது. அதை இன்றும் காணலாம்.

**கல்வெட்டுக்கள்**

இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்தவர் சேக்கிழார் என்று நாம் முன்னே கண்டோம். அந்த சோழ மன்னனின் கல்வெட்டுக்கள் பல, பல கோயில்களில் இருக்கின்றன. அவைகளைக் கோயில்களில் பொறிக்கச் செய்தது சேக்கிழாரான அமைச்சர் பார்வையில் தானே நடந்திருக்க வேண்டும். அந்த வாய்ப்பு ஏற்படும்போதெல்

---

என்று கிளந்து கூறலாயிற்று. கிளவியாவது குறித்தோன் தன் கூற்றம் தெரித்து மொழிதல் ஆதல் நாயனார்க்கு நன்கு தெரியும். அதனால், கோயில் ஆதற்குரிய சிந்தையை நம் அப்பர் இரண்டரையடியில் அமைத்து விளக்கியருளினார். 'சிந்தையுள்ளே திகழ்வான்' என்றும், சிந்தையே கோயிலாகத்திகழ்வான் என்றும் அந்நுவயம் செய்துகொள்ளல் வேண்டும். 4. திகழ்தல் என்பது தொடர்ச்சியாயிராமல் விட்டுவிட்டு விளங்குதலாகும். சூரியன் முதலிய கோள்களின் ஒளி நெடுங்காலம் தொடர்ந்திலங்குசோதி, நட்சத்திரங்கள் காட்சியில் விட்டு விட்டிலங்குவன. திருக்கோவையாரில்,'உணர்ந்தார்க் குணர்வரியோன் தில்லைச்சிற்றம்பலத் தொருத்தன்' என்றதன் உரையில், ஒருகால் தன்னை உணர்ந்தவர்கட்குப் பின் உணர்தற்குக் கருவியாகிய சித்தசுத்தியும் ஒடுங்குதலான் மீட்டு உணர்வரியோன்" என்றும் "தவத்தானும் தியானத்தானும் எல்லாப் பொருள்களையும் உணர்ந்தவர்க்கும் (தன் இயல்பை) உணர்வரியோன் எனினும் அமையும்" என்றும் உரைத்த பேராசிரிய வசனத்தை அறிந்தால், 'திகழ்தல்' என்றதன் உண்மை இனிது விளங்கும். இறைஞ்சுவார் சிந்தைக்கு இறைவன் குணம் வெளிப்படும் ஆதலின், அதற்கேற்ற பொருளும் அப்பேராசிரிய வசனத்தில் உளது. அஃதாவது:— "உணர்ந்தார்க்குக் குணந்தான் வெளிப்பட்ட என இயைத்துரைப்பினும் அமையும்" என்பது.

மாக்கள் சிவபூஜை திருவருள் பெறுவதே அரிதாயிருக்க, அப்பழமலையில் மந்திகளும் சிவபூஜை செய்த உண்மையை இத் திருப்பாடல் உணர்த்திற்று.

(தொடரும்)

லாம் கோயில்களில் முன்னால் இருந்த கல்லெழுத்துக்களையும் அவர் கூர்ந்து நோக்கி நன்கு ஆராய்ந்து வைத்தார் என்பதில் யாதொரு ஐயமுமில்லை. அதற்கு நான்கு சான்றுகள் கூறுகிறேன். தஞ்சைப் பெரிய கோயிலைக்கட்டியவன் முதல் இராஜராஜன். அந்த கோயில் கல்வெட்டொன்று 'தத்தா நமர் என்ற மிலாடுடையார்' என்ற மெய்ப் பொருள் நாயனாரைக் குறிக்கின்றது. அவர் புராணத்தில் சேக்கிழார் 'தத்தாநமர் எனத் தடுத்து வீழ்ந்தார்' எனக்கல்வெட்டுச் சொற் களை அப்படியே பெய்தமைத்திருக்கிறார்.

'வாயிற் கடைமணி நடுநா நடுங்க ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத்தான் அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித் தோன்' என்று சிலப்பதிகாரத்தில் கறவைக்கு முறை செய்த மனுச்சோழன் பெருமையைக் கூறுகிறது. இந்த செய்தியைத் திருவாரூர்க் கோயில் கல்வெட்டு ஒன்று சிறிதுவிரிவாகக் கூறுகிறது. கன்று தேர்ச் சக்கரத்தில் கிடப்பதும், பசுமணி மண்டபத்தில் நிற்பதும் அற்புதச் சிற்பமாக இன்றும் திருவாரூரில் காண்கிறோம். பசுவின் கண் களினின்றும் நீர் சொட்டுவதை அப்படியே வடித்தமைத்திருக்கிறான் சிற்பி. அவனை நாம் திசை நோக்கித்தொழ வேண்டும். கல் வெட்டையும், கற்சிற்பத்தையும் நன்கு கண்டறிந்த சேக்கிழார் திருநகரச் சிறப்பில் மனுச்சோழன் வரலாற்றை விரிவாகக் கூறு கிறார். 'தன் உயிர்க்கன்று வீயத்தளர்ந்த ஆத் தரியாதாகி முன் நெருப்புயிர்த்து விம்மிமுகத் திலிகண்ணீர் வார' என்று அந்தகாட்சியை நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார். அதன் உண்மையைத் திருவாரூர்க் கற்சிற்பங் களைக்கண்டால் உணரலாம்.

மகேந்திரவர்மன் என்ற பல்லவமன்னன் திருச்சிராப்பள்ளி மலையில் குடைகோயில் ஒன்றமைத்து அதில் இலிங்கத்தையும் தன் உருவத்தையும் அமைத்தான். இவன் அப் பால் சமண சமயத்தைவிட்டுச் சைவ சமயத் தைச் சார்ந்தான். அவனுடைய வடமொழிக் கல்வெட்டு ஒன்று அந்த மலைக்குடை கோயி லில் இருக்கிறது. அது,

> 'குணபர நாமாநி ராஜன்யநேந
> லிங்கேந லிங்கினி ஞானம்
> ப்ரததாஞ்சிராய லோகே விபட்ச
> வ்ருத்தேஹ் பராப்ருத்தம்'

என்பது. குணபர அரசன்லிங்கத்தைப் பூசை செய்வோனாதலால் இலிங்கபூசைக்கு எதிர் முறையிலுள்ள விபரீத பட்சத்திலிருந்து திரும்பி வந்த இவனது ஞானம் இலிங்கத் தால் உலகமெல்லாம் பரவட்டும் என்பது இதன் பொருள். அப்பர் பெருமான் அப் பூதியடிகளிடம் "பிறதுறையினின்றேற அருளுபெருஞ் சூலையினால் ஆட்கொள்ள அடைந்துய்ந்த தெருளு முணர்வில்லாத சிறுமையேன் யான்" என்று அறிமுகப் படுத்திக்கொள்கிறார். 'பிறதுறையினின்றேற' என்பது விபட்சவிருத்தி என்ற கல்வெட்டுப் பொருளைத் தொனிக்க நிற்கிறது என்று ஒருவாறு கூறுவதில் தவறில்லை.

காஞ்சி கைலாசநாதர் கோயில் இராஜ சிம்மன் என்ற பல்லவ மன்னனால் கட்டப் பெற்றது. இந்த கோயிலிலுள்ள கல்வெட் டொன்றில்"துஷ்யந்தன் முதலானோர் அசரீரி வாக்குகளைக் கேட்டது சரியல்ல; ஆனால் நல்லோர் விலகியிருக்கும் கலியிலே ஸ்ரீபரன் அசரீரி கேட்டது ஆச்சரியத்தை விளைவிக்கக் கூடியது" என்று கூறப்பட்டிருக்கிறது. ஸ்ரீபரன் என்பது இராஜசிம்மனுக்கு ஒரு பெயர். இவன் நின்றவூர்ப்பூசலார் நாயனார் காலத்தவன் என்றும், அவர் கட்டிய மனக் கோயிலில் இறைவன் புகப்போவதாக அவன் கனவில் கண்டான், என்று சேக்கிழார் கூறி யிருப்பது அசரீரி சொன்னதாகக் கல் வெட்டில் கூறியிருப்பதாக இருக்கவேண்டு மென்று வரலாற்றுப் பேராசிரியரான காலஞ் சென்ற பி.டி. சீனிவாச அய்யங்கார் கருது கின்றார்.

## வரலாற்றுண்மைகள்

பல வரலாற்றுண்மைகளைச் சேக்கி ழார் பெரிய புராணத்தில் காண்கிறோம். அந்தப் புராணத்தை அவர் பாடியிராவிட் டால் பல மன்னர்கள், அடியார்கள் இவர் களின் காலம், இடம், செயல் இவைகள் தெரியாமலே மறைந்து போயிருக்கக்கூடும். கோச்செங்கட்சோழர் 'எண்டோள் ஈசற்கு எழுபது மாடங்கள்'அமைத்தது,சிறுத்தொண் டர் நரசிங்கவர்மன் சேனாதிபதியாய் 'மன்ன வர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவி தொன்னகரம் துகளாக்கியது,' மகேந்திர வர்மன் சமண சமயத்திலிருந்து சைவ சமயத் திற்கு வந்தபின் குணபரேசுவரம் என்ற

கோயில் கட்டியது, ஐயடிகள் காடவர்கோன் நரசிங்கமுனையரையர், கழற்சிங்கன் முதலியோரைப்பற்றிய குறிப்புக்களெல்லாம் திருத்தொண்டர் புராணத்தில் காண்கிறோம்.

### பல்கலைக்களஞ்சியம்

'எல்லாப் பொருளும் இதன்பாலுள இதில் இல்லாத எப்பொருளும் இல்லையால்' என்றபடி சேக்கிழார் நூலில் எல்லாக்கலைகளைப்பற்றியும் ஆங்காங்கே கூறப்பட்டிருக்கிறது.

### இசை

இசைக்கலை பற்றிச் சேக்கிழார் பல குறிப்புக்கள் சொல்லியிருக்கிறார். 'பித்தா பிறை சூடி' என்ற பதிகத்தைச் சுந்தரர் பாடியதைச் சொல்லவந்த சேக்கிழார்,

கொத்தார் மலர்க்குழலா
 ளொருகூறுாய் அடியவர்பால்
மெய்த்தாயினும் இனியானை
 அவ்வியன் நாவலர்பெருமான்
பித்தாபிறை சூடி எனப்
 பெரிதாம் திருப்பதிகம்
இத்தாரணி முதலாம்
 உலகெல்லாம் உய எடுத்தார்

என்று பாடுகிறார். சுந்தரர் பாடல் பண்-இந்தளத்தில் அமைந்தது. சேக்கிழார் பாடிய இந்த பாடலும் அதே பண்ணில் அமைந்துள்ளது. இவ்வகைப் பாடல்கள் இன்னும் பலவுள. விரிவஞ்சி விடுக்கிறேன். ஆனாயர் புராணத்தில் புல்லாங்குழலுக்கு மூங்கிலைத் தேர்ந்தெடுக்கும் முறை முதலியன காண்கிறோம்'

### நடனம்

திருப்புகலூரில் உழவாரத் தொண்டு செய்து கொண்டிருந்தபோது அவர்முன் அரம்பையர் ஆடிப்பாடியதை அழகாகக் கூறுகிறார். நடனக்கலையை நன்குணர்ந்தவர் என்று அதனால் தெரிகிறது.

### அரசியல்

அரசியலைப்பற்றி அமைச்சராயிருந்த சேக்கிழார்க்குத் தெரியாதனவும் உண்டோ? அரசனுக்கு ஐந்து வகைப்பகைகள் உண்டு என்பதை 'மாநிலம் காவலனாவான்' என்ற பாடலில் கூறியிருக்கிறார். சுந்தரரைச் சிவபெருமான் தடுத்தாட் கொண்டபோது ஆட்சி, ஆவணம், காட்சி என்று மூன்றுவகைச் சாட்சியங்களைக் கூறுகிறார். ஆட்சி - Custom or oral evidence, ஆவணம்—Documentary Evidence, காட்சி—Eye witness or circumstantial evidence என்பது இக்காலத்து சட்டமன்றங்களிலும் பேசப்படுகிறது. இப்படி இறைவனார் வழக்கிட்ட இடம் திருவெண்ணெய் நல்லூர்க் கோயிலில் வழக்குவென்ற திருவம்பலம் என்ற பெயருடன் இன்றும் நின்று காட்சியளிக்கிறது.

### செய்யுள் அழகு

இனி, சேக்கிழாரின் செய்யுள் அழகு, உவமைநயம், இவைகளைப்பற்றி நிறையக் கூறலாம்.

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினி லோங்கியஞான்ம்
உவமை யிலாக்கலைஞானம் உணர்வரிய
 மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார்
 அந்நிலையில்.

இன்னும் 'ஐந்து பேரறிவும்' என்ற பாடல், 'சென்ற காலத்தின்' என்ற பாடல் இவை போன்ற பல என்றும் நாம் கேட்டுக்கொண்டிருப்பவை.

### எண்ணிக்கை அழகு

வேடர் வாழ்க்கை, நால்வகை நிலவர்ணனை, சாமுத்திரிகா லட்சணம், ஆயுதப் பயிற்சி இன்னும் பலவற்றைப்பற்றியும் அவருடைய நூலில் காணலாம். எந்தெந்தகண்கொண்டு நோக்கினாலும் அந்தந்த கண்களுக்குச் சில உண்மைகள் தோன்றும். அவருடைய பாடல்களின் எண்ணிக்கையையும் எழுத்தெண்ணிக்கையும் சிலர் ஆராய்ந்து பார்த்து முடிபுகள் கூறியிருக்கின்றனர். 'உலகெலாம்' என்ற பாட்டில் 63 எழுத்துக்கள் உள்ளன. அதில் ஒன்பது உகரம் இருப்பது ஒன்பது தொகையடியாரைக் குறிக்கும் என்பர். கண்ணப்பர் புராணத்தில் 94-ஆம் பாட்டு தீர்த்தப் பெருமை, 95தலப்பெருமை, 96 மூர்த்திப் பெருமையைக் கூறப்பட்டிருப்பது இறைவன் 96 தத்துவங்களையும் கடந்தவன் என்பதைக் காட்டும். முருக நாயனார்-ஆறுமுகக் கடவுள் பெயருடையவர். அவர் புராணம் ஆறுசீர்ப் பாடல்களால் அமைந்தது, அவர் பயின்றது ஆறங்கம்; அவர் கட்டியவை கோவை, இண்டை, தாமம், கண்ணி; பிணையல், மாலை என்ற வகையானவை. அவ

ருடைய ஊர் திருப்புகலூர்ப் பாடலில்கூட 'குழும்' என்று ஆறு தடவையுள்ளது. உருத்திரபசுபதி நாயனுர்—எண்ணியது ஐந் தெழுத்து. அவருடைய புராணப் பாடல் களும் ஐந்து சீருடையவை. திருமூலர்—'ஆக மப் பொருளைத்தமிழ் வகுப்ப வந்தவர்'. ஆக மங்கள் இருபத்தெட்டு; அவர் புராணத்தில் 28 பாடல்களேயுள்ளன. திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தில் 51 பாடல்கள். அவை, அகரமுதல ஐம்பத்தொரு அட்சரத் தைக் குறிக்கும். பத்தராய்ப்பணிவார் புரா ணத்தில் 8 பாடல்கள். அவை அடியார் பக்தி, சிவ பூஜை கண்டு மகிழ்தல், சிவார்ச் சனை, சிவபுராணம் கேட்டல், பரவசமாதல், சிவனடிமறவாமை, பொய் வேடமின்மை என்ற எட்டுவகைப் பக்தியைக் குறிப்பன.

## அறிந்தவரை எழுதல்

சேக்கிழார் பெருமான் திருவருள் துணை கொண்டு, நூலை எழுதியதோடு, கண்ணுல் பார்த்தது, காதால் கேட்டது இவைகளை ஆராய்ந்து அறிந்த வரையில் மாத்திரம்தான் எழுதினுர். அதனுல்தான் புராணங்களில் பாடல் எண்ணிக்கை ஏறத்தாழ இருக்கிறது, திருநாவுக்கரசர் புராணத்தை 'அடியனேன் ஆதரவால் ஆண்ட அரசின் சரிதப்படியை யான் அறிந்தபடி பகர்ந்தேன்' என்கிருர். திருஞானசம்பந்தர் வரலாற்றில் 'அருந் தமிழாகரர் சரிதை அடியேனுக்கவர்பாதம் தரும்பரிசால் அறிந்தபடி துதிசெய்தேன்' என்று கூறுகிருர். வெள்ளானைச் சருக்கத் தில் 'தம்பிரான் தோழர் காலை மலர்ச்செங்கமலக் கண் கழறிற்றறிவாருடன்கூட ஆலமுண் டார் திருக்கயிலை அணைந்தறிந்தபடி யுரைப் பாம்' என்பதைப் பார்க்கிருேம். 'நரசிங்க முனையர் திறம் நாம் அறிந்தபடி யுரைப்பாம்' என்று கூறுவதையும் காண்கிருேம்.

## நன்றி மறவாமை

அருண்மொழித் தேவர் இளைஞராக இருக்கும்போதே அவர் மிகவும் நன்றியுள் ளம் படைத்தவர் என்பதை அவர் எழுதி யனுப்பிய மூன்றில் இரண்டு திருக்குறட் பாடல்களால் அறிகிருேம். தீதிலாத் திருத் தொண்டத் தொகையைத்தந்த சுந்தரரை காவியத்தலைவர் ஆக்கினுர். நாவலர்கோன் திருவாரூரில் பலகாலம் தங்கியதால் அந்த நகரையே திருநகரச்சிறப்பு கூறுவதற்கு எடுத்துக்கொண்டார். புராணம் பாடக் கேட்டுக்கொண்ட இரண்டாம் குலோத்துங்க னை அனபாயனை அவருடைய நூலில்பத்து இடங்களில் சிறப்பித்து நன்றி செலுத்து கிருர். அவன் ஆண்ட சோழநாட்டையும் தொண்டை நாட்டாரான இவர் புகழ்ந்து பேசுகிருர்.

## பொது

பொதுவாகச் சிலவற்றைக்கூறி கட் டுரையை முடித்துக்கொள்கிறேன். திருக்க ளிற்றுப்படியாரில் வல்வினையாளர்கள், மெல் வினையாளர்கள் என்று இருவகையினரைக் கூறப்பட்டிருக்கிறது. நம்மையெல்லாம் மெல்வினையாளர்கள் என்று கூறிவிடலாம். திருத்தொண்டர்கள் வல்வினையாளர்கள்; அதிதீவிர பக்குவிகள். தளர்ந்து கீழேவிழுந் தால் மாவடு, உணவு சிந்தியது தெரிந்தும் ஊட்டி அறுத்துக்கொள்ள முற்பட்டார் அரி வாட்டாயர். அடியார்கள் சில குறிக்கோள் களையும் கொள்கைகளையும் உடையவரா யிருந்தார்கள். அதற்கு எவ்விதமான கடுஞ் சோதனை வந்தபோதும் பின்னடையவில்லை. இறைவனருளில் ஒன்றிய மனத்தினராய் ஒருமையுணர்வுடன் தாம் கொண்ட கொள் கையில் உறைத்து நின்றுர்கள். அவர்கள் செய்த செயற்கருஞ் செயல்களை நாம் செய்ய வேண்டும் என்று காட்டவில்லை. அப்படி அவர்கள் நினைக்கவுமில்லை. நம்முடைய குறிக்கோளில் உறைப்பாக நாம் இருக்க வேண்டும் என்பதே நாம் தெரிந்துகொள்ள வேண்டியது. உலகப்பொருள்கள் யாவும் கடவுளின் உடைமை. நாம் அவனுக்கு அடிமை. ஆதலால் நம்முடையதென்பது ஒன்றும் கிடையாது. நாம் கேட்காமலே கொடுக்கவேண்டும். நமக்குக் கொடுக்கக்கூட உரிமை இல்லை என்றும்கூடச் சொல்லிவிட லாம். இயற்பகையார், சிறுத்தொண்டர் இவர்கள் வரலாற்றில் இந்தத்தத்துவம் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது.

இறைவன் அடியார்களின் அன்பை சோதிப்பான். அவனுக்குத் தெரியாதா என்ன? ஏன் சோதனை செய்யவேண்டும். அவர்களின் அன்பின் திறத்தை உலகறியச் செய்யவேண்டும் என்ற ஒரே காரணந்தான். குத்து, வெட்டு என்று முழக்கி, காட்டில் வேட்டையாடி வனவிலங்குகளைக்கொன்ற கண்ணப்பரைத் தன் இரண்டு கண்களையும்

பிடுங்கும்வரை சோதனை செய்தார். சிறுத்தொண்டர் சேனாதிபதியாகிச் சென்று போரில் எவ்வளவோ மக்களைக்கொன்றார். அவரை இறைவன் செய்ததும் கடுமையான சோதனை. தன் பிள்ளையைத் தாய்பிடிக்க தானே அரியச்செய்தார். இறைவன் சிறுத்தொண்டர் அன்பை உலகத்திற்குக் காட்டச் சித்திரவதை செய்வதுபோன்று எழுதிக்காட்டும் திறமையை நாம் அறிந்துகொள்ளவேண்டியது. திருச்செங்காட்டங்குடிக்கு சிறுத்தொண்டர் வீட்டுக்கு அடியவர் வேடத்தில் வந்தார். அவர் இல்லாததால் வீட்டுக்குள் வரமாட்டோம் என்று போய்விடுகிறார். சிறுத்தொண்டர் வந்தபோது நீரோ பெரிய சிறுத்தொண்டர் என்கிறார். வரமாட்டோம் நாம் கேட்பது நீர் கொடுக்க முடியாது என்று மிரட்டுகிறார். எதுவாகிலும் கொடுப்போம் என்ற பரஞ்சோதியாரைப்பார்த்து பசுவை வீழ்த்திச் சாப்பிடுவோம் என்றார். சரியென்ற அளவில் ஆறுமாதத்திற்கொரு முறையுண்பது அந்தநாள் இன்றுதான் என்கிறார். பிறகு நரப்பசுவாக இருக்கவேண்டும். தாய் பிடிக்கத் தந்தையரிந்து சமைத்துப் படைக்கவேண்டும். சமைத்துப் படைக்கப் போகையில் தலைக்கறிவேண்டும் என்கிறார். முன் எச்சரிக்கையாக இருந்த சந்தன நங்கை என்னும் தாதியார் அதுவும் சமைத்துவைத்திருப்பதைச் சொல்லிப் படைத்தார். உடன் உண்ண அடியார் எவராயினும் வேண்டும் என்கிறார். அலைந்து முன்னால் அடியார் எவரையும் காணாததால் தானே உட்கார்ந்து உணவுண்ண இசைந்தார். வடநாட்டு அடியார் மிகப் பசித்திருக்கிறாரே யென்று சிறுத்தொண்டர் சாப்பிடத்தொடங்குகிறார். "ஆறு மாதத்திற்கு ஒரு முறை நாம் உண்போம்; அன்றாடம் சாப்பிடும் உமக்கென்ன அவசரம்' என்று கூறி அவரைத் தடுக்கிறார். பின்னர் குழந்தைகள் இல்லையோவென 'அவன் இப்போது உதவான்' என்று சொல்கிறார் சிறுத்தொண்டர். இருந்தால் கூப்பிடு என்கிறார் வந்த அடியார். தொண்டரும் மனைவியாரும் வெளிச்செல்ல, 'செல்வமகனே! சீராளா! ஐயர் அழைக்கிறார்; வா' என்று அம்மையார் விளிக்கிறார். சீராளதேவர் ஓடிவருகிறார். உள்ளே வந்து பார்த்தால் அடியாரையும் காணவில்லை; படைத்த உணவும் மறைந்து போயிற்று. வென்றி நெடுவேல் மைந்தருடன் உமையம்மையுடன் இறைவன் காட்சி கொடுக்கிறார்.

இதுகாறும் சேக்கிழார் புராணத்தின் சிறப்பியல்கள் பலவற்றைப் பார்த்தோம். அது, இலக்கிய ஊற்று, காவியச்சோலை, ஓவியச்சாலை, வரலாற்றுக்கருவூலம், அன்புக்கடல், பக்திப்பெருவெள்ளம், கற்பனைக் களஞ்சியம், பல்கலைக்கூடம், இன்னும் பலவாறெல்லாம் சொல்லலாம்.

**மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்'**

---

காஞ்சிபுரம்—கயிலாசநாதர் கோயிலில் மகாசிவராத்திரி-இலட்சதீப-இலட்சார்ச்சனை மகோற்சவம் 2—3—62 முதல் 4—3—62 வரை நடைபெற்றது.

மதுரை—ஆயிரக்கால் மண்டபத்தில் மதுரைநகர் சைவசித்தாந்த சபையின் ஐந்தாவது மாநாடு 2, 3, 4—3—62 தேதிகளில் நடைபெற்றது.

கல்லங்குறிச்சி—கலியுகவரதராஜப்பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 13—4—62 முதல் 22—4—62 வரை நடைபெறும்.

லால்குடி—சப்தரிஷீசுவர சுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 11—3—62 முதல் 28—3—62 வரை நடைபெற்றது.

சென்னை—அரங்கநாத சுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 11—3—62 முதல் 22—3—62 வரை நடைபெற்றது.

காஞ்சிபுரம்—ஏகாம்பரநாத சுவாமி கோயிலில் பங்குனி உத்திரத் திருக்கல்யாணப் பெருவிழா 10—3—62 முதல் 24—3—62 வரை நடைபெற்றது.

பெரம்பலூர்—மதனகோபாலசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 11—3—62 முதல் 24—3—62 வரை நடைபெற்றது.

# ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

[திரு. K. பட்சிராஜன், B.A., B.L. திருநெல்வேலி]

## ஸ்ரீமணக்கால் நம்பிகள் வைபவம்

முந்தைய கட்டுரையில் ஸ்ரீ உய்யக் கொண்டார் திருவடிகளைப் பற்றி எவ்வாறு மணக்கால்நம்பிகள் உய்யக் கொண்டாரின் தலைசிறந்த சீடராய்த் திகழ்ந்தார் என்பதையும், உய்யக்கொண்டார் திருநாடலங்கரிக்கையில் அவர் யாது கூறி இச்சிறந்த தர்சனத்தை ஸ்ரீ மணக்கால்நம்பியிடம் ஒப்புவித்துச் சென்ருர் என்பதையும் பார்த்தோம். ஸ்ரீமணக்கால்நம்பிகள் வைபவமே தனித்தியங்காது முன்னை உய்யக்கொண்டார் வரலாற்றுடனும் பின் வரவிக்கும் ஸ்ரீ யமுனைத் துறைவர் வாழ்க்கையுடனும் கலந்து பிணைந்த தொன்ருகும். எனவே ஸ்ரீ மணக்கால்நம்பி சரிதத்தோடு ஸ்ரீயமுனைத்துறைவர் (ஸ்ரீ ஆளவந்தார்) சரிதமும் சேர்த்தே கூறவேண்டி வரும். அக்கலப்புச் சரிதத்தினின்றும் ஸ்ரீ மணக்கால்நம்பிகளின் வைபவத்தைத் தனித்து ஸ்ரீவைஷ்ணவர்கள் ரஸித்துக்கொள்வார்களாக.

ஸ்ரீமணக்கால்நம்பி கோயிலுக்கருகே உள்ள மணக்கால் என்ற அக்ரஹாரத்தில் ஒரு விரோதிகிருது வருஷம் மாசிமாதம் மகநக்ஷத்திரமும் சுக்கில பக்க சதுர்த்தசியும், திங்கட் கிழமையும் கூடிய நன்னுளில் அவதரித்தார். இவர் குமுதாம்சமாகப் பிறந்தார் என்று குருபரம்பரை கூறும். இவரது இளமைக்கால வாழ்வு முதலியவற்றை அறிந்து கொள்ளக்கூடிய குறிப்புகள் ஒன்று இருப்பதாகக் காணும். குருபரம்பரைப்படி அவர் ஸ்ரீஉய்யக்கொண்டார் ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்தது முதல் உள்ள அவர் சரிதைதான் நமக்கு இப்போது கிடைத்துளது. ஒரளவு அதுவும் நல்லதென்றே கொள்வதும் சிறப்புடைத்துத்தான். குருபரம்பரைச் சரிதங்களில் வரும் ஆசாரியர்களின் வைஷ்ணவ வாழ்வுதானே ஸ்ரீவைஷ்ணவர்க்கு முக்கியமானது. அப்படி நோக்கினல் ஸ்ரீமணக்கால்நம்பி ஸ்ரீ உய்யக்கொண்டார் திருவடி ஸம்பந்தம் பெற்று அவர் சீடராய் வாழத் தொடங்கிய காலமே அவருடைய வைஷ்ணவ வாழ்க்கை தொடங்குகிறது என்று நாம் கொள்ளலாமல்லவா? இவர் ஜன்ம வருஷம் கலி 3933 என்று குருபரம்பரை கூறும். ஆனல் இதுசரிதாஞ என்பது ஐயத்துக்கிடமானது. அவர் எவ்வாண்டு பிறந்திருப்பினும் அவர் வைணவப் பிறப்பிலிருந்து அவர் சரிதை நமக்கு முழுதும் கிடைத்துள்ள நிலையில் நாம் திருப்தியடைவோமாக.

இவரது பெயர் ஸ்ரீராமமிசிரர் என்றும் கூறப்படும். நல்ல உத்தமமான கல்யாண குணங்கள் பொருந்தியிருந்தவராக இவர் வாழ்ந்திருக்கவேண்டும், அதேபோல் வடிவும் நல்ல வசீகரமானதாக இருந்திருக்கவேண்டும் என்பதை 'நம்பி' என்று அவர் அழைக்கப்பட்டதினின்றும் நாம் தெரியலாம். சிறு வயதில் முறையாகக் கற்று நல்ல தேர்ச்சியுடையராயிருந்திருக்கவேண்டும் என்பது உய்யக்கொண்டார் இவரைத் தன் முதல் சீடராகக் கொண்டமையினின்று பெறப்படும் ஸ்ரீஉய்யக்கொண்டார் சீடராய் இவர் வாழ்ந்த காலத்தே இவரது ஆசார்யபக்தியின் எல்லை எத்துணைத்து என்பதை உய்யக்கொண்டார் வைபவத்திலே நாம் பார்த்தோம், அதன் விளைவாகவே உய்யக்கொண்டார் இவ்வாழ்க்கையை விடும் காலையில் தமக்குப்பின் தம் ஆசார்யஸ்தானத்தை ஸ்ரீமணக்கால் நம்பியிடம் ஒப்படைத்து தம் ஆசார்யர் தமக்கு மறைவிலே கூறிப் போந்த பணியையும் நம்பிகளிடம் கூறிச் சென்ருர். ஸ்ரீஉய்யக்கொண்டார் திருநாடலங்கரிக்கவே ஸ்ரீமணக்கால்நம்பிகள் ஸ்ரீவைஷ்ணவ தர்சனப்பிரசாரத்தை ஏற்று நடத்திக் கொண்டிருந்தார். தம் ஆசாரியர் தம்மிடம் மறைவில் ஒப்புவித்த பணியை நிறைவேற்றும் பாக்கியம் தமக்குக் கிட்டவேணுமே என்ற கவலை நம்பிகளுக்கு மிகுதியும் இருந்தது.

### ஸ்ரீஆளவந்தார் என்ற யமுனைத் துறைவர் அவதாரம்

இப்படி நாள் பலகழிய ஒரு நாள் ஸ்ரீ நாதமுனிகளின் குமாரரான ஈச்வர முனி

களுக்கு ஒருதாது வருஷம் ஆடிமாதம் நிறை மதிநாள், புதன் கிழமை உத்திராட நக்ஷத்திரம் கூடிய நன்னாளில் ஓர் குமாரர் அவதரித்தார். இந்நற்செய்தியை ஈச்வரமுனிகள் ஸ்ரீமணக்கால்நம்பிகளுக்குச் சொல்லியனுப்பினார். நம்பிகளும் மிகமகிழ்ச்சியுற்று, தம் பணி நிறைவேற்றும் காலம் அண்மையிலுள்ளது என்ற உவகையோடு வீரநாராயணம் எழுந்தருளினார். அங்கு அவதரித்துள்ள குழந்தைக்கு செய்யவேண்டிய ஸம்ஸ்காரங்கள் அனைத்தையும் ஈச்வரமுனிகளைக் கொண்டு செய்வித்துப் பன்னிரண்டா நாளிலே அம்மகவை விஷ்ணுசூக்தங்களாலே நீராட்டி அதன் வலத்திருச்செவியிலே மந்திர ரத்தினமான திருவெட்டெழுத்தையும், த்வயத்தையும் ஓதி, தம் வலக்கரத்தை அதன் தலைமீது வைத்து துவாதஸாக்ஷர மந்திரத்தை அநேக உரு ஓதி, பின்தம் ஆசாரியரிடம் ஸ்ரீமந்நாத முனிகள் நியமித்திருந்தபடி குழந்தைக்கு "யமுனைத்துறைவர்" என்று திருநாமம் சூட்டிக் குழந்தையைத் தம் அழகிய திருக்கண்களால் குளிர நோக்கித் தம் ஆசாரியரான ஸ்ரீஉய்யக்கொண்டாரையும், பரமாசாரியரான ஸ்ரீமந்நாத முனிகளையும் மனத்திலே தியானித்துக் குழந்தையை ஆசீர்வதித்தருளி, ஈச்வரமுனிகள் வேண்ட அங்கேயே சில நாள் தங்கிப்பின் தம்மிடம் நோக்கி எழுந்தருளினார்.

இங்ஙனம் ஆசிர்வாதம் பெற்ற யமுனைத்துறைவரும் கண்டார் வியக்கத்தக்க தெய்வ ஒளி வீசி வளர்ந்து வந்தார். அவருக்கு ஐந்து வயதானவாறே ஈச்வர முனிகள் சாத்திரங்களில் கூறியபடி அவருக்கு உபநயனம் முதலிய ஸம்ஸ்காரங்களைக் குறைவற நிறைவேற்றி, எழுத்தறிவித்துப்பின் வேதாத்யாயனம் பண்ணுவித்தார். யமுனைத்துறைவரோடு பிற சிறுவர்களும் சேர்ந்து ஈச்வர முனிகளிடம் வேதாத்யயனம் செய்தார்கள். அத்யயனம் செய்யுங்கால் ஓதுபவர் சொல்ல படிப்பவர்கள் அதை இருமுறை கூறுதலும், இப்படியே பலதடவல் சொல்லி உருவேற்றிக் கொள்ளலும் மரபு. இது சந்தை எனப்படும். ஆனால் யமுனைத்துறைவர் ஒருக்கால் மட்டும் தான் கேட்டதை ஓதினவர் இரண்டாமுறை ஓதவில்லை. தந்தையார் இதைக் கவனித்து 'ஏனப்பா சந்தையில் இரண்டு தரம் மற்றவர்களைப் போல் நீயும் சொல்ல வேண்டாமோ?' என்று கேட்டார். யமுனைத்துறைவர் அது தான் ஒருதரம் சொன்னவுடன் உருவாய் விட்டதே. ஏன் இவர்கள் மறுமுறை கூறுகின்றார்கள் என்று தெரியவில்லை'' என்று பதிலுரைத்தார். தந்தையார் "இது அபூர்வப்பிறவி இவரை இவர்களோடு சேர்த்து ஓதுவித்தல் தவறு என்று உணர்ந்து அவருக்குத் தனியாக எல்லா வேதங்களையும் அவற்றின் அங்க உபாங்கங்களையும் ஓதுவித்தார். யமுனைத்துறைவரும் ஒருவருட காலத்துக்குள் அவற்றை எல்லாம் கற்று வல்லவரானார். அவருக்கு ஆறுவயதானதும் ஈசவர முனிகள் அவரை மஹாபாஷ்யபட்டர் என்பவரிடம் கொண்டு சேர்த்து சாஸ்திர அர்த்தங்கள் பிறநூல்கள் முதலிய கற்க ஏற்பாடு செய்தார். ஸ்ரீயமுனைத்துறைவரும் அனைத்தையும் ஒருமுறை கேட்டவாறே கற்று எல்லாச் சாத்திரங்களிலும் மிக்கவல்லுநராய் தன்குருவுடனே வாழ்ந்துவந்தார். குருவும் இவர் திறமையை வியந்து இவரைத் தம் விசேஷ அன்புக்குப் பாத்திரராய்ப் பேணிவந்தார்.

[இனி அடுத்து வரும் சம்பவங்களோடு தொடர்புடைய அரசன் சோழன் என்று ஒரு குருபரம்பரைப் பிரதியும், திவ்ய சூரி சரிதம் என்ற நூலும் கூறும். ஆனால் மற்றொரு குருபரம்பரைப் பிரதி அம்மன்னன் பாண்டியன் என்று கூறும். இம் மூன்றும் சில நிகழ்ச்சிகளைச் சில சுருக்கமாகவும், சில விரிவாகவும் கூறுவதோடு மட்டுமன்றி நிகழ்ச்சிகளிலேயே சிற்சில வேறுபாடுகள் காண்கின்றன. எல்லாம் ரஸம் மிக்கவை அவற்றும் எது சரியானது என்ற ஆராய்ச்சியுள்புகாமல் எல்லாவற்றையும் கொண்டு ஒன்று பொருத்தி இங்கே தரப்படுகிறது. அதனால் அரசனைப் பாண்டியன் என்றோ சோழன் என்றோ குறிப்பிடாமல் அரசன் என்று மட்டும் குறிக்கப்படுகிறது]

இங்ஙனம் யமுனைத்துறைவர் குருவுடன் வாசம் செய்துவரும் நாட்டை ஆண்ட அரசன் சபையிலே வித்வத்ஜன கோலாகன் என்ற பெயருடைய வித்வான் ஒருவர் இருந்தார். அவரை ஆக்கியாழ்வான் என்றும் அழைப்பர் அவ்வித்வான் நன்கு கற்றவனாயினும், கற்றவர்க்குரிய அடக்கம் என்பதை அறியாதவர். தாம்தான் இவ்வுலகில் அதிகம் கற்றவர்

என்ற செருக்கு அவரிடம் மிகுதியும் இருந்தது. அவ்வரச அவையில் உள்ள மற்ற பண்டிதர்கள் யாவரும் அவரிடம் மிகுந்த பயமுடையவர்களாய் வாழ்ந்து வந்தனர். அவர் பாண்டித்தியத்திற்கு அரசனும் ஓரளவு அஞ்சியே வாழ்ந்து வந்தான். அரசன் தன் கையாளாய் விட்டான் என உணர்ந்த ஆக்கியாழ்வான் பண்டித உலகுக்குத் தனக்குத்தானே முடிசூடிக்கொண்டு மற்றை பண்டிதர்கள் யாவரும் தம் தலைமையை ஒப்பியாகவேண்டு மென்றும், அவ்விதம் அவர்கள் ஒப்புக் கொண்டமைக்கு அடையாளமாக வருடந்தோறும் ஒவ்வொரு வித்துவானும் தமக்கு ஒரு குறிப்பிட்ட தொகை கப்பமாகக் கட்டவேண்டுமென்றும் ஒரு உத்தர விட்டிருந்தார். பண்டிதர்கள் பச்சோந்தியின் நிறங்களில் மயங்கித் தம் கண்களை அதனிடம் பறிகொடுக்கும் மயில்கள் போல ஆக்கியாழ்வானுடைய தருக்க வாதங்களில் மயங்கிச் செயலறியாது தம்முடைய மானமனைத்தையும் அவரிடம் பறிகொடுத்து நின்றனர். இவ்விதம் அவ்வாக்கியாழ்வானுக்குப் பணிந்து கப்பம் செலுத்தத் தவறிய பண்டிதர்களை அவர் அரசனுனை மூலம் அரசவைக்கு வரச் செய்து பலரறிய மானப்பங்கம் செய்வது வழக்கமாகிவிட்டது. யமுனைத்துறைவருக்கு ஆசிரியரான மஹா பாஷ்யபட்டரும் ஆக்கியாழ்வானுக்கஞ்சி அவருக்கு இறையிறுத்து வந்தவரே. ஆனல் அவ்விதம் இறையளக்கிறார் என்பது யமுனைத்துறைவருக்குத் தெரியாது. பாஷ்ய பட்டருக்குப் போதிய வருவாயின்றி இக்கொடிய வரி நாலைந்து வருடங்களாகக் கொடுக்கப்படவில்லை.

இந்நிலையில் ஒரு நாள் பாஷ்யபட்டரும் மற்றச் சீடரும் தன் வீட்டின் உள்ளே உணவருந்திக் கொண்டிருக்க யமுனைத்துறைவர் வாசலில் நின்று கொண்டிருந்தார். அப்போது தண்டல்காரன் ஒருவன் வந்து "பாஷ்யபட்டர் எங்கே?" என்று அதிகாரத்துடன் கேட்டான். யமுனைத்துறைவருக்கு அவன் தம் ஆசிரியரைப் பற்றிக்கேட்ட விதம் பிடிக்கவில்லை. உள்ளம் படபடத்தது. என்றாலும் விஷயம் என்ன வென்றறிய விரும்பியவராய்த் தம் உள்ளக் கிளர்ச்சியை அடக்கிக்கொண்டு வந்தவனை நோக்கி "நீ யாரப்பா? எங்கள் ஆசிரியரை நீ ஏன் தேடுகிறாய்?" என்று கேட்டார். வந்த தண்டல்காரன் சுமார் பன்னிரண்டு வயதுள்ள ஒரு சிறுவன்தானே என்ற அலக்ஷ்யத்துடன் யமுனைத்துறைவரைப் பார்த்து "அதுவா? எங்கள் எஜமானன் வித்வத்ஜன கோலாகலர் இருக்கிறாரே பெரிய வித்வசிரோமணி. அவருக்கு உங்கள் குரு நாலு ஐந்து வருஷமாகக் கட்டவேண்டிய கப்பத்தைக் கட்டவில்லை. அதை இந்த நிமிஷமே வாங்கிவரச்சொல்லி எனக்கு உத்தரவு. ம்ம்... எங்கே அவர்?" என்று கூறினன். குருவாவது! கப்பங்கட்டுவதாவது! என்ன விந்தை இது என்று எண்ணிய யமுனைத்துறைவர் மீண்டும் அவனை நோக்கி "அது என்னப்பா கப்பம். கொஞ்சம் விளங்கச் சொல்லேன்" என்ன அத்தண்டல்காரன், "என்னய்யா கேள்வி கேட்கிறாய். இது கூடவா தெரியாது. எங்கள் எஜமான் இந்நாட்டிலுள்ள வித்வான்கள் எல்லோருக்கும் மேலானவர் ஆகையால் எவன் எவன் இந்த நாட்டிலே ஏடும் எழுத்தாணியும் பிடிக்கிறானே அவனெல்லாம் எங்கள் வித்வானுக்கு வருஷந்தோறும் ஒரு தொகை வரிபோலக் கட்டணும். அது உங்க அய்யா 4, 5 வருஷமாக் கொடுக்கவில்லை. அதை வசூலிக்கத்தான் நான் வந்திருக்கேன் தெரிஞ்சுதா?" என்று திமிரோடு பதிலுரைத்தான். யமுனைத்துறைவரின் வாலிப உள்ளம் கோபத்தால் துடித்தது. "என்ன அக்கிரமம் வித்தைக்கு வரியா? அதுவும் யார் யாருக்குக் கொடுக்கிறது? நம் குருவுக்கும் மேல் என்று ஒருவன் கப்பம் வாங்குகிறதா? இதை ஒழித்தே ஆகவேண்டும்" என்று மனத்தே நிச்சயித்தவராய் வந்தவனை நோக்கி "ஏய்! தண்டல்காரா! யாரிடத்தில் என்ன பேசுகிறோம் என்று தெரியாமலே பேசிவிட்டாய்நீ. கிடக்கட்டும். நீ உன் எஜமானனிடம் போய் அவர் பிடித்ததெல்லாம் பெண்டாய் விடாதாம், என்குரு கப்பம் செலுத்தமாட்டாராம் என்று சொல்" கம்பீரமாக உத்தரவிட்டார். அவர் கூறிய போதையில் அவர் முகத்தில் வீசிய ஒளியையும் அவர் கூறிய பாணியையும் கண்ட தண்டல்காரன் அப்படியே" என்று கூறிப் போய்விட்டான்.

வாசலில் ஏதோ வாதம் நடக்கிறது போலக் காண்கிறதே என்று பாஷ்ய பட்டர் வெளி வந்தார். வந்தவர் தண்டல்காரன்

சற்று தொலைவில் வேகமாகப் போவதையும் யமுனைத்துறைவர் கோபமும் ஏளனமும் முகத்திலே ஜொலிக்க நிற்பதையும் பார்த்து ஏதோ விபரீம் விளைந்திருக்கிறது என்று பயந்தவராய் சீடரை நோக்கி "துறைவா! என்ன நடந்தது. நீ ஏன் இப்படிக் காண்கிறாய்?'' என்று கேட்டார். யமுனைத் துறைவர் குருவை நோக்கி "என்ன அநியாயம் ஸ்வாமீ இது? எவனோ வித்வத்ஜன கோலாகலனும், பெரிய பண்டிதனும் அவனுக்கு ஸ்வாமி போல்வார்கள் வரி செலுத்த வேணுமாமே. இது என்ன அரசனில்லா நாடா. எவன் வரி வாங்குவது என்ற நியதி இல்லையா. தேவரீரை விட எவன் ஒருவன் பண்டிதன் ஸ்வாமீ! அவனுடைய தண்டல்காரனும், தோரணையுடன் வந்து தேவரீரிடம் நாலைந்து வருடவரி பாக்கி என்று கேட்டு வந்தான். வரி கொடுக்க முடியாது என்று கூறி அனுப்பிவிட்டேன். ஸ்வாமீ! இக்கொடுமை ஒழிந்தே ஆகவேண்டும்" என்று துடிப்புடன் பேசினர். குருவோ! தலைமீது கைவைத்து, "அப்பா சிறுபிள்ளை நீ, உன் வயதுக் கேற்ப நடந்துவிட்டாய். அவனை உனக்குத் தெரியாது. இயல்பாகவே அவன் கொடூர புத்தியுடையவன். உன் பதிலைக் கேட்டு அவன் குதிப்பானே. சும்மா விடுவானே. அவசரப்பட்டு விட்டாயே அப்பா'' என்று வருத்தமும் கடிதலுமாகக் கூறினர். யமுனைத்துறைவரோ அதைப் பொருட்படுத்தாமலே "என்ன செய்து விடுவான் ஸ்வாமீ!'' என்று கேட்க, பாஷ்ய பட்டர், "என்ன செய்வானு. போடா சிறு பிள்ளை! அவன் என்னை உடனே வாதுக் கழைப்பான், அந்த யமகண்டனிடம் யார் வாதிப்பது. அவன் வைதிகம் லௌகிகம் அனைத்திலும் நுணுகிய பயிற்சியுள்ளவன். யாரையும் ஒரு விநாடியில் மடக்கிவிடுவானே அவனிடம் தோற்ருல் அவன் பணியாளாக வல்லவாவேண்டும். பலர் பரிகசிக்க இழிவு செய்வானே. என்னுல் அவனிடம் எப்படி வாதம் செய்யமுடியும்?'' என்று அடுக்கினர். யமுனைத்துறைவர் முகத்திலிருந்த கோபம் போய்விட்டது. குருவின் பதட்டத்தைக் கண்டு தோன்றிய கவலைக்குறியும் பறந்து விட்டது. பழைய ஏளனக்குறி மட்டும் தாண்டவமாடியது. ஒருசிறு நகைப்புடன் அவர் குருவை நோக்கி "பூ! இவ்வளவு தானே ஸ்வாமீ! இதற்கா தாங்கள் இப்படி நடுங்குகிறீர்கள். இவனென்ன இவன் பாட்டன்தான் வரட்டுமே! வாதுக்கழைத்தால் தேவரீர் போகவேண்டாம். அடியேனை அனுப்புங்கள். இந்த வீடு அந்த வெந்நீரில் வேகாது. அக்கரையானும் இவ்வுடுக்கை அரிக்காது. தங்கள் ஆசீர்வாத பலத்தால் அந்த மண்டைக்கர்வியை மண்கவ்வ அடித்து வருகிறேன் ஸ்வாமீ!'' என்று வீரமுழக்கம் செய்தார். இவர் என்ன சொல்லியும் குருவின் மனநடுக்கம் ஓயவில்லை. கவலையே வடிவாய்ச் சமைந்திருந்தார் அவர்.

இதற்கிடையே யமுனைத்துறைவரின் வீர மொழி கேட்ட தண்டல்காரன் சவுக்கடி பட்ட குதிரைபோல விரைவில் சென்று வித்வத்ஜன கோலாகலன் முன் சேர்ந்தான். அவன் வரவே ஏதோ விசேட முள்ள தென்பதை உணர்ந்த வித்வானும் என்ன நடந்தது என்று கேட்டார். தண்டல்காரன் நடந்தை ஒன்று விடாமல் அவரிடம் கூறவே வித்வான் துள்ளிக் குதித்தார் "நமக்கெதிர் பேசும் வித்வான் ஒருவனிருக்கிருனு. நாம் நாலைந்து வருஷமாகச் சற்று இரங்கியதை நம் பலவீனம் என்று கொண்டனரா அப்பாஷ்ய பட்டர். நாம் அவ்வப்போது கொட்டா விட்டால் பிள்ளைப்பூச்சிதானே. சரி அவரை இனி ஒழித்துவிட்டுமறுகாரியம்" என்றுஏவலாளன் முன்னேயே ஒரு வீரவாதம் செய்தார். பின் நேரே அரசனிடம் போய் நடந்தவற்றைக் கூறி நம் வதிப்படி கப்பம் கட்டாத பண்டிதர் நம்முடன் வாதுக்கு வரவேண்டும் தோற்ருல் நம் பணியாளனுக வேண்டும். ஆகவே அரசே! அவனை வாதுக்கழைக்க அநுமதியுங்கள் என்ருன். அரசனும் அப்பண்டிதன் வாய்க்குப் பயந்து வாழ்ந்தவனுனபடியால், வேறு ஒன்றும் செய்ய அறியானுய் அவ் விதமே உத்தரவிட்டான். அதன்படி ஒரு அரசாங்க சேவகன் அனுப்பப் பட்டான்.

இங்கே பாஷ்யபட்டர் தனக்கு என்ன வந்து நேரப்போகிறேதோ என்று ஏங்கி நிற்கையில் அரசாங்க சேவகன் அவரை நோக்கி வந்து கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததுமே பாஷ்யபட்டருக்கு உள்ளமும் உடலும் ஓய்ந்துவிட்டன. வந்த சேவகன் வித்வத்ஜன கோலாகலனிடமிருந்து ஒரு ஓலை கொண்டு வந்தான். அதை யமுனைத்துறைவர் வாங்கிப் பார்க்க "நம்மை எதிர்ப்பவன் ஒரு கேவல பண்டிதனு. அல்லது தந்திர பாரகனு? யாராயினும் சரி நம்முடன் வாதம்

செய்யவேண்டியது" என்று கண்டிருந்தது. யமுனைத்துறைவர் சினங் கொண்டவராய் அவ்வோலையைக் கிழித்தெறிந்து விட்டு ஒரு ஓலையில் "நாம் கேவல கவிகளுமல்லோம். சாமான்ய சாஸ்திர சோதனையுடையருமல் லோம். பின்யாரென்னில் பிரதிவாதிகளாகிய மதம் கொண்ட யானைகளின் மத்தகங்களைப் பிளந்தெறியும் சிங்கம்" என்று பொருள்பட ஒரு சுலோகத்தை எழுதி தம் கையெழுத் திட்டு உங்கள் பண்டிதனிடம் கொடு" என்று சேவகனை அனுப்பிவிட்டார். அதை வாங்கிப் பார்த்த வித்வத்ஜன கோலாகலன் என்ற ஆக்கியாழ்வான் கோபத்தால் துடிதுடித்தவனாய் அந்த சுலோகம் எழுதிய ஓலையோடு நேரே அரசனிடம் போய் விவரத்தைக்கூறி "நமக்கிப்படி எழுதக்கூடிய ஒரு பண்டிதன் இந்நாட்டிலிருக்கிறான். அரசே தங்கள் அனுமதியோடு நாம் அனுப்பிய ஓலையை அவன் கிழித்தெறிந் தானும். போக்கிரி போலிருக்கிறது. எனவே தங்களிடமிருந்தே ஒரு சாஸனம் அனுப்பப் பெறவேண்டும்" என்றான். அரசனும் வியப் பெய்தியவனாய், இது என்னவென்று பார்ப் போம் என எண்ணி அவ்விதமே "யமுனைத் துறைவர் நமது சபா மண்டபத்துக்குச் சடக் கென வருக" என்று ஒரு சாஸனம் எழுதி அதில் அரச இலச்சினையுமிட்டு அனுப் பினான். சேவகன் அதைக்கொண்டு போய் யமுனைத்துறைவரிடம் கொடுக்க அவர் அதை வாங்கிப் பார்த்து மீண்டும் கிழித்தெறிந்து விட்டார். பணியாளன் அரசனிடம் சென்று நடந்ததைக்கூறினான். அரசனுக்கு ஒன்றுமே ஓடவில்லை. "நம் சாஸனத்தை ஒரு சிறுவன் கிழித்தெறிவதா. இப்படி ஒரு துணிவு ஏற் பட்ட தெவ்விதம்" என்று மந்திரிகளுடன் யோசித்தான். ஒரு வழியும் தோன்றவில்லை. மிகவும் கவலையுற்றவனாய் அரசன் அந்தப் புரம் புக்கு அங்கே ஒரே மனப் போராட்ட முடையவனாய்க் கவலையோடு சாய்ந்துகிடந் தான். அங்கு வந்த அரசி அரசன் நிலையைப் பார்த்துப் பதறி "இது என்ன. தங்களுக்கு இவ்வளவு சோர்வு" என்று வினவ அரசன் நடந்தவற்றையெல்லாம் ஒன்று விடாமல் கூறினான். அரசி முழுவதும் கேட்டு விட்டு அரசனை நோக்கி "ஸ்வாமீ! ஒரு பெண் சொல் கிறேனே என்று உதாஸீனம் செய்யாது கேட்க வேண்டும். தங்கள் சாஸனம் தங்கள் சபா பண்டிதரோடுவாதம் செய்யவல்லேன் என்று மார்தட்டும் மற்றொரு பண்டிதரை வருமாறு அழைக்கப்பட்டது. அப்படியா யின் ஒரு வித்வானை அழைக்கும் முறை யிலல்லவா அழைக்கவேண்டும். தாங்கள் அவ்விதம் செய்யவில்லை. ஆக்கியாழ்வானைப் பற்றிய சீற்றம் உங்களையும் ஓரளவு பற்றி விட்டதும் அந்நிலையில் முறைதவறி உங்கள் வித்வானையும் வெல்வேன் என்று சொல்லும் துணிவுடைய பண்டிதனை கேவலம் ஒரு குற்றவாளியைச் சபைக் கொணர்வதுவது போல சேவகன் மூலம் சாஸனமனுப்பினீர் கள். அவன் பண்டிதன். தங்கள் தவறை எழுதியனுப்புவது முறையன்று. உங்கள் தவறை நீங்கள் உணர்ந்து திருந்தவும் வேண்டும். தாங்கள் கற்றுணர்வுடையவர் கள் என்பது அவனுக்குத் தெரியும். அதனா லேயே தங்கள் சாஸனத்தைக் கிழித்தால் தாங்கள் அதன் காரணம் ஆராய்வீர்கள். தங்கள் தவறு தெரிவீர்கள். தவறைத் திருத்தி நடக்கவேண்டிய முறையில் நடப் பீர்கள் என்று எதிர் பார்த்துச் செய்திருக் கிறான். ஆகையால் அரசே! கவலையை விடுங் கள். ஒரு மகாவித்வானை ராஜசபைக்கு அழைப்பதற்குரிய ஆடம்பரங்களுடன் அழைத்தீர்களானால் அப்பண்டிதர் வருவார். என்று அடியாளுக்குத் தோன்றுகிறது" என்று தடைவிடைகளுடன் கூறினாள். அரசன் அறிவாளியாதலால் தன் பத்னி சொன்ன பதிலில் உள்ள உண்மையை உணர்ந்துகொண்டு "புரியே! நீ உண்மை யிலேயே மதியூகிதான். நம் பண்டிதர் அவ மானிக்கப்பட்டாரென்ற அப்பொழுதெழுந்த படபடப்பில்தான் உத்தரவனுப்பிவிட்டேன். தவறுதான். நீ சொல்வது போல நம் பண்டிதரை வாதத்தில் வெல்வேன் என்று நம் சாஸனத்தையும் உதாசீனம் செய்பவன் மகாபண்டிதனாகத்தானே இருக்கவேண்டும். உன் யோசனை என் கவலையை நீக்கிவிட்டது. இப்போதே அதற்கு வேண்டும் ஏற்பாடு செய் கிறேன்" என்று கூறி அவளிடம் விடை பெற்றுப்போய் பல்லக்கு, குடை, சாமரம் முதலிய விருதுகளையெல்லாம் அனுப்பி யமுனைத் துறைவரைத்தக்க அரசாங்க மரி யாதைகளுடன் அழைத்து வருமாறு கட்டளை யிட்டான். அரசபரிவாரத்தினர் விருது களுடன் யமுனைத்துறைவர் தங்குமிடத் துக்கு மேளதாளத்தோடு போய்ச்சேர்ந்தனர்.

(தொடரும்)

# செய்திகள்

மேல அகோபிலம், கீழ் அகோபிலம் என்னும் இரண்டு இடங்களிலும் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீநரசிம்மசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 11—3—62 முதல் 21—3—62 வரை நடைபெற்றது.

பூவாளூர்—திருமூல நாதசுவாமி கோயிலில் அஷ்டகிரகச் சேர்க்கையை முன்னிட்டு 9—1—62 முதல் நடைபெற்றுவந்த இலட்சார்ச்சனை 7—2—62ல் ஒரு இலட்சத்து 71ஆயிரம் அர்ச்சனைகளுடன் பூர்த்தியடைந்தது.

தோகூர்—பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் கோயிலிலும், மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலிலும் அஷ்டகிரகச் சேர்க்கை நிவர்த்திக்காக 28—1—62 முதல் 5—2—62 வரை சகஸ்ர நாம அர்ச்சனைகள் நடைபெற்றன.

சிறுவாச்சூர்—மதுரகாளியம்மன் கோயிலில் அஷ்டக்கிரக சாந்திக்காக 3—2—62 முதல் 5—2—62 வரை விசேஷ பூசைகள் நடைபெற்றன.

செட்டிகுளம்—சுப்பிரமணிய சுவாமி, பால தெண்டாயுதபாணி சுவாமி கோயிலில் பங்குனி உத்திர உற்சவம் 12—3—62 முதல் 25—3—62 வரை நடைபெற்றது.

திருவாரூர்—தியாகராஜசுவாமி கோயிலில் பங்குனி உத்திரமகோற்சவம்20—3—62 முதல் 30—3—62 வரை நடைபெற்றது. சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசை யரங்குகளும் நடைபெற்றன.

தேவதானப்பட்டி—மூங்கிலணை காமட்சி அம்மன் கோயிலில் மகாசிவராத்திரி உற்சவம் 4—3—62 முதல் 8—3—62 வரை நடைபெற்றது.

சென்னை—மயிலாப்பூர்—கபாலீசுவரர் கோயிலில் பிரம்மோற்சவம் 11—3—62 முதல் 23—3—62 வரை நடைபெற்றது.

திருவாரூர்—21—3—62ல் தேவாரவிழா ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற நிதியிலிருந்து நடத்தப்பெற்றது.

திருப்பனந்தாள்—வீரியம்மன் கோயிலில் பங்குனி உத்திரப்பெருவிழா 12—3—62 முதல் 21—3—62 வரை நடைபெற்றது.

திருப்பேரூர்—பட்டீசர் கோயிலில் பங்குனி உத்திர விழா 12—3—62 முதல் 21—3—62வரை நடைபெற்றது.

உய்யக்கொண்டான்—உஜ்ஜீவநாத சுவாமி கோயிலில் ஜீர்ணோத்தாரண மகா கும்பாபிஷேகம் 16—3—62ல் நடைபெற்றது.

சென்னிமலை—மணிவாசக மன்றத்தின் ஆறுவது ஆண்டு நிறைவிழா 11, 12-3-62ல் ஸ்ரீகைலாச நாதர் கோயிலில் நடைபெற்றது.

கோயம்புத்தூர்—கோனியம்மன் கோயிலில் திருக்கல்யாண மகோற்சவம்6—3—62ல் நடைபெற்றது. மகோற்சவம் 27—2—62 முதல் 9—3—62 வரை நடைப்பெற்றது.

திருவான்மியூர்—தியாகராஜ சுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 11—3—62 முதல் 22—3—62 வரை நடைபெற்றது.

கும்பகோணம்—நாகேசுவர சுவாமி கோயிலில் பங்குனி உத்திர பிரம்மோற்சவம் 12—3—62 முதல் 22—3—62 வரை நடைபெற்றது.

திருக்கோவலூர்—திருவிக்கிரம சுவாமி கோயில் பிரம்மேற்சவம் 12—3—62 முதல் 26—3—62 வரை நடைபெற்றது.

திருவாலங்காடு—வடாரணியேசுவர சுவாமி கோயிலின் மாசி பிரம்மோற்சவம் 11—3—62 முதல் 24—3—62 வரை நடைபெற்றது.

# திருக்குறுக்கைச் சிவன்கோயில் கல்வெட்டு வரலாறு

[வித்துவான் திரு. வை. சுந்தரேசவாண்டையார், திருவையாறு]

திருக்குறுக்கை என்பது எட்டு வீரட்டத்தலங்களுள் ஒன்று. இது தஞ்சாவூர் மாவட்டத்தில் மாயூரம் தாலுகாவில் உள்ளது. இக்கோயில் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமானது.

இத்திருக்கோயிலில் சோழமன்னர்களில் முதலாம் இராசராச சோழன், விக்கிரம சோழன், இராசாதிராச சோழன், மூன்றாங் குலோத்துங்கன் இவர்கள் காலங்களிலும், பல்லவ மன்னரில் கோப்பெருஞ்சிங்கன் காலத்திலும், விசயநகர வேந்தரில் வீரப்பிரதாப தேவ மகாராயர் காலத்திலும், பொறிக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

## மகாமண்டபத்தைக் கட்டியவன்

இத் திருக்கோயிலின் மகாமண்டபத்தைக் கட்டியவன் மூன்றாங்குலோத்துங்க சோழமன்னன் ஆவன். இச்செய்தி "ஸ்வஸ்தி ஸ்ரீ இத்திருமண்டபம் மதுரையும் பாண்டியன் முடித்தலையுங் கொண்டருளிய குலோத்துங்கசோ......என்னும் கல்வெட்டுப் பகுதியால் அறியக்கிடக்கின்றது.

## இரண்டாங் கோபுர வாசலின் பெயர்

இரண்டாங் கோபுரத் திருவாசலுக்கு மநுவாசன் திருவாசல் என்று பெயர். இவ்வாறு அவ்வாயிலின் வடபக்கத்து நிலைக்கல்லில் பொறிக்கப்பெற்றுள்ளது.

**இறைவரின் திருப்பெயர்:**—இறைவர் திருக்குறுக்கையுடைய திருவீரட்டானமுடையார் என்னும் பெயரால் கூறப்பெற்றுள்ளனர்.

**வீதிக்கு எழுந்தருளும் இறைவரின்பெயர்:**—திருவீதிக்கு எழுந்தருளும் இறைவர்க்குக் கூத்தராய் வீதிபோந்தார், வீதிவனநாதர் என்னும் பெயர்கள் வழங்கப்பெற்றுள்ளன. இவைகளுள் முன்னையது "கூத்தராய் வீதி போந்தார் குறுக்கை வீரட்டனாரே" என்னும் தேவார அடியை நினைவிற்குக் கொண்டு வருகின்றது.

* கல்வெட்டுத் துறையின் 1927—ஆம் ஆண்டு அறிக்கையின் துணைகொண்டும் நேரில் படித்தும் இவ்வரலாறு எழுதலாயிற்று.

**பள்ளியறை இறைவியாரின் திருப்பெயர்:**—பெரிய நாச்சியார். இச்செய்தி மூன்றாங் குலோத்துங்கன் அரியணையேறிய இருபதாம் ஆண்டில் பொறிக்கப்பெற்றுள்ள "பலிசையால் முதலான நெல்லில் திருப்பள்ளியறை பெரிய நாச்சிக்கும்......நெல்லு குறுணியும்" என்னும் கல்வெட்டுப் பகுதியால் அறியக் கிடக்கின்றது.

**திருவிழா:**—"இக்கோயில் உடையார்கூத்தர் திருவீதி போந்தார்க்கு திருவைகாசித் திருநாள் திருவெழுச்சிப்புற இறையிலியாகவும், இந்நிலத்து எட்டுப்படி நெல்லுக்கு ஒக்க தலைமாறுபிடாகை சோழபாண்டிய நல்லூரில் ஒழுகினபடி ஏரி நீர்நிலை தரமில்"— என்னும் கல்வெட்டுப் பகுதியால் ஆண்டு தோறும் வைகாசித் திங்களில் திருவிழா நடைபெற்று வந்தமை அறியக்கிடக்கின்றது.

**தலவரலாற்றை வற்புறுத்தும் ஆதாரம்:**—முதற்கோபுரத்தின் மேற்குப் பக்கத்தில் "குறுங்கை மஹாமுனிரிஷி நித்தியம் சதா சேர்வை" என்று செதுக்கப்பட்டுள்ளது. இதற்குக் கீழே குறுங்கை முனிவரின் படிவமும் இருக்கின்றது. இச்செய்தி இத்தலவரலாற்றை வற்புறுத்தும் ஆதாரமாயுள்ளது.

**அளிக்கப்பெற்ற நிவந்தம்:**—இராசாதிராச தேவரின் ஆறும் ஆண்டில், திருக்குறுக்கையான விக்கிரமசோழ சதுர்வேதிமங்கலத்து மகாசபையார் திருவீரட்டான முடையார்க்குச் சந்திராதித்தவரை திரு அர்த்தசாமத்துக்கு நாளொன்றுக்கு நூறு செங்கழுநீர்த் திருப்பள்ளித்தாமம் நித்தற்படிசாத்தக் கடவதன் பொருட்டு ஊரின் கீழ்பால் நிலம் அளிக்கப்பெற்றிருந்தது. மேற்குறித்த மன்னரின் பதினன்காவது ஆண்டில் திருக்குறுக்கையுடைய வீரட்டானமுடையார்க்குத் திருநந்தவன உடலாக, உய்யக்கொண்டார் வளநாட்டு அம்பர் அருமந்தை அரையன் சிவேதவனப் பெருமான், குறுக்கையான இருமடிசோழ சதுர்ப்பேதி மங்கலத்தில் பிரிந்த குலோத்துங்கசோழ நல்லூரில் ஒன்பதுமா முக்காணி நிலத்தை விலைக்கு வாங்கிக் கொடுத்துள்ளான். மூன்றாம் குலோத்துங்க

தேவரின் இருபதாம் ஆண்டில் திருநாவுக்கரசு திருக்குகையில் எழுந்தருளின மாகேசுவரர்களுக்கு அமுது செய்வித்தருள நூற்று ஒருபத்து ஐங்கலனே தூணி நெல் வைக்கப் பெற்றுள்ளது. இந்நெல்லைப் பலர்க்கும் பொலிசைக்கு உபயமாகக் கொடுத்துப் பலிசையால் முதலான நெல்லைக்கொண்டு அவ்வறம் நடத்தப்படவேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது [குகை-மடம். முதலாக—மூலதனமாக. மாகேசுவரர்—சிவனடியார். பொலிசை-வட்டி. இது பலிசை என்றும் கூறப்படும்]

**மனை விற்பனை**

மூன்றும் குலோத்துங்க சோழனின் முப்பதாம் ஆண்டில் இக்கோயில் ஸ்ரீ மாகேசுவர கங்காணி செய்வாரும், சீகாரியஞ்செய்வாரும், தேவதானம் கோயில் கணக்கரும் உள்ளிட்ட அனைவரும் இக்கோயில் திருமடை விளாகத்து இருந்த ஆண்டார் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மணவில் கோட்டத்துப் பழையனூர் நாட்டு உடையார் நெல்மலி கிழான் திருஏகம்பமுடையான் கந்தையாபரணர்க்குக் குகையாக அஞ்சரைக்கோல் மனையை நூறு காசுக்கு விற்று அவைகளை ஸ்ரீ பண்டாரத்தில் ஒடுக்கலாயினர்.

பண்டை வழக்கம்:—"ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜாதிராஜ தேவர்க்கு யாண்டு ஆறுவது...நாயற்று பூர்வ பக்ஷத்து திருதியையும் சனிக்கிழமையும் பெற்ற புனர்பூசத்து நாள் விருதராஜ பயங்கர வளநாட்டுக் குறுக்கையான விக்கிரம சோழ சதுர்ப்பேதிமங்கலத்து மகாசபையோம். நம்மூர் உடையார் திருவீரட்டானமுடையார் கோயிலில் மூலப்பிரத்தியரான ஆதிசண்டேஸ்வர தேவர்க்கு நாங்கள் ஊர் கீழ் இறையிலி செய்து குடுத்த பரிசாவது உடையார் திருவீரட்டானமுடையார்க்குத் திருவர்த்த சாமத்துக்கு"—என்னும் இக்கோயிற் கல்வெட்டுப் பகுதியால் சிவாலயங்கட்குச் சண்டேசுவரர் பெயரால் சாசனம் செய்துகொடுக்கும் வழக்கம் முற்காலத்தில் இருந்தது என்பதை அறியலாம் [மூலப்பிரத்தியர்—பழைய அடியார்.]

பிறகுறிப்புக்கள்:—இவ்வூருக்கு அருகிலுள்ள பனையூர், ஆற்றூர் என்னும் ஊர்களின் பெயர்கள் இக்கோயில் கல்வெட்டுக்களிற் காணப்படுகின்றன. இவைகளுள் ஆற்றூர், இராசநாராயண சதுர்வேதிமங்கலம் என்னும் வேறு பெயரையும் பெற்றிருந்தது. இந்த ஆற்றூர்க்கு மந்தாரவனம் என்னும் பெயர் உண்மையால், "மண்ணிப்படிக்கரை வாழ்கொளி புத்தூர் வக்கரை மந்தாரம் வாரணாசி" என்று திருநாவுக்கரசு சுவாமிகள் க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகத்தில் குறிப்பிடப்பெற்றுள்ள மந்தாரம் என்னும் வைப்புத்தலம் இந்த ஆற்றூரே என்பர் டாக்டர் மகாமகோபாத்தியாய ஐயர் அவர்கள். [மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம் முதற்பாகம்]

## திருவேந்திபுரம் தேவநாயகப் பெருமாள் கோயில் கல்வெட்டு வரலாறு *

திருவேந்திபுரம் என்பது தென்னார்க்காடு மாவட்டத்தில் கூடலூர் தாலூகாவில் உள்ள ஊராகும். இவ்வூரிலுள்ள தேவநாயகப்பெருமாள் கோயிலில், சோழமன்னர்களில் முதற்குலோத்துங்கன், விக்கிரமசோழன், இவர்கள் காலங்களிலும், பாண்டிய மன்னர்களில் திரிபுவனச் சக்கரவர்த்தி விக்கிரம பாண்டியன், திரிபுவனச் சக்கரவர்த்தி வீர பாண்டியதேவன் இவர்கள் காலங்களிலும், பல்லவ மன்னரில் கோப்பெருஞ்சிங்கன் காலத்திலும் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

இவ்வூர் இக்காலம் திருவேந்திபுரம் என்று வழங்கப்பட்டாலும், இக்கோயில் கல்வெட்டுக்களில் திருவயிந்திரபுரம் என்று கூறப்பெற்றுள்ளது.

திருமாலின் திருப்பெயர்—இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் திருமால், திருவயிந்திரபுரத்து ஆழ்வார், தெய்வநாயகன் என்னும் பெயர்களால் கூறப்பெற்றுள்ளனர்.

மேற்குக் கோபுரத்தைக் கட்டியவர்:—இக்கோபுரத்தைக் கட்டியவன் பெருமாள்வெண்ணுடையான் ஆவன். இச்செய்தி "ஸ்வஸ்தி ஸ்ரீ அவனி ஆளப்பிறந்தான் கோப்பெருஞ்சிங்க தேவர் திருமேனிக்கு நன்றாக செங்கனி வாயன் சோழகோன் தம்பி பெருமாள் வெண்ணுடையான் செய்வித்த திருக்கோபுரம்." என்னும் கல்வெட்டால் அறியக்கிடக்கின்றது. S.I.I. Vol VII No. 770.)

* See the South Indian Inscriptions Volume VII.

### எழுந்தருளுவிக்கப்பெற்ற திருமேனி

மேயூர் மிலேயங்கிழான் மன்றில் குனிக்கும் பெருமாளான அபிமான துங்கப் பல்லவரையன் இக்கோயில் வாசலடியில் சிவராக நாயனுரை எழுந்தருளுவித்து, அவர்க்குச் சிறு காலே காலே சந்திக்கு இரண்டு விளக்கும், உச்சிச்சந்திக்கு இரண்டு விளக்கும், இராக் காலத்துக்கு எட்டுத் திருவிளக்கும் ஆகத் திருவிளக்கு பன்னிரண்டும் சந்திக்குப் பத்து நாழிகை எரிக்கவும், மாதம்ஒன்றுக்கு நான்கு முறை எண்ணெய்க்காப்பு சாத்தவும், மும்மாவரை முந்திரிகை நிலத்தை எழுநூறு காசுக்கு வாங்கிக்கொடுத்துள்ளான்.

### ஏரிகள்

இவ்வூரில் சோழகேரளப் பேரேரி, ராசேந்திரசோழப் பேரேரி என்னும் இரு ஏரிகள் முதற் குலோத்துங்க சோழனின் 23 ஆண்டுக் கல்வெட்டில் (அதாவது கி. பி. 1093 ஆம் ஆண்டில்) குறிக்கப்பெற்றுள்ளன. எனவே அவை மிகப் பழமைவாய்ந்தவைகளாகும்.

**உலகமுண்டான் திருத்தோப்பு:**—இத்தோப்பை ஏற்படுத்தியவன் புத்துமான் திருவரங்கச் செல்வன் வில்லவராயன் ஆவன். இத்திருத்தோப்பு கெடிலவாற்றுக்கும் திருச்சக்கரத்துறைக்கும் தெற்கு, விளங்குளத்து கழனிக்கு மேற்கு,பிள......காலுக்கு கிழக்கு, மலேக்கு வடக்கு இந்நான்கு எல்லேக்கு நடுவுட்பட்டதாகும். இத்தோப்பில் தெங்கு, பலா, புளி, நெல்லி, இலுப்பை முதலானவை கனேப் பயிரிட்டு, ஆண்டுதோறும் 1500 தேங்காய் எண்ணவும், நாயனர் தெய்வநாயகன் திருமுன்பு திருநந்தாவிளக்கு மூன்றுக்கு எண்ணெய் மூவுழக்கும், நாச்சியார் பூமிபிராட்டியார் திருமுன்பு சந்திவிளக்காகப் பதினேந்து திருவிளக்கு இடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இது நிகழ்ந்தது திரிபுவனச்சக்கரவர்த்தி வீரபாண்டியதேவரின் 15-ஆம் ஆண்டில் ஆகும்.

### அளிக்கப்பெற்ற நிலநிவந்தம்

திருமடைப்பள்ளிப் புறமாகவும், திருநாட்களில் எழுந்தருளவும், இக்கோயிலில் நித்தம் பத்துக்கலம் திருவக்கிரம் உண்ணக்கடவும், ஆக, இவ்வூர் (திருவேந்திபுரம்) சோழகேரளப் பேரேரி உடையெரிப்பட்டு நெல் விளேந்துவருகிற நிலம் சோழகேரளப் பேரேரித் தொட்டுவாய்க்கு வடக்கும், இராசேந்திர சோழப் பேரேரிகரைக்கு மேற்கும் இவ்வேரிகரைக்குத் தெற்கும், பராக்கிரம வதிக்குக்கிழக்கு இவ்வதிக்கு மேற்கும், சேந்தபிரான் வாய்க்கால் பழவாய்க்காலுக்குக் கிழக்கும் ஆக இந்நான்கு எல்லேக்குள் உட்பட்ட இருபது வேலி நிலத்தை முதற்குலோத்துங்க சோழன் காவனூர் மடத்தில் எழுந்தருளியிருந்த காலேயில் அளித்துள்ளான். இந்நிலம் அளிக்கப்பெற்ற காலம் இம்மன்னன் அரியணே ஏறிய இருபத்து மூன்றும் ஆண்டாகும். (அதாவது இற்றைக்கு 868 ஆண்டுகளுக்கு முன்பாகும்.)

### இவ்வூரைத் தன்னகத்துக் கொண்டுள்ள நாடு

இவ்வூர், முதற்குலோத்துங்கன், விக்கிரமசோழன் இவர்கள் காலங்களில் விருதராஜ பயங்கர வளநாட்டு, மேற்கா நாட்டுக்கு உட்பட்டிருந்தது.

### சரித்திரத்துக்குப் பயன்படும் அரிய செய்தி

"கோப்பெருஞ்சிங்கன் இருந்த எள்ளேரியும் கல்லியூர் மூலேயும், சோழகோனிருந்த தொழுதகையூரும் அழிந்து வேந்தன் முதலிகளில் வீரங்க நாடாழ்வான் சீனத்தரையன், ஈழத்துப் பராக்கிரமபாஹு உள்ளிட்ட நான்கு பேரையும் கொன்று"—என்னும் இத்தேவநாயகப்பெருமாள் கோயில் பிராகாரத்து மேலேச்சுவரில் காணப்பெறும் கல்வெட்டுப் பகுதியில் காணப்பெறும் கல்லியூர்மூலே என்பது, தென்னுர்க்காடு மாவட்டத்தில் சிதம்பரம் தாலுகாவில், சிதம்பரத்துக்கே மேற்கே சுமார் 12 மைல் தூரத்தில் வீராணத்து ஏரியின் கீழ்க்கரையில் உள்ள கலியமலே என்னும் ஊராகும். இவ்வூர்ச் சிவன்கோயிலில் உள்ள பழைய கல்வெட்டுக்கள் இவ்வூரைக் கல்லியூர் என்றும், பிற்காலக் கல்வெட்டுக்கள் கல்லியூர்மூலே என்றும் குறிப்பிடுகின்றன. இவ்வூர்க்குத் தெற்கே சுமார் மூன்று மைல் தூரத்தில் எள்ளேரி என்னும் ஊர் இருக்கிறது. இச்செய்தி சரித ஆராய்ச்சி செய்வார்க்குப் பெரிதும் பயன்படும்.

வீரநாராயணன் என்பது முதற்பராந்தக சோழனது சிறப்புப் பெயர்களில் ஒன்று

கும். அவனால் வெட்டப்பட்ட வீரநாராய ணன் ஏரி இக்காலம் வீராணத்து ஏரி என்று வழங்கப்பெறுகின்றது. இவ்வேரி முதல் முதல் இவ்வூரிலிருந்து கல்லப்பட்டது (அ) தோண்டப்பட்டது. ஆதலால் இவ்வூர்க்குக் கல்லியூர் என்று பெயர் வந்தது.

[குறிப்பு—இக்கோயில் கல்வெட்டு இது வரை படியெடுக்கப்படவில்லை. இவைகளை யான் எழுதுவதற்கு மூன்று நாட்கள்வரை வேண்டும் உணவு முதலியவசதிகளை அளித்த காட்டுமன்னார் கோயில் நாட்டு சின்ன பண்ணை, திரு. இராமலிங்கம் பிள்ளை அவர் களைப் பெரிதும் பாராட்டுகின்றேன்.]

---

திரிசிரமலை—தாயுமானவர் திருக்கோயிலில் தெப்பத்திருவிழா 11—3—62 முதல் 21—3—62 வரை நடைபெற்றது.

மணவாளநல்லூர்—கொளஞ்சியப்பர் கோயிலில் பங்குனி உத்திரப் பெருவிழா 12—3—62 முதல் 21—3—62 வரை நடைப்பெற்றது.

சென்னை—ஏகாம்பரேசுவர சுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 10—3—62 முதல் 27—3—62 வரை நடைபெற்றது.

கோடம்பாக்கம்—வடபழனி ஆண்டவர் கோயிலில் பங்குனி உத்திர லட்சார்ச்சனை விழா 13—3—62 முதல் 21—3—62 வரை நடைபெற்றது.

திருக்கண்டியூர்—ஹரசாப விமோசனப் பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 12—3—62 முதல் 23—3—62 வரை நடைபெற்றது.

சென்னை—மல்லீசுவரர் கோயிலில் பிரம்மோற்சவம் 11—3—62 முதல் 24—3—62வரை நடைபெற்றது. விடையாற்றி உற்சவம் 24—3—62 வரை 2—4—62 முதல் நடைபெற்றது.

ஆத்தூர்—சோமநாத சுவாமி கோயிலில் பங்குனித் திருவிழா 11—3—62 முதல் 20—3—62 வரை நடைபெற்றது.

சுவாமிமலை—சுவாமிநாத சுவாமி கோயிலில் வள்ளிநாயகியார் திருக்கல்யாண மகோற்சவம் 21—3—62ல் தொடங்கி 29—3—62ல் முடிவுற்றது.

ஜெயநகரம்—பாலசுப்பிரமணிய சுவாமி கோயிலில் பங்குனி உத்திர மகோற்சவம் 11—3—62 முதல் 24—3—62 வரை நடைபெற்றது.

மூவலூர்—மார்க்க சகாய சுவாமி கோயிலில் ருத்ரபாத மகோசற்வம் 11—3—62 முதல் 26—3—62 வரை நடைபெற்றது.

இராஜேந்திரம்—மத்யார்ஜுனேசுவர சுவாமி கோயிலில் பங்குனிஉத்திரபிரம்மோற்சவம் 12—3—62 முதல் 20—3—62 வரை நடைபெற்றது.

விரிஞ்சிபுரம்—மார்க்கபந்தீசுவரர் கோயிலில் பிரம்மோற்சவம் 12—3—62 முதல் 21—3—62 வரை நடைபெற்றது.

தேவூர்—தேவபுரீசுவர சுவாமி கோயில் இலட்சார்ச்சனை பூர்த்திவிழா9—3—62ல் நடைபெற்றது.

பிரமதேசம்—கைலாசநாத சுவாமி கோயிலில் 10 நாட்கள் இலட்சார்ச்சனை சிறப் பாக நடைபெற்றது.

நத்தம்—மாரியம்மன் கோயிலில் திருவிழா 6—3—62 முதல் 21—3—62 வரை நடைபெற்றது.

பழனி—தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் பங்குனி உத்திரபிரம்மோற்சவம் 15—3—62 முதல் 24—3—62 வரை நடைபெற்றது.

# திருநாவுக்கரசு நாயனர்

[வித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார், காஞ்சிபுரம்.]

(முன் தொடர்ச்சி)

## சோழநாட்டுச் செலவு

நாயனர் ஆளுடைய பிள்ளையாருடன் சீகாழியிலே தங்கியிருந்தபொழுது, அவருக்குச் சோழநாட்டில் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயில்கள் பலவற்றிற்கும் சென்று வணங்குதல் வேண்டும் என்னும் அவா உளதாயிற்று. அதனைத் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனருக்குத் தெரிவித்தருள, அவரும் அதற்கு உடன்பட்டருளினர். பின்பு இருவருமாகத் திருக்கோலக்காவிற்குச் சென்று, அங்கு இறைவனை வணங்கினர்கள். இத்தலத்திற்கு நாயனர் அருளிச்செய்த திருப்பதிகத்தை நாம் பெற்றிலோம். அப்பால், திருஞானசம்பந்தர் நாயனருக்கு விடைகொடுத்து மீள, நாயனர், காவிரியாற்றின் வடகரை தென்கரையாகிய இரு கரைகளிலும் உள்ள தலங்களுக்கெல்லாம் செல்வாராயினர்.

அங்ஙனம் செல்கின்றபொழுது, திருச்செம்பொன்பள்ளி (செம்பொனர் கோயில்), திருமயிலாடுதுறை (மாயூரம்), திருத்துருத்தி (குத்தாலம்), திருவேள்விக்குடி, திருஎதிர்கொள்பாடி (மேலைத் திருமணஞ்சேரி) முதலிய தலங்களை வணங்கித் திருப்பதிகங்கள் அருளிச்செய்து, திருத்தொண்டுபுரிந்து, திருக்கோடிகாவை அவ்வாறு வழிபட்டுத் திருவாவடுதுறையை அடைந்தார்.

### திருச்செம்பொன்பள்ளி

அத்தலங்களுள் திருச்செம்பொன்பள்ளிக்கு உள்ள திருப்பதிகங்கள் இரண்டு; அவை: "ஊனினுள் உயிரை வாட்டி" என்னும் திருநேரிசைத் திருப்பதிகமும், "கானருத கடிதொழில் வண்டினம்" என்னும் திருக்குறுந்தொகைத் திருப்பதிகமுமாம். அவற்றுள் திருநேரிசைத் திருப்பதிகத்துள், 'இறைவன் இசையாற் பாடுபவர்க்குச் சிறந்த திருவருளைச் செய்வான்' 'தேவர்கள் இருக்குச் சொல்லி வழிபட இருப்பவன்' 'அடியவர் சிந்தையுள் சிவமாய் (இன்பப் பொருளாய்) இருப்பவன்' 'நாள்தோறும் மூன்று சந்தியா காலங்களிலும் வணங்கும் வணக்கத்தை ஏற்று அருள்பவன்', 'சீலமும் நோன்பும் ஆகின்றவன்' என்பனபோன்ற பல அரிய பொருள்கள் வெளிவந்துள்ளன. திருக்குறுந்தொகையுள் இறைவனது இயல்புகள் விளக்கப்பட்டுள்ளன. "மூவராய் முதலாய் நின்ற மூர்த்தியே" என்பது அவற்றுள் குறித்துணரத்தக்க தொன்று.

### திருமயிலாடுதுறை

திருமயிலாடுதுறைக்கு உள்ளது, "கொள்ளுங்காதன்மை" என்னும் திருக்குறுந்தொகைத் திருப்பதிகம் ஒன்றே. அதனுள் இறைவனது திருவருட் பெருமை மிக அருமையாக எடுத்து விளக்கப்பட்டுள்ளது.

> "கோலும் புல்லு மொருகையிற் கூர்ச்சமும்
> தோலும் பூண்டு துயரமுற் றென்பயன்
> நீல மாமயி லாடு துறையனே
> நூலும் வேண்டுமே நுண்ணுணர்ந்
> தோர்கட்கே"

என்பது, அத்திருப்பதிகத்தை இடமாகக் கொண்டு விளங்குந் திருப்பாடல்களுள் ஒன்று. இது, விரதத்தைச் சாதனமாக நினையாது, சாத்தியமாகவே நினைந்து செருக்குவாரைத் தெருட்டத் தோன்றியருளியது என்லாம். இதனுள், 'நுண்ணுணர்ந்தோர்' என்பதன் உண்மை வடிவம், 'நுன்னுணர்ந்தோர்' என்பதே போலும்! 'நீ' என்பதன் வேற்றுமைத் திரிபாகிய 'நின்' என்பது, திருப்பதிகங்களுட் சிலவிடத்து, 'நுன்' எனவும் மருவிவருதல் நோக்கற்பாலது. 'நுன்' என்பது, 'நின்' என்பதற்கும் 'உன்' என்பதற்கும் இடைப்பட்டதுபோலும்!

### திருத்துருத்தி

திருத்துருத்திக்கு உள்ளது, "பொருத்திய குரம்பை தன்னை" என்னும் திருநேரிசைத் திருப்பதிகம் ஒன்றே. அதனுள், 'இறைவனைக் காணுதற்குரிய வழி, அவனைப் பன்னாளும் பலபடியாக ஏத்துவதே' என்பது அறி

வுறுத்தப்பட்டுள்ளது. இதன் திருப்பாடல்கள்தோறும் வரும் 'தொண்டனேன் கண்டவாறே' என்னும் எழுவாய்க்கு, 'அது' என்னும் பயனிலை வருவித்து, 'அடியேன் அவனைக் காணுதற்கு ஏதுவாய் நின்ற வழி அதுவே' என உரைத்தல் பொருந்துவதொன்றும்.

திருவேள்விக்குடித் திருப்பதிகமும், திருஎதிர்கொள்வாடித் திருப்பதிகமும் கிடைத்தில.

### திருக்கோடிகா

திருக்கோடிகாவிற்கு "நெற்றிமேற் கண்ணினனே" என்னும் திருநேரிசை ஒன்று, "சங்குலா முன்கை" என்னும் திருக்குறுந்தொகை ஒன்று, "கண்டலஞ்சேர் நெற்றி" என்னும் திருத்தாண்டகம் ஒன்று ஆக மூன்று திருப்பதிகங்கள் உள்ளன. அவற்றுள், திருநேரிசையிலும், திருத்தாண்டகத்திலும் இறைவனது அருட்செயல்கள் விரித்தோதப்பட்டன. திருக்குறுந்தொகையுள், 'இறைவனை வணங்கில் இன்பமும், வணங்காதொழியில் துன்பமும் உளவாகும்' என்பது அறிவிக்கப்பட்டது. "கோடிகாவனைக் கூறீரேல் கூறினேன்-பாடி காவலிற் பட்டுக் கழிதிரே" எனவும், "கோடி காவனைக் கூறாத நாளெலாம்-பாடிகாவலிற் பட்டுக்கழியுமே" எனவும் இருகால், வருவதுணர்த்தியதும் அத்திருப்பதிகமேயாம். "பாடிகாவல் என்பது, தண்டத்தொழில் உணர்த்துவதோர் சொல்' என்றுரைத்தார் மாபாடியமுடையார்.

### திருவாவடுதுறை

திருவாவடுதுறையை அடைந்த நாயனார் திருக்கோயினுட் சென்று, பெருமானை வணங்கி, "ஆவடுதண் டுறையுள் மேய அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந்தேனே" என்று முடியும் திருத்தாண்டகத் திருப்பதிகத்தை அருளிச்செய்து மகிழ்ச்சியால் திளைத்தருளினார். அத்திருப்பதிகம் "நம்பனை நால் வேதம் கரைகண்டானை" என்று தொடங்குவது. அதன் பின்னர், "திருவேஎன் செல்வமே" என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகம், "நிறைக்கவாலிய எல்வளிந் நேரிழை" என்னும் திருக்குறுந்தொகைத் திருப்பதிகம், "மஞ்சனே மணியு மானாய்" என்னும் திருநேரிசைத் திருப்பதிகம், மற்றும் திருவிருத்தம் முதலிய திருப்பதிகங்களை அருளிச்செய்தார். அவற்றுள் திருவிருத்தம் ஒன்றேனும் கிடைக்கப்பெற்றிலேம்.

"திருவேஎன் செல்வமே" என்னும் திருத்தாண்டகத்துள் பெருமானைப் பலவகைக் காதற் சொற்களால் உருகிப்பாடி, "காவாய்—அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்" என்றும், "அடியேனை அஞ்ச லென்னாய்" என்றும் வேண்டினார். அவை நாம் பெருமான்பால் அங்ஙனம் வேண்டிப் பயன் பெறுதற் பொருட்டுத் தோன்றியருளினவாம்.

### திருவிடைமருதூர்

இங்ஙனம் அத்தலத்தில் பல திருப்பதிகங்களை அருளிச்செய்து, திருத்தொண்டு புரிந்துகொண்டு பலநாட்கள் அங்கே அமர்ந்தருளிப் பின்பு, அங்கு நின்றும் நீங்கித் திருவிடைமருதூரை அடைந்து பெருமானை வணங்கிப் பல திருப்பதிகங்கள் அருளிச்செய்து, பல நாட்கள் எழுந்தருளியிருந்தார். அத்தலத் திருப்பதிகங்களாக நாம் காண்பன, "காடுடைச் சுடலை நீற்றர்" என்னும் திருநேரிசைத் திருப்பதிகமும், "பாசம் ஒன்றிலராய்" "பறையின் ஓசையும்" என்னும் திருக்குறுந்தொகைத் திருப்பதிகங்களும், "சூலப் படையுடையார் தாமே போலும்" "ஆறு சடைக்கணிவர் அங்கைத்தீயர்" என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகங்களுமாகும். அவற்றுள், திருநேரிசை திருத்தாண்டகத் திருப்பதிகங்கள், இறைவனது இயல்பினை இனிதுணர்த்துவன. திருக்குறுந்தொகைத் திருப்பதிகங்கள், வினை நீங்குமாற்றை யருளுவன. "பாசம் ஒன்றிலராய்" என்னும் திருக்குறுந்தொகையுள், திருவிடைமருதூரில் இறைவள் வழிபாட்டினை அடியார்களே இயற்றி வந்தமை காணப்படுகின்றது. மற்றும்,

"கனியினும் கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளு மரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே"

என்றாற்போலும் அரிய பொருள்கள் அதன்கண் வெளியாகியுள்ளன.

### திருநாகேச்சுரம்

நாயனார், திருவிடைமருதூரில் பல நாட்கள் எழுந்தருளியிருந்த பின்பு, "திருநாகேச்

சரத்திற்கு எழுந்தருளி அங்குத் திருக் கோயில் கொண்டு விளங்கும் பெருமானை வணங்கி, "கச்சைசேர் அவரவர் போலும்" என்னும் திருநேரிசையும், "நல்லர் நல்லதோர் நாகங்கொண் டாட்டுவர்" என்னும் திருக் குறுந்தொகையும், "தாயவனை வானோர்க்கும் ஏனோ ருக்கும்" என்னும் திருத்தாண்டகமும் ஆகிய திருப்பதிகங்களை அருளிச்செய்து, திருத்தொண்டியற்றினுர். இத்திருப்பதிகங் கள் அனைத்தும் இறைவன் தன்மையை எடுத் தோதுவனவாம். அவற்றுள் திருக்குறுந் தொகை புராண வரலாறுகள், அத்தலத்தின் வரலாறுகள் என்னும் இவற்றையும் சிறப் பாக எடுத்தோதும். திருத்தாண்டகம், "சிவ பிரானைச் சேராதார் நன்னெறிக்கண் சேரா தார்" என அறிவுறுத்தும். அன்றியும், திரு நேரிசையுள்,

"சொற்றுணை மாலை கொண்டு
தொழுதெழு வார்கட் கெல்லாம்
நற்றுணை யாவர் போலும்
நாகவீச் சுரவ னுரே"
"எம்பிரான்! எம்மை ஆளும்
இறைவனே! என்று நாளும்
நம்புவார்க்கு அன்பர் போலும்,
நாகவீச் சுரவ னுரே"
"வஞ்சகர்க் கரியர் போலும்!
மருவினேர்க் கெளியர் போலும்"

என்னும் அருந்தொடர்களும், திருக்குறுந் தொகையுள்,

"......ஆதியர் நாமந்தா
னுன அஞ்செழுத் தோதவந் தண்ணிக்கும்
தேனர் போல்திரு நாகேச் சுரவரே"

என்னும் அரியதொரு தொடரும், "நாவலந் தீவில் உள்ளார்க்கு நாகேச்சுரம் நல்லதொரு தவமாகும்" என்னும் சிறப்பும், திருத்தாண் டகத்துள்,

"மெய்யானைத் தன்பக்கல் விரும்பு வார்க்கு,
விரும்பாத அரும்பாவி யவர்கட் கென்றும்
பொய்யானை"
"மறந்தானைத் தன்னினையா வஞ்சர் தம்மை,
அஞ்செழுத்தும் வாய்நவில வல்லோர்க்
[கென்றும்
சிறந்தானை"

என்னும் அரிய தொடர்களும் போந்து விளங்குகின்றன.

## திருச்சத்திமுற்றம்

திருநாகேச்சுரத்தை வணங்கிய பின் னர்த் "திருப்பழையாறை வழியாகச் சென்று திருச்சத்திமுற்றத்தை அடைந்தருளினுர். இது சத்தி (உமையம்மை) வழிபட்ட தல மாதலின், இப்பெயர் பெற்றது. 'தும்பி பம்பு-மட்டார் குழலி மலைமகள் பூசை மகிழ்ந் தருளும்-சிட்டா" என நாயனுரும், "குன்ற மகள்தன் மனக்காதல் குலவும் பூசை கொண் டருளும்—என்றும் இனிய பெருமானை இறைஞ்சி" எனச் சேக்கிழாரும் இங்கு இத னைக் குறித்தருளினுர்கள். சத்தியால், பூசிக் கப்பெற்றமையாற் போலும், இங்கு இறை வர், "சிவக்கொழுந்து' என்னும் திருப்பெய ரொடு விளங்குகின்றுர்.

## திருவடி சூட்ட வேண்டல்

இப்பெருமானை வணங்கிய நாயனுர்க் குத் திருத்தொண்டியற்றுதலில் திருவுள்ளம் விரைய, வெளிப்போந்தருளித் திருத் தொண்டு செய்துகொண்டே திருப்பதிகம் சாத்தத் தொடங்கியபொழுது, சிவக்கொழுந் தீசரது திருவருட் பெருமை நோக்கி அவர் பால் ஒரு பெரு விண்ணப்பத்தைச் செய் தருளினுர். அஃதாவது, "கூற்றுவன் வந்து உயிரைக் கொள்வதற்கு முன்னே உமது மலர்போலும் திருவடிச் சுவட்டினை அடியே னது தலையின்மேற் பொறித்தருளல் வேண் டும்" என்பது. அதனை, எடுத்த திருப்பாட லிற்றுனே,

"கோவாய் முடுகி அடுதிறற் கூற்றங்
குமைப்பதன்முன்
பூவா ரடிச்சுவடு என்மேற் பொறித்துவை"

என இனிது விளங்கக் கூறி வேண்டினுர்.

இன்னும், அத்திருப்பாடலிற்றுனே,

"போகவிடில் மூவா முழுப்பழி மூடுங்கண்டாய்
முழங்கும் தழற்கைத்
தேவா திருச்சத்தி முற்றத் துறையும்
சிவக்கொழுந்தே"

எனவும், ஆறுவது திருப்பாடலில்,

"வெம்மை நமன்தமர் மிக்கு விரவி
விழுப்பதன்முன்
இம்மை உன்தாள் என்றன் நெஞ்சத்து
எழுதிவை ஈங்கு இகழில்
அம்மை அடியேற்கு அருளுதி என்பது
இங்கு ஆரறிவார்
செம்மை தருசத்தி முற்றத் துறையும்
சிவக்கொழுந்தே"

எனவும் வற்புறுத்தருளினுர். பிற திருப் பாடல்களிலும் பலவாறு வேண்டித் திருப் பதிகத்தை முடித்தருள, இறைவன், "நல்லூ ருக்கு வா; வா." என்று வற்புறுத்தியருளிச்

செய்தான். அதைக் கேட்ட நாயனர், மிக்க மகிழ்ச்சியடைந்து, அவ்விடத்தை வணங்கிக் கொண்டு, பெருமானது அருளாணையின் படியே திருநல்லூரை யடைந்து, திருக்கோயி லுட்சென்று, பெருமானது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி எழுந்தார்.

## திருநல்லூரில் பெருமான் திருவடி சூட்டி யருளப்பெறுதல்

அப்பொழுது சிவபெருமான், "உன்னு டைய எண்ணத்தை முடித்தருளுகின்றேம்" என்று அருளிச்செய்து, நாயனரது திருமுடி யின்மேல் தனது இரண்டு திருவடிகளாகிய தாமரை மலர்களைச் சூட்டியருளினன். அத னைப்பெற்ற நாயனர், மிகவும் வறுமையுடை யான் ஒருவன் அழியாத பெரும்பொருள் கிடைக்கப் பெற்றாற்போன்ற பெருமகிழ்ச் சியை அடைந்து, இறைவரது ஒப்பில்லாத பெருங்கருணைத் திறத்தை நினைந்து உள்ளம் உருகி, மீளவும் நிலத்தில் விழுந்து பணிந்து எழுந்து நின்று, "நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்" என்று எடுத்து, "சிறந்து வானோ-ரினந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி-நனைந்தனைய திருவடிஎன் தலைமேல் வைத்தார், நல்லூர் எம்பெருமானர் நல்ல வாறே" என்னும் திருத்தாண்டகத்தை அரு ளிச்செய்து, பின்னும், "திருவடிஎன் தலை மேல் வைத்தார் நல்லூர் எம்பெருமானர் நல்லவாறே" என்றே பலபடியாகச்சொல்லுந் திருத்தாண்டகங்களைப் பாடித் திருப்பதி கத்தை முடித்துக் களிப்பு மிக்கவராயினர். இத்திருப்பதிகம், உயிர்கட்குத் திருவருட் பேற்றினை வழங்குவதாய் உள்ளது.

அதன் பின்னும் நாயனர், தமக்குத் திரு வடிப்பேற்றினைத் தந்தருளிய திருநல்லூர்ப் பெருமானைப் [பிரியலாற்ருது பல நாட்கள் அங்கே தங்கி நாள்தோறும் திருத்தொண்டு செய்துகொண்டு, பல திருப்பதிகங்களை அரு ளிச்செய்திருந்தார். எனினும், "நினைந்துரு கும் அடியாரை நைய வைத்தார்" என்னும் அத்திருத்தாண்டகத் திருப்பதிகத்தைத்தவிர, இன்று நாம் பெற்றுள்ள அத்தலத் திருப்பதி கம், "அட்டுமின் இப்பலி" என்னும் திரு விருத்தத் திருப்பதிகம் ஒன்றே. அது, இறை வனது பலியேற்கும் கோலத்தில் திளைத்து நின்றருளியது. மற்றும், "இறைவன் திரு நல்லூரில் வெளிப்பட்டு நின்றருள (திருவடி சூட்ட) இருக்கவும், அங்குச் சென்று அவ னைக் கண்டுகொள்ளாமல், சிலர் நல்லறிவு இன்மையால், ஆற்றிற் கெடுத்துக் குளத்தில் தேடுகின்ற அறிவிலிகளைப்போல, உலகமெல் லாம் தேடித் திரிகின்றனர்" என்று ஒரு திருப்பாடலில் அருளிச்செய்தார். இத்தலத் தில் வாழ்ந்து திருத்தொண்டு செய்து, இறை வன் பிரமசாரியாய் வந்து உலகர்க்கு விளக்கி, குடும்பத்துடன் வீடுபெற அருளப்பெற்ற அமர்நீதி நாயனரது வரலாற்றையும் மற்ருெரு திருப்பாடலிற் குறித்தருளினர்.

இங்ஙனம் திருநல்லூரில் எழுந்தருளி யிருக்கும் நாட்களிற்றுனே நாயனர், திருக்கரு காவூர், திருஆவூர் (பசுபதீச்சுரம்), திருப்பாலைத் துறை முதலிய தலங்களுக்கும் சென்று,வணங் கித் திருப்பதிகம் அருளிச்செய்து, திருத் தொண்டு புரிந்து மீண்டருளினர்.

## திருக்கருகாவூர்


திருக்கருகாவூர்த் திருப்பதிகமாய் உள் ளது, "குருகாம் வயிரமாம்" என்னுந் திருத் தாண்டகப்பதிகமே. அஃது, இறைவனது நுண்ணிய பருநிலைகளைப் பலபடியாக விளக்கியருள்வது. மற்றும், "கொண்ட சம யத்தார் தேவனுகி—ஏத்தாதார்க் கென்றும் இடரே துன்பம் ஈவானும்" எனவும், "கூருத வஞ்சக் குயலர்க் கென்றுங்-கரவனும்" என வும் வரும் அரும்பொருள்களும் அதனுள் அருளப்பட்டுள்ளன.

## திருப்பாலைத்துறை


திருப்பாலைத்துறைக்கு உள்ளது, "நீல மாமணி கண்டத்தர்" என்னுந் திருக்குறுந் தொகைத் திருப்பதிகமே. இதன் ஆருவது திருப்பாடலில் திருவைந்தெழுத்து அருளிச் செய்யப்பட்டுளது. இதனை அனைத்துத் திரு முறைகளினும் நடுவிடத்தில் விளங்குவ தெனப் போற்றுவர்.

## அப்பூதியடிகளார் பால் எழுந்தருளல்


இவ்வாறு திருநல்லூரைப் பிரியா திருந்த நாயனர் பின்னர் அரிதிற் பிரிந்து, திரும்பழனத்திற்குச் சென்று வணங்கிப் பிற தலங்களை நோக்கிச் செல்லுங்கால், நாய னரை நேரிற் காணுமலே பேரன்பு பூண் டொழுகிய திங்களூரினராகிய அப்பூதியடி கள்பால் தாமே எழுந்தருளி, அவரோடு அள வளாவி, அரவு தீண்ட இறந்த அவர் மூத்த திருமகனை "ஒன்று கொலாம்" என்னும் இந்



படைவீடு இரேணுகாதேவியம்மன் கோயிலும் குன்றின்மேல் குமரன் கோயிலும்.



படைவீடு இராமர் கோயில்.



படைவீடு இரேணுகாதேவியம்மன் கோயில் கர்ப்பக்கிரக விமானம்



வீர ஆஞ்சநேயர்
(படை வீடு)



உபதேசம் பெறும் அனுமான்
(படை வீடு)

தளப்பன் திருப்பதிகத்தை அருளிச் செய்து எழுப்பித் தந்தருளினுர். அத்திருப்பதிகம் இன்றும் விடந்தீர்த்தருளுவதாகும்.

## திருப்பழனம்

அப்பூதியடிகளாரது இல்லத்தில் அமர்ந்து அவரது வழிபாட்டினைச் சில நாட்கள் ஏற்றிருந்தருளியபின், அவர் உடன்வரத் திருப்பழனத்தை அடைந்து, இறைவரை வணங்கி, "சொன்மாலை பயில்கின்ற" என்னும் பழந்தக்கராகப் பண் திருப்பதிகத்தை, அகப்பொருள் வகையில் பாடியருளினுர். அதன் இறுதித் திருப்பாடலில்,

"அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய்"

என்று இறைவனைப் பாடுமுகத்தால், அப்பூதியடிகளாரைச் சிறப்பித்தருளினுர். இறைவனை, அப்பூதியடிகளாரது முடியில் சூடும் மலர்களாகிய திருவடியை உடையவன் என நாயனுர் அருளிச்செய்தமையால், அப்பூதியடிகளார், இறைவன், தனது திருவடிகளைத் தமது முடியிற் சூட்டியருளும் பேறு பெற்ருர் என்க. இதுவே, சிவமாந்தன்மைப் பெருவாழ்வைப் பெற்ற பெரியோர், தம்மை அடைந்தார்க்குக் கிடைக்கச் செய்யும் பெறுதற்கரிய பெரும்பேருதல் அறிக.

இவ்வரலாற்றின் விரிவை அப்பூதியடிகள் வரலாறு கூறுமிடத்துக் காணலாம்.

நாயனுர் திருப்பழனத்திலே பலநாட்கள் எழுந்தருளியிருந்து பல திருப்பதிகங்களை அருளிச்செய்து, திருத்தொண்டு புரிந்தருளினுர். அங்கு அருளிச்செய்த திருப்பதிகங்களுள் மேற்சொல்லிய, "சொன்மாலை பயில்கின்ற என்பது தவிர மற்றும் நாம் பெற்றுள்ளவை, "ஆடினுர் ஒருவர்போலும்" என்னும் திருநேரிசைத் திருப்பதிகம், "மேவித்து நின்று" என்னும் திருவிருத்தத்தத் திருப்பதிகம், "அருவனுய் அத்தி ஈருரி போர்த்து" என்னும் திருக்குறுந்தொகைத் திருப்பதிகம், "அலையார் கடல் நஞ்சம் உண்டார் தாமே" என்னும் திருத்தாண்டகத் என்பனவாகும்.

இவற்றுள் திருநேரிசைத் திருப்பதிகம் இறைவரது கருணைத்திறத்தைப்புகழ்வது, திருவிருத்தத் திருப்பதிகம், தம்மைக்குறிக்கொண்டருளுமாறு இறைவரை வேண்டிக்கொண்டது. இதன்கண் இறுதிதோறும் நிற்கும், "அடியேனைக் குறிக்கொண் டருளுவதே" என்பதன்பின், 'வேண்டும்' என்னும் ஒரு சொல் எஞ்சி நிற்கின்றது. இத்திருப்பதிகம் நம்மனேரை இறைவன் குறிக்கொண்டருளுமாறு வேண்டுதற்பொருட்டு எழுந்ததாகும். திருக்குறுந்தொகைத் திருப்பதிகம், "சிவபிரானது கோலம் எளியவர் கோலமாய்க் காணப்படினும், அவனது திருவருளாலே தேவர்களும் தம் துறக்க இன்பத்தினைப் பெறுவர்; அதனுல், அவனது கோலம் நோக்கி அவனை இகழற்க இகழின், இகழ்வார் அறிவிலிகளாவதல்லது பிறிதில்லை" என அறிவுறுத்தருளுவது. திருத்தாண்டகத் திருப்பதிகம். இறைவரது பெருமைகளை எடுத்தோதுவது. இதனுள்,

"ஓராதார் உள்ளத்தி னில்லார் தாமே
உள்ளூறு மன்பர் மனத்தார் தாமே
பேராதென் சிந்தை யிருந்தார் தாமே
பிறர்க்கென்றுங் காட்சிக் கரியார் தாமே"
"ஆண்டுலகே ழனைத்தினையும் வைத்தார் தாமே
அங்கங்கே சிவமாகி நின்ருர் தாமே"

என்பனபோன்ற அரிய பொருள்கள் பொதிந்து நிற்கின்றன.

## திருச்சோற்றுத்துறை

திருப்பழனத்து வதிந்தருளும் நாட்களிலே நாயனுர், அருகில் உள்ள திருச்சோற்றுத்துறை முதலிய தலங்களுக்குச் சென்று பெருமானை வணங்கித் திருப்பதிகங்கள் பாடித் திருத்தொண்டு செய்து மீண்டருளினுர்.

திருச்சோற்றுத்துறைக்கு நான்கு திருப்பதிகங்கள் உள்ளன. அவை: "பொய்விராமேனி தன்னை" என்னும் திருநேரிசைத்திருப்பதிகம், "காலை யெழுந்து கடிமலர் தூயன தாங்கொணர்ந்து" என்னும் திருவிருத்தத் திருப்பதிகம், "கொல்லை யேற்றினர் கோளரவத்தினர்" என்னும் திருக்குறுந்தொகைத் திருப்பதிகம், "மூத்தவனுய் உலகுக்கு முந்தினுனே" என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகம் என்பனவாம்.

அவற்றுள், திருநேரிசைத் திருப்பதிகம், "சிவபிரானை வணங்குவதே துன்பம் நீங்கி இன்பம் உறுதற்குரிய வழி" என்பதனை விளக்கியருளும். அதன்கண்ணே, 'சூரியனைப் பலரும் வணங்குதல்பற்றி அவனையே முதல்வன் எனல் வேண்டா' என்பதை,

அவன் அத்தலத்தில் வழிபட்ட வரலாற்றைக் குறித்து அறிவுறுத்தருளினார். திருவிருத்தத் திருப்பதிகம், சிவபிரானது தலைக்கோலத்தைச் சிறந்தெடுத்துப் புகழ்வது. திருக்குறுந்தொகைத் திருப்பதிகம், "சிவபிரான் ஒருவனையே நினை; பிறிதொன்றையும் நினையாதே" என்று நெஞ்சிற்கு அறிவுறுத்துவது. திருத்தாண்டகத் திருப்பதிகம், சிவபிரானைச் சரணடையும் திருப்பதிகமாம்.

## திருநல்லூர்க்கு மீண்டருளல்

திருப்பழனத்தில் பன்னாள் எழுந்தருளியிருந்த நாயனார், தமது திருமுடிமேல் திருவடி சூட்டியருளிய திருநல்லூர்ப் பெருமானது சேவடிகளை நினைத்துக்கொண்டு, விரைவாகக் காவிரியின் தென்கரையே நடந்தருளி அத்திருத்தலத்தை அடைந்து, திருக்கோயிலுட் சென்று, பெருமானது திருவடிகளில் விழுந்து அடங்காத பேரன்பு பொங்கித் ததும்பத் திருப்பதிகங்களால் போற்றி செய்து, திருத்தொண்டு புரிந்துகொண்டு அத்தலத்திற்றானே எழுந்தருளியிருந்தார்.

(தொடரும்)

[முன் இதழில், இக்கட்டுரையில், கீழ்க்காணும் திருத்தத்தைச் செய்து படிக்க:—

'திருநாரையூர் வணங்குதல்' என்னும் தலைப்பை உடைய பத்தியில், 'அத்தலத்தின் ......நாயனார்' என்று உள்ள பகுதியை, 'அத்தலத்தின் திருப்பதிகமாக இன்று நாம் பெற்றுள்ளவை, "சொல்லானைப் பொருளானைச் சுருதியானை" என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகமும், "வீறு தானுடை வெற்பன் மடந்தை" என்னும் திருக்குறுந்தொகைத் திருப்பதிகமுமாம். அவற்றுள் திருத்தாண்டகத் திருப்பதிகத்தை நாயனார்', எனத் திருத்திக்கொள்க.

அப்பத்தியின் இறுதியில், 'திருக்குறுந்தொகைத் திருப்பதிகம், சிவபிரானுக்குச் சிறப்பாய் உள்ள இயல்புகளில் ஈடுபடுத்துவதாய் உள்ளது.' என்பதைச் சேர்த்துக் கொள்க.]

---

மன்னார்குடி வட்டம்—கோட்டூர் ஸ்ரீகொழுந்தீசுவரர் கோயிலுக்குச் சொந்தமான மைலேரிபுளம் கிராமத்தில் நிலத்தை அகழ்ந்தபோது கீழ்க்காணும் உருவச்சிலைகள் கண்டெடுக்கப்பட்டு ஷை கோயிலுக்கு உரிமையாக்கி 1—2—1962ல் கோயிலுக்குக்கொண்டு வரப்பட்டன. 1. நடராஜர். 2. சிவகாமி அம்பாள் (பெரியது) 3. சிவகாமி அம்பாள் (சிறியது) 4. மாணிக்க வாசகர் 5. ஆனந்த நடராஜர் 6. சோமாஸ்கந்தர்-அம்மன் திருவாசி உள்பட.

வைத்தீசுவரன் கோயில்—வைத்திய நாதசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 12—3—62 முதல் 25—3—62 வரை நடைபெற்றது. சமயச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

பண்ணப்பட்டு—சோமசுந்தரேசுவரசுவாமி கோயிலில் 1—1—62 முதல் நாள் ஒன்றுக்கு மூவாயிரம் அர்ச்சனை வீதம் 4—2—62 வரை இலட்சார்ச்சனை அஷ்டகிரகச் சேர்க்கை நிவர்த்திக்காக நடைபெற்றது.

பருத்தியப்பர்கோயில்—பாஸ்கரேசுவரசுவாமி கோயிலில் பங்குனிஉத்திரபிரம்மோற்சவம் 12—3—62 முதல் 23—3—62 வரை நடைபெற்றது.

கும்பகோணம்—ஆதிகும்பேசுவரசுவாமி கோயிலில் தெப்போற்சவம் 21—3—62ல் நடைபெற்றது.

வலங்கைமான் வரதராஜம் பேட்டை—மகா மாரியம்மன் கோயில் உற்சவம் 11—3—62 முதல் 25—3—62 வரை நடைபெற்றது. 1—4—62ல் புஷ்பப்பல்லக்கும் நடைபெற்றது.

காஞ்சிபுரம்—திருவேகம்ப நாதர் கோயிலில் பங்குனி உத்திரப் பெருவிழாவில் மெய்கண்டார் கழகச் சார்பில் 11—3—62 முதல் 24—3—62 வரை நாடோறும் ஆயிரக்கால் மண்டபத்தில் மாலை 5 மணி முதல் விரிவுரை நிகழ்த்தப்பெற்றது.

திருச்சுழியல்—திருமேனிநாதசுவாமி கோயிலில் பங்குனி பிரம்மோற்சவம் 11—3—62 முதல் 21—3—62 வரை நடைபெற்றன.

# படைவீடு

## இரேணுகாம்பாள் கோயில்


படைவீடு என்றதும் முருகப்பெருமான் விரும்பி எழுந்தருளியிருக்கும் ஆறுபடை வீடுகளே நினைவிற்கு வரும். ஆனால் இங்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது அவைகளில் ஒன்றன்று. வட ஆர்க்காடு மாவட்டத்தில் போளூர்ப் பகுதியில் அம்பிகை அமர்ந்தருளியிருக்கும் ஒரு திருத்தலத்தைப்பற்றியதாகும். நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படையில் திருப்பரங்குன்றம், திருவாவினன்குடி, திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை இந்த இடங்களில் முருகக்கடவுள் உவந்து எழுந்தருளியிருப்பதைக் கூறியிருக்கிறார். முருகப்பெருமான் சூரபதுமனுடன் போரிடுவதற்காகச் சென்றபோது திருச்செந்தூரில் தங்கியிருந்தார் என்பது புராணவரலாறு. ஆதலின் அந்த இடத்தை ஒருபடை வீடாகக்கொள்ளலாம். வீடுபெறக் கருதிய இரவலனை நோக்கி வீடுபெற்றானொருவன் ஆற்றுப்படுத்தியதைக் கூறுவது ஆற்றுப்படை. பிற்காலத்தில் இந்த ஆற்றுப்படை என்பது ஆறுபடை வீடாகக் கொள்வதற்கு இடந்தந்திருக்கலாம் போலும். திருச்செந்தூரையன்றி மற்ற ஐந்து இடங்களில் அறுமுகக் கடவுளின் போர்ச் செயல்கள் சம்பந்தமாக யாதும் இல்லை என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

இக்கட்டுரையில் எழுதப்பெறும் படைவீடு இப்போது படவேடு என்ற பெயரால் வழங்கி வருகிறது. படைவீடு என்பது காவற்படைகளைக்கொண்ட இடம் என்று பொருள்படும். ஒரு காலத்தில் அரசர்களால் ஆளப்பெற்று பகைவேந்தர் உள் நுழையாதவாறு மலைகளை அரணாகக்கொண்டு பெரும் படைகளுக்கு உறைவிடமாக இருந்தது. விழுப்புரம்-காட்பாடி இருப்புப்பாதையில் ஆரணிரோடு என்ற நிலையத்திலிறங்கி எட்டு கல் சென்றால் இவ்வூரையடையலாம். வேலூரிலிருந்து தெற்கே 22 கல்லிலுள்ள காங்காரந்தல் கூட்டுப்பாதையில் இறங்கி மேற்கே நாலுகல் தொலைவு சென்றால் இப்பதியைச் சேரலாம். பஸ்கள் மூலம் இவ்வூருக்குச் செல்வது எளிது. இவ்வூரில் தங்குவதற்கு தேவஸ்தான சத்திரமும், ஆரணி கார்த்திகேயன் பஸ் உரிமையாளர் திரு. சுப்பிரமணிய முதலியாரின் சத்திரமும் உள்ளன.

படைவீடு மிகப் பழங்காலத்திலேயே பெருமைபெற்று விளங்கியது. தொண்டை நாட்டுக் கோட்டங்களில் ஒன்றான பல்குன்



வேணுகோபாலர்



இரேணுகாம்பாள் கோயில்

றக்கோட்டத்தின் தலைநகராயமைந்திருந்தது. இங்கு நன்னன் என்ற மன்னனும், அவன் மகன் நன்னன்சேய் நன்னனும் ஆண்டனர் என்று கூறுவர். முதல் நன்னன் அக்காலத்தில் ஆண்ட சிற்றரசர்களில் மிகப் பொல்லாதவன் என்று பெயரெடுத்தவன். அவனுடைய மாந்தோப்பிலிருந்து காற்றில் விழுந்த மாங்காய் ஒன்று ஆற்றுநீரில் மிதந்துவந்தது. நீராடச்சென்ற இளம் பெண் ஒருத்தி அந்த மாங்காயை எடுத்துத்தின்றாள். அதைப் பெருங்குற்றம் எனக்கொண்டு நன்னன் அந்தப் பெண்ணுக்கு மரணதண்டனை விதித்தான். அந்த நங்கையின் தந்தை, "எண்பத்தொரு யானைகளையும் தன்மகள் நிறைக்குச் சரியான பொன்னும் அபராதமாகத் தருகிறேன்" என்று மன்றாடிக் கெஞ்சிக் கேட்டும் மனமிரங்காமல் நன்னன் அவளைக் கொலை செய்வித்தான். அது முதல் மக்கள் அவனைப் "பெண் கொலைபுரிந்த நன்னன்" என்ற பெயரால் வழங்கலாயினர். சங்கப்புலவரான பரணர் இந்தச் செய்தியைக் குறுந்தொகைப் பாடல் ஒன்றில் ஐந்தே அடிகளில் அமைத்துக்காட்டுகிறார்.

மண்ணிய சென்ற ஒள்நுதல் அரிவை
புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு
ஒன்பதிற்று ஒன்பது களிற்றொடு அவள்நிறை
பொன்செய் பாவை கொடுப்பவும் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன்.

[நீராடச் சென்ற ஒளிவீசும் நெற்றியையுடைய இளம்பெண் நீரில்மிதந்துவந்த மாங்காயைத்தின்ற தவறுக்காக, எண்பத்தொரு யானைகளையும் அவள் நிறைக்குச் சமமான பொன்னும் கொடுக்க முன்வந்ததை ஏற்றுக் கொள்ளாமல் பெண்ணைக் கொலைபுரிந்த நன்னன்]. இத்தகைய கொடுங்கோல் மன்னன் ஆண்ட இவ்வூர் மண்மாரிபெய்து அழிந்ததென்று மக்கள் கூறுகின்றனர். வாழ்ந்து அழிந்தவரைப்பற்றிப் பேசும்போதெல்லாம் இப்பக்கத்துமக்கள் "நந்தன் படவேடு"போல் என்று கூறுவது வழக்கமாக இருக்கிறது. நன்னன் என்பதை நந்தன் என்று வழங்கினர்போலும். இப்போதும் இவ்வூரில் ஆழமாகத்தோண்டப்பெறும் கிணறுகளில் பழய கட்டிடங்களின் சின்னங்கள் காணப்படுகின்றமையால் இவ்வூர் ஒரு காலத்தில் அமிழ்ந்துபோயிருக்க வேண்டுமென்று கொள்ள இடமுண்டு. இவ்வளவு பெரிய மண்புதைவிற்குக் காரணம் இவ்வரசனின் கொடுமைக்குத் தெய்வம் விதித்த தண்டனையாக இருக்கலாம் போலும். மண்மாரி பெய்யும்படி செய்த பிற்கால வசைப்பாடல் வருமாறு:—

ஊருமரவமுந் தாமரைக்காடு
முயர் வனமுந்
தேருமுடைத் தென்பர்காண்
நந்தியேயுனைச் சேர்ந்தபின்பு
ஊருமரவமுந் தாமரைக்காடு
முயர் வனமுந்
தேருமுடைத் தென்பர்காண்
தெவ்வர்வாழுந் திருநகரே.

இந்த பெண் பழிபெற்ற நன்னனின் மகன் மிக நல்லவன். நத்தை வயிற்றில் முத்து பிறந்ததுபோல. அவன் நன்னன் சேய் நன்னன் என்று புலவர் புகழ்ந்து பாடும் பெருமையைப் பெற்றான். இப்போது செங்கம் என வழங்கும் செங்கண்மா என்ற ஊரைத் தலைநகராகக்கொண்டு ஆண்டவன். இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் என்ற புலவர், மலைபடுகடாம் என்ற பாடலில் இவனை, "பல்குன்றக் கோட்டத்துச் செங்கண்மாத்துவேள் நன்னன்சேய் நன்னன்" என்று கூறுகிறார். இப்பாடல் பத்துப்பாட்டு என்ற சங்கத்தொகை நூலில் பத்தாவது பாட்டாகும். "கூத்தராற்றுப் படை" எனவும் வழங்கும். இம்மன்னன் தந்தையின் தலைநகரான படைவீடு அழிந்து போனதால் செங்கத்துக்குத் தலைநகரை மாற்றிக்கொண்டிருக்கவேண்டும். படைவீட்டில் நந்தியென்ற புகழ்பெற்ற மன்னனும் ஆண்டதாகக் கூறுகின்றனர். அவன் பெயரால் எழுந்த "நந்திக்கலம்பகம்" என்னும் நூல் புலவருக்கு ஒரு விருந்தாகும். படை வீட்டுக் கோயிலில் நன்னன் உருவம் இருக்கிறது.

இத்தகைய சீரும் சிறப்பும்பெற்ற பேரூராயிருந்த படைவீடு இப்போது ஒரு அழகிய சிற்றூராகக் காட்சியளிக்கிறது. ஊரைச்சுற்றிலும் மலைகள் சூழ்ந்துள்ளன. மேற்குப் பகுதியில் சவ்வாதுமலை தலை நிமிர்ந்து நிற்கிறது. மலையரணுகப்படை தங்கியிருப்பதற்கு மிகவும் தகுதியாக இருந்திருக்கவேண்டும். பல்குன்றக் கோட்டம் என்ற பெயர் மிகவும் பொருத்தமுடையதை அவ்விடத்தைக் கண்டால்தான் தெரியவரும். மலைகளுக்கு நடுவே அமைந்த இவ்வூரின் தென்கிழ்பால் வளைந்து வளைந்து நீர்வற்றாத ஆறு ஒன்று ஓடுகிறது. இதைக் கமண்டலநதி

யென்பர். ஊருக்கு குண்டலீபுரம், மாதுபுரி, பட்டீசுவரம், சேனுகதம் என்ற பெயர்களும் உண்டு. ஊருக்குள் நுழைந்ததும் எதிரே தோன்றுவது இரேணுகாதேவியின் திருக்கோயில். கோயில் சிறிதெனினும்மூர்த்தியின் பெருமை பெரிது. மிகவும் மகிமை வாய்ந்த தெய்வம். 64 சக்தி பீடங்களில் ஒன்றென்றும் கூறுவர். கோயிலுக்கு கிழக்கு, மேற்கு, வடக்குப் பக்கங்களில் வாயில்கள் உள்ளன. கிழக்கு, மேற்கு வாயில்களில் சிறு கோபுரங்கள் இருக்கின்றன. கர்ப்பக்கிரகத்தில் இரேணுகாதேவியும் வடபுறம் தெற்கு நோக்கி உற்சவமூர்த்தியும் எழுந்தருளியுள்ளனர். மேற்குப் பிரகாரத்தில் முருகன், வரசித்திவிநாயகர் சந்நிதிகள் இருக்கின்றன.

இந்த கோயிலில் இரண்டுகால பூசை நிகழ்கிறது. எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மக்கள் திரளாக வந்து வழிபடுகின்றனர். ஆடி மாதம் வெள்ளிக்கிழமைகளில் திருவிழா நடைபெறுகின்றது. தொடர்ந்து ஏழு வெள்ளிக்கிழமைகளிலும் பெருவிழா நிகழ்கிறது. இது ஒரு பிரார்த்தனை ஸ்தலம். முடிகொடுக்கும் வழக்கம் உண்டு. பிள்ளைப்பேறு வேண்டுபவர்கள் இக்கோயிலிலுள்ள மரத்தினால் செய்யப்பட்ட பரசுராமர் உருவத்தைத் தலையில் தூக்கிக்கொண்டு வலம்வருகின்றனர். அம்மை நோயால் கண் பழுதுபட்டவர்கள் இங்கு வந்து தங்கி வழிபட்டு கண்ணொளி பெற்று மீளுகின்றனர்.

வடமொழியில் ஸ்தலபுராணத்தை சுந்தரசாஸ்திரியார் என்பவர் எழுதிவைத்திருந்தார். அந்தப் பிரதியைக்கொண்டு காமக்கூர்ப் பெரும்புலவர் சுந்தர முதலியார் அவர்கள் "படைவேட்டுப் புராணம்" என்ற வசன நூலை 1902-ஆம் ஆண்டில் எழுதினார்கள். ஆனால் அது 1929-ல் தான் அச்சுவாகனம் ஏறியது. புராணச்சுருக்கம் ஒன்றை புரிசை-திரு. முருகேச முதலியார் அவர்கள் எழுதியிருக்கின்றார்கள். அது பின்வருமாறு:—

ஒருகாலத்தில் சவ்வாதுமலை அடிவாரத் தொடர்புள்ள இதன் மேற்குப்பகுதியில் சமதக்கினி முனிவரென்னும் பெருந்தகை தவச்செல்வராக வீற்றிருந்தனர். அவரிடத்தில் கலைபயிலும் அன்புமிக்க மாணவர்கள் திருக்கூட்டம் ஒன்று ஒழுக்கஞ்சிறந்த கலை நலம் வேண்டிச் சூழ்ந்திருந்தது. ஒருநாள் அங்கு உலகம் சுற்றிப் போர் வென்றுவந்த இரேணுகையென்னும் அரசிளஞ் செல்வி தனது தமர்களோடு வந்து சந்தவாசல் என்னும் தபோவனத்தின் சிறந்த வாயிலில் தங்கி முனிவர்களோடு போர்புரிந்தனர். அப்போரில் முன்னின்ற சாமுண்டியென்னும்இரேணுகாதேவியின் சேனைத்தலைவியை சமதக்கினி முனிவரின் சிறந்த மாணவராகிய அகிர்தவிருணன் முனிவருருள்கொண்டு ஒருகுவளை மாலையால் கட்டித்தகைத்தனன். சாமுண்டிகட்டுப்பட்ட செயல் கேட்டு அரசிளஞ் செல்வியாகிய இரேணுகாதேவியே போரில் முன்னிற்பதாயினர். அத்தேவியின் போருக்காற்றுமல் முனிபுங்கவர்கள் யாவரும் பின்வாங்க முனி முதல்வராகியசமதக்கினி முனிவரே எதிர்த்து தனதுதவ வலிமையினால் எண்ணிலாதபடைகளை உண்டு பண்ணி யேவினர். அம்மையின் போர்த்திறம் முனிவருக்கடங்குவதாயிற்று. அப்போது "அம்மையே உனக்குரிய மணாளனும்நீ தேடிவந்த தவச்செல்வனும் இந்த சமதக்கினியென்னும் மாதவப் பெருந்தகையே"யென்று அசரீரியான ஒரு ஓசையுண்டாயிற்று.

இவ்விரேணுகாதேவி, விதர்ப்பதேசத்து அரசனை இரைவத மன்னவன் திருமகள். கலைத்திறன் அனைத்தினுஞ் சிறந்தவள். இவள் தன்னை வெல்லும் ஆற்றலுள்ள கணவனையே மணம்புரிவதென தந்தையின் அனுமதிபெற்றுப் படைகொண்டு போர்வென்று வந்த செல்வி. இவள் விரும்பிய கணவராக இலங்கினர் சமதக்கினி முனிவர். முறையாக தனது வேண்டுதலை வெளியிட்டு அம்மாதவன் மனமிரங்கித் தன்னை ஏற்றுக்கொள்ள திருமணங்கொண்டு இல்லற ஒழுக்கத்தில் ஈடுபட்டு வைகினள் இரேணுகாதேவி. இஞ்ஞானச் செல்வர்களுக்கு ஒரு உலகம் போற்றும் நன்மகவுந்தோன்றிற்று. அப்பெருமகனே நிகரற்ற கலைஞானச் செல்வராகிய பரசுராமராவார்.

பரசுராமன் இளமையிலேயே பல்கலைக் கடலுங்கடந்து ஞானசீலனுகப் பெருந்தவத்தினை மேற்கொண்டொழுகிய பெருந்தகை. உலகத்தறிஞர்களின் உறுதியைக்காட்ட பல இன்னல்களும் நல்லவர்களிடம் தோன்றக் காண்கின்றோம். அநுபவிக்கும் அவர்களுக்கு அது துன்பமாயினும் நல்லார்படும் துன்பமெல்லாம் நாட்டிற்கு மறப்பறிய ஒரு கலைஞானமாக உதவுவதைக் காணலாம். அவ்வகைத்துன்பம் ஒன்றும் இரேணுகாதேவிக்கு

நேர்ந்துளதென்பர். தேவியார் நீராடச் சென்ற அமயத்தில் வானிடைப்பறந்த கந்தருவன் ஒருவன் சாயலை நீரிடைக்கண்டு ஒரு அழகனென உளங்கொண்டனராம். அந்த நினைவே அவரது தூய கற்பினுக்கு ஒருமா செனக் கருதி அவ்வெண்ணத்தை ஞான நோக்கத்தாலுணர்ந்த மாதவன், தனது செல்வன் பரசுராமனை அழைத்துத் தவறுதலுடையவள் உன்தாய் அவளைச் சிரச்சேதஞ் செய்க என்றனராம். வீரமகன் உடனே தந்தைசொல் மிக்க மந்திரமில்லையென்ற உறுதியுடையவனுக வாள்கொண்டு துரத்தித் தனது தாயின் சிரத்தைத் துணித்தனனும். அன்னை அலறியோடிய ஞான்று குறுக்கிட்ட பலபாவையரும் முனிமகன் வாளுக்கிரையாகினராம். தந்தை கட்டளையை முடித்த கலைமகன் அத்தவமிக்கத் தந்தையை யணுகி எனக்கு ஒருவரந்தர வேண்டுமென வேண்ட தந்தையாதென பரசுராமன் "ஐயனே எனது முதற்றெய்வமான தாயைக்கண்டு தொழ விழைகிறேன்" எனவேண்ட முனி முதல்வன் ஒரு கமண்டல திருநீறையணிந்து உனது தாயின் உடலுந்தலையும் ஒன்றுபட வைத்து இந்நீரைத் தெளிப்பின் எழுந்துவருவள். அவள் மயக்கத்தால் செய்த குற்றத்திற்கும் இம்மரண துன்பத்தால் கழுவாய் பெற்றுவிட்டனள் ஆதலின் எல்லாம் நலமாயிற்றென அருளிச்செய்தனள். திருமகன் அவ்வகை யெழுப்ப முன்னியபோது இடைவந்து உயிரிழந்த ஒரு பெண்ணின் உடலத்தோடு தனது தாயின் தலையையும் பொருந்திப் புனிதநீர் தெளித்து எழுப்பலாயினன். விதிவசமாக வேற்றுடல்கொண்ட செல்வி முனிவனை வணங்கி விடைகொண்டு தன்பால் நேர்ந்ததொரு சிறிய குற்றத்திற்குப் பெருநாணங்கொண்டு அதன் கழுவாய் நாடிப் பரம்பொருளாகிய சிவபெருமானை நாடி அரியமாதவஞ் செய்துவைகினள். விடையிவர்ந்த விமலன் அவ்வாரணங்கின் பெருந்தவத்திற்கிரங்கி,அம் மனமாசு தீர்த்து உனது பெருந்தவத்தின் மிகுதியால் பராசக்தியின் ஆற்றலெல்லாம் பெற்று ஆக்கவும் காக்கவும் அழிக்கவும் வல்லவளாகி வழிபட்டவர்க்கெல்லாம் பெருநலம் விளைத்து நிலைபெறுகவென வரந்தந்தனன். அது முதலாக இரேணுகாதேவி ஒருபெரும் பெண் தெய்வமாக மக்களால் போற்றும் பாங்குபெற்றுத் திருக்கோயில் கொண்டு விளங்கிவருகின்றனள். அம்மையின் வடிவம் மறைய சிரசொன்றையே வைத்து மக்கள் வழிபாடு செய்து வருகின்றனர்-என்பது இத் தலபுராணத்தின் சுருக்கம்.

பின்னர் சதகண்டராவணனை வெல்லப் போர்தொடுத்த காலத்தில் அவனுக்கரணுக விருந்த அன்னையான இவ்விரேணுகா தேவியையும் வெல்லக்கருதிய அனுமான் போர் தொடுத்து இளைத்தனன் என்றும், எதிர்த் தலையொழித்து இவ்வன்னையை வழிபட்ட பின்பே இவனருளால் அவ்வெற்றி அநுமனுக்கும் அவனது முதல்வனுகிய இராமபிரானுக்கும் கிடைத்தது என்றும் இப்புராணம் கூறும்.

இப்புராணக் கூற்றினுக்கு ஆதாரமாக இத்தலத்தில் பல இடங்களில் அஞ்சனைச் செல்வன் வடிவங்கள் இருக்கின்றன. இத்தலத்தில் உள்ள இராமபிரான் திருவுருவம் வேறு எந்த தலங்களிலும் காணரிய சிறப்புடையது. இராமமூர்த்தங்கள் எங்குமே கோதண்டபாணியாகவே நிகழக்காண்கின்ருேம். இங்கு அம்மூர்த்தி ஒருஞான போதகராக விளங்குகிருர். மிகச்சிறந்த சாந்தகுணம் அவரது திருமுகத்தில் குடிகொண்டிருக்கின்றது. அநுமனும் சுவடிகளை இருகையிலும் ஏந்தியவண்ணம் இராமபிரான் எதிரிலமர்ந்து பராசத்தியின் திருவிளையாடல் திறத்தையெல்லாம் தனது தலைவன்பால் உபதேச மொழியாக அநுமன் கேட்டுவரும் பெற்றியை இராமன் மூலஸ்தானத்தில் இலங்கும் அனுமன் வடிவத்தருமையே வெளிப்படுத்துகின்றது. படவேட்டுத் திருக்கோயில் ஒரு பெண் தெய்வத்தின் கோயிலாகப் போற்றும் அளவோடு நிற்பதல்ல. பராசக்தியின் உயர்ந்த ஒரு அம்சமாகவே போற்றப்பெறுகின்றது. இதிலோடும் கமண்டலநதியும் ஒரு சிற்ருராகக் காணினும் பல உயர்ந்த மூலிகைகளில் தோய்ந்தொழுகிப் பெருமருந்தாகப் பயன்படும் பயனுடைய பேராருகவே கருதப் படுகிறது. இத்தலத்தில் தரப்பெறும் திருநீறும் இயற்கையாகக் கமண்டலநதி தலைப்பில் சமதக்கினி ஆசிரமத்தில் குகையொன்றில் நின்று பூசையிட்டு ஆண்டிற்கொருதரம் எடுத்துவரப்பெறும் சிறப்புடையதாகும்.

காவியங்கண்ட கணபதி சாஸ்திரிகள் என்பவர் இரேணுகாதேவியின் பேரில் 28 சுலோகங்கள்பாடியிருக்கிருர். அவை கீதமாலை என்ற நூலில் இடம் பெற்றிருக்கின்றன.

இரேணுகாதேவியின் கோயிலையன்றி இவ்வூரில் இன்னும் சில கோயில்களும் இருக்கின்றன. ஊருக்குள் நுழையும்போது தென்புறம் ஒருசிறு குன்றின்மேல் குமரன்கோயில் கொண்டிருக்கிறான். அம்பிகை கோயிலுக்குப் பின்புறம் அனுமான் கோயிலும், வெளி மாரியம்மன் என்ற மாதங்கி கோயிலும் இருக்கின்றன. சிறிது மேற்கே சென்றால் மற்றொரு அனுமான் கோயில் இருக்கிறது. அந்த திருவுருவம் அற்புதச்சிற்ப வேலைப்பாடுடையது. (படம் காண்க). அதற்கும் சற்று மேற்கே மரத்தடியில் ஒரு அனுமான் திருவுருவமும், துரோபதையம்மன் கோயிலும் இருக்கின்றன. அதற்கும் மேற்கே இராமச்சந்திரர் கோயில் இருக்கிறது. (படம் பார்க்க) கோயிலுக்கு வெளியில் ஒரு மண்டபத்தில் ஆஞ்சநேயரும், தசகரவிநாயகர் அம்பிகையுடனும் எழுந்தருளியிருக்கின்றனர். கோயிலுக்குள் கர்ப்பக்கிரகத்தில் இராமர், சீதாதேவி வீற்றிருந்த திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றனர். இராமர் வலதுகை விரல்கள் உபதேசம் செய்யும் முறையில் இருக்கின்றன. அருகே இளைய பெருமாள் நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். எதிரில் அனுமான் அமர்ந்து கையில் சுவடியுடன் பராசக்தி உபதேசம் கேட்கும்பாவனையில் இருக்கிறார். (படம் பார்க்க). தெற்குப் பிரகாரத்தில் வேணுகோபாலர் கஜலட்சுமி இவர்கள் சந்நிதிகள் இருக்கின்றன. இராமச்சந்திரர் கோயில் தூண்களில் பல அழகிய சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. கன்றே குறுந்தடியாகக்கொண்டு விளாங்கனியுதிர்த்த மாயவன், சகடாசுரன் வதம், கோபிகை ஜலக்கிரீடை, கஜேந்திரமோட்சம் இந்த சிற்பங்கள் மிகவும் முக்கியமானவை. கமண்டல நதிக்குத் தென்கரையில் ஒரு குன்றின்மேல் பாழடைந்த இலட்சுமி நரசிம்மர் கோயில் இருக்கிறது.

படைவீட்டில் அம்பாள் சந்நிதி முக மண்டபத்திலும், கர்ப்பக்கிரகத் தென்சுவரிலும், இராமர் கோயில் கர்ப்பக்கிரக வடசுவரிலும், இராமர் கோயிலுக்குப் போகும் சாலையின் பக்கமுள்ள பதினாறுகால் மண்டபத்திலும் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சமயபுரத்திலுள்ள மாரியம்மன் கோயில், தஞ்சைக்கருகிலுள்ள மாரியம்மன் கோயில், செங்கற்பட்டு மாவட்டத்தில் பெரியபாளையத்திலுள்ள அம்மன் கோயில் இவைகளைப் போன்றே படைவீட்டு இரேணுகாதேவியம்மன் கோயிலும் பெருமையுடையது. தேவியின் மகிமையை, காஞ்சிப் புராணம், தேவி பாகவதம், தேவிபராக்கிரமம், பராசக்தி மகாகாவியம், திருச்செந்தூர்ப் புராணம், கந்த புராணம், சிவபுராணம் முதலிய நூல்களில் பரக்கக்காணலாம்.

கொடையோங்கு விதர்ப்பபுரி ரைவதவேந்
தன்மகளாய்க் குலவிநின்று
படையோங்கு சேனையுடன் புவிமுழுதும்
சஞ்சரித்துப் பார்த்தா ராய்ந்து
சடையோங்கு முனிசமதக் கினியைமணந்
தனைவர்களும் சாற்றப் பெற்ற
நடையோங்கு படைவேட்டி ரேணுகையின்
அடிமலரை நாடிவாழ்வாம்.

—படைவேட்டுப் புராணம்

---


புத்தூர்—புற்றிடங்கொண்டீசுவரசுவாமி கோயில் பங்குனி உத்திரபிரமோற்சவம் 12—3—62 முதல் 22—3—62 வரை நடைபெற்றது.

திருப்பரங்குன்றத்தில்—சோமசுந்தரக்கடவுள் தண்ணீர்ப்பந்தல் தருமம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற நிதியிலிருந்து 14—3—62 முதல் 13—4—62 வரை நடைபெறும்.

அழகர்கோயில்—கள்ளழகர் கோயிலில் சுந்தரராஜப்பெருமாளின் திருக்கல்யாண மகோற்சவம் 21—3—62-ல் நடைபெற்றது.

திருபுவனம்—கம்பகரேசுவரசுவாமி கோயிலில் உருத்திரபாதத் திருநாள் 12—3—62 முதல் 21—3—62 வரை நடைபெற்றது.

பந்தணைநல்லூர்—பசுபதீஸ்வரசுவாமி கோயிலில் பங்குனிஉத்திரத் திருவிழாவில் 15, 17, 19—3—62 நாட்களில் சமயச்சொற்பொழிவுகளும் இன்னிசையரங்குகளும் நடைபெற்றன.



தேவிகாபுரம் அம்மன் கோயில் முன்தோற்றம்

# தேவிகாபுரம்


## (கனககிரீசர் கோயில்)

தேவிகாபுரம் என்ற தலம் வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஆரணிப்பகுதியில் இருக்கிறது. விழுப்புரம்-காட்பாடி இருப்புப் பாதையில் போளூர் நிலையத்திலிருந்து கிழக்கே ஒன்பதுகல் தொலைவு சென்ருல் இப்பதியை யடையலாம். சென்னையிலிருந்தும் ஆரணியிலிருந்தும் பஸ்கள் இவ்வழியாகச் செல்கின்றன. பொதுவாக இவ்வூருக்கு மக்கள் வழங்கும் பெயர் தேவிகாபுரம் என்பது. தேவகிபுரம், தேவிகீழ்புரம், தேவியம்பதி, கனககிரி, நாராயணவனம், கனகாத்திரி, கனகாசலம் என்ற பெயர்கள் தலவரலாறிலும் மற்ற நூல்களிலும் காணப்படுகின்றன. இவ்வூரிலுள்ள மலைக்குக் கனககிரி என்று பெயர். அம்மலைமேல் சிவபெருமான் கோயில் கொண்டெழுந்தருளியுள்ளார். மலையடிவாரத்திலுள்ள பெரிய கோயிலில் தேவியார் மாத்திரம் எழுந்தருளியிருக்கிருர். இந்த தனிச்சிறப்பின் காரணமாகவே, தேவிகாபுரம், தேவியம்பதி என்ற பெயர் இவ்வூருக்கு ஏற்பட்டது. மலையின்கீழ் இக்கோயில் இருப்பதால் தேவிகீழ்புரம் என்றும் வழங்குகின்றனர். கம்சனுடைய தங்கையான தேவகி இங்கு வந்து இறைவனை வழிபட்டு கண்ணபிரானை ஈன்ருள் என்றும், அதனுல் இவ்வூருக்கு தேவகிபுரம் என்ற பெயர் உண்டாயிற்றென்றும் தலவரலாறு கூறுகிறது. இங்குள்ள மலையின் பெயரையொட்டி இவ்வூருக்கு கனககிரி, கனகாசலம் என்ற பெயர்களும், சீனிவாசமூர்த்தி இங்கு கோயில் கொண்டிருப்பதால் நாராயணவனம் என்ற பெயரும் வழங்கலாயிற்று. தேவி கோயிலில் காணப்படும் கல்வெட்டுக்களில் தேவகாபுரம் என்ற பெயர் குறிக்கப்பெறுகிறது.

மலைமேல் இருப்பது கனககிரீசர் கோயில் மலை கடல்மட்டத்திலிருந்து 400 அடி உயரமுள்ளது. உச்சிக்குச் செல்ல படிகள் கட்டப்பெற்றிருக்கின்றன. 365 படிகள் இருக்கின்றன. மக்கள் எளிதில் ஏறிச்செல்லலாம்.



தேவிகாபுரம் பெரியநாயகிஅம்மன் கோயில் உள்தோற்றம்



தேவிகாபுரம் பெரியநாயகி அம்மன் கோயில் இராஜகோபுரமும், மலைமேல் கனககிரீசர் கோயிலும்

லிருந்து சில படிகள் ஏறியவுடன் வீரபத்திரர் கோயில் இருக்கிறது. அந்த திருவுருவம் அழகிய சிற்பவேலைப்பாடுடையது. மலைப் படிகளில் பாதிதொலைவில் ஆல்டிவிநாயகர் எழுந்தருளியிருக்கிறார். முன்பு இங்கிருந்த பெரிய ஆலமரம் பட்டுப்போய் விட்டதாகத் தெரிகிறது. மலையின்மேல் வடபுறம் ஒரு பாறையில் இரண்டு பாதங்கள் காணப்படுகின்றன. இவ்விடத்திலிருந்து அம்பிகை பொன்மலைநாதரைக் குறித்துத் தவம்இயற்றினார் என்று கூறுகின்றனர்.


மலைக்கோயிலைச்சுற்றி கோட்டைச்சுவர் போல் கட்டப்பெற்றிருக்கிறது. முன்னால் 36 தூண்களுள்ள ஒரு மண்டபம் இருக்கிறது. அந்த தூண்களில் பல அற்புதச் சிற்பங்கள் காணப்படுகின்றன. கோயில் 140 அடி நீளம் 70 அடி அகலமுள்ளது. கோயிலின் வாயிலை ஒரு கோபுரம் அணி செய்கிறது. தெற்குப் பிரகாரத்தில் ஏழு கன்னியர், தென்முகக் கடவுள் சந்நிதிகளும், மேற்குப் பிரகாரத்தில் விநாயகர், முருகன் இவர்கள் சந்நிதிகளும் இருக்கின்றன. இந்த குமரக்கடவுளையே அருணகிரிநாதர் ஒரு திருப்புகழ்ப்பாடலில் துதித்திருக்கிறார். அது வருமாறு:—

அரிவையர்கள் தொடரு மின்பத்
துலகுநெறி மிகம ருண்டிட்
டசடனென மனது நொந்திட் டயராமல்
அனுதினமு முவகை மிஞ்சிச்
சுகநெறியை விழைவு கொண்டிட்
டவநெறியின் விழையு மொன்றைத்
[தவிர்வேனோ

பரிதிமதி நிறைய நின்றஃ
தெனவொளிரு முனது துங்கப்
படிவமுக மவைகள் கண்டுற் றகமேவும்
படர்கள்முழு வதும கன்றுட்
பரிவினொடு துதிபு கன்றெற்
பதயுகள மிசைவ ணங்கற் கருள்வாயே

செருவிலகு மசுரர் மங்கக்
குலகிரிகள் நடுந டுங்கச்
சிலுசிலென வளைகு லுங்கத் திடமான
செயமுதவு மலர்பொ ருங்கைத்
தலமிலகு மயில்கொ ளுஞ்சத்
தியைவிடுதல் புரியு முன்பிற் குழகோனே

கருணைபொழி கிருபை முந்தப்
பரிவினொடு கவுரி கொஞ்சக்



தேவிகாபுரம்—ஒன்பதே கருங்கற்களாலான கோயில்

6

கலகலென வருக டம்பத் திருமார்பா
கரிமுகவர் தமைய னென்றுற்
றிடுமிளைய குமர பண்பிற்
கனககிரி யிலகு கந்தப் பெருமாளே.

இப்பாடலில் கனககிரி என்ற பெயரால் இவ்வூரைக் குறிக்கிருர். தெற்குப் பிரகாரத்தில் விசாலாட்சியம்மை சந்நிதி இருக்கிறது. கர்ப்பக்கிரகத்தில் இரண்டு சிவலிங்கமூர்த்திகள் எழுந்தருளியிருக்கின்றனர். பின்னுல் சுயம்பு மூர்த்தியாய் இருப்பவரே கனககிரீசர் (பொன் மலைநாதர்); முன்னுல் காட்சியளிப்பவர் விசுவநாதர்.

மலையடிவாரத்தின் வடபுறம் ஒரு சிறு கோயில் இருக்கிறது. அங்கெழுந்தருளியிருக்கும் மூர்த்தியின் திருப்பெயர் திருகாமீசுவரர். காமேசுவரர் என்றும் கூறுவர். அம்பிகையின் திருநாமம் கோகிலாம்பாள். அம்பாள்சந்நிதி வடமேற்கிலிருக்கிறது. திருக்காமீசுவரர் கோயில் 20-க்கு 11 அடி நீளம் அகலம் உடையது; ஒன்பதே கருங்கற்களால் அமைக்கப்பெற்றிருக்கின்றது. இது சிற்பியின் சிறந்த சாதனைக்கு எடுத்துக்காட்டு. (படம் பார்க்க). அரசன் ஒருவன் மலையுச்சிக்குச் சென்று இறைவனை வணங்கிக் கீழே இறங்குவதற்குள் இந்த கோயிலைக் கல்தச்சர்கள் கட்டி முடித்தனர் என்ற செய்தி கூறப்படுகிறது.

இவ்வூருக்குச் சிறப்பைத்தருவது மலையடிவாரத்தில் விளங்கும் அம்பிகையின் தனிக்கோயில். இங்கு சிவலிங்கமூர்த்தியில்லை. மலைக்கோயிலிலிருக்கும் கனககிரிநாதரின் தேவியாரே கீழ்க்கோயிலில் எழுந்தருளியிருக்கும் பெரியநாயகியம்மையார். பிரகந்நாயகி, பிரகதாம்பாள் என்ற பெயர்களாலும் வழங்குவர். அம்பிகையின் கோயில் கீழ்மேல் 475 அடி நீளமும், தென்வடல் 250 அடி அகலமும் இருக்கிறது. மதிற்சுவர்கள் 30 அடி உயரம். மதில்களின் வெளிப்புறம் சிற்ப வரிசைகள் உள்ளன. வடக்கு, தெற்கு, கிழக்கு இந்த மூன்று புறங்களிலும் வாயில்களுள்ளன. வடக்கு தெற்கு வாயில்களைப் பயன்படுத்தவில்லை. கிழக்குவாயிலை எழுநிலை மாடக்கோபுரம் ஒன்று அழகு செய்கிறது. அதற்கு முன்னுல் உயர்ந்த நாற்கால் மண்டபம் இருக்கின்றது. அதனருகே தேர்முட்டி மண்டபம் இருக்கிறது. பொதுவாக, இத்தகைய மண்டபங்களில் ஒருபுறமே படிகள் இருக்கும். ஆனுல் இங்கு இரு பக்கம் படிகளுடைய ஒரு பெரு மண்டபம் இருக்கிறது.

கோயிலில் மூன்று பிரகாரங்கள் இருக்கின்றன. கோபுரவாயிலைக்கடந்து உள் நுழைந்ததும் தென்புறம் வீரபத்திரரும், வடபுறம் பைரவரும் காட்சியளிக்கின்றனர். தென்புறம் அழகிய படிக்கட்டுகளுடனும் சுற்றுமேடையும் உடைய திருக்குளம் இருக்கிறது. பிரமதீர்த்தம் என்று பெயர். வடக்குப் பக்கம் தெற்கு நோக்கி கல்யாண மண்டபம் இருக்கிறது. இது சக்கரங்களுடன் தேர் போன்று குதிரைகள் இழுக்கும் பான்மையில் அமைக்கப்பட்டிருப்பது கண்கவர்வனப்பினதாக இருக்கிறது. இந்த மண்டபத் தூணில் மனுநீதிச்சோழனின் வரலாற்றைக் குறிக்கும் சிற்பங்கள் அமைந்திருக்கின்றன.

பலிபீடம், கொடிமரம், நந்தி இவைகளைக் கடந்து சென்றதும் 36 தூண்களைக் கொண்ட முன் மண்டபம் இருக்கிறது. அதற்குத் தென்புறம் விநாயகர் சந்நிதியும், வடக்குப்பக்கம் ஆறுமுகனுர் ஆலயமும் உள்ளன. மண்டபத்தையடுத்து மூன்றுநிலைக் கோபுரத்தையுடைய வாயிலைத்தாண்டி அடுத்த பிரகாரம் செல்லவேண்டும். இந்தப் பிரகாரத்தில் காசிவிசுவநாதர், கச்சைகட்டிப் பிள்ளையார் சந்நிதிகளும், நவராத்திரி மண்டபமும் இருக்கின்றன. மகாமண்டபத்தில் விநாயகர், நால்வர், நடராஜர், சோமாஸ்கந்தர் முதலிய உற்சவமூர்த்திகள் காணப்படுகின்றனர். மகாமண்டபத்தைக் கடந்து வாயில் வழியாக உட்பிரகாரம் செல்லவேண்டும். கர்ப்பக்கிரகத்தில் கருணையே வடிவெடுத்து விளங்கும் தேவியாம் பெரியநாயகியின் பேரெழிலைக் கண்குளிரக் காணலாம். வெள்ளிக்கிழமை தோறும் மக்கள் திரளாக வந்து வழிபட்டுச் செல்லும் வழக்கம் இருக்கிறது. கோயிலில் இரண்டுகால பூசை நடைபெறுகிறது. பங்குனி உத்திரத்தைப் பத்தாம் நாளாகக்கொண்ட திருவிழா நடைபெறுகிறது.

இத்தலத்தில் பல தீர்த்தங்கள் இருக்கின்றன. கோயிலுக்குள் பிரமதீர்த்தம். மலையடிவாரத்தில் நவக்கிரகதீர்த்தம். இதை இப்போது பெரியப்பன்குளம் என்று வழங்குகின்றனர். ஊருக்குத் தென்கிழக்கில் நீராழி மண்டபத்துடன் கூடிய ஒருகுளம் இருப்பதை அக்கினிதீர்த்தம் என்பர். அதை மக்கள்

கூரட்டான்குளம் என்று வழங்குகின்றனர். இந்த தீர்த்தக்கரையில் ஒரு குன்றின்மீது குமரன் கோயில் இருக்கிறது. வடமேற்கு மூலையில் தேவரடியாள்தீர்த்தமும், மேற்கேசெய்யான் (சீயான்) குளமும் இருக்கின்றன. மலை வலம் வரும்போது பல சிறு தீர்த்தங்களும் உள்ளன.

இவ்வூரினின்றும் ஆத்துரைக்குச் செல்லும் பாதையில் சீனிவாசமூர்த்தி கோயில் இருக்கிறது. காத்தற் கடவுளான அவர் அம்பிகையின் தவத்துக்குப் பாதுகாப்பிற்காக எழுந்தருளினார் என்று தலபுராணம் கூறுகிறது. இன்னும் கங்கைகொண்டா[illegible] மண்டபம், பத்மாவதி மண்டபம், முத்[illegible]ம்மன் கோயில், காளியம்மன் கோயில், மார[illegible]ம்மன் கோயில் முதலியன இவ்வூரிலிருக்கின்றன. சுப்பிரமணிய சுவாமிகள் என்பவரால் தோற்றுவிக்கப்பெற்ற சுந்தரர் மடாலயம் இருக்கிறது. தேவார பாராயண சபையினர் நால்வர் குருபூசையும் வாரவழிபாடும் நடத்துகின்றனர். கனககிரீசர் எழுந்தருளியிருக்கும் மலையை செவ்வாய்க்கிழமைகளில் வலம் வந்து இறைவனை வணங்கும் வழக்கம் இருக்கின்றது. இப்படிச் செய்வதால் நீராநோயுடையவரும் நோய் நீங்கப்பெறுகின்றனராம். மலை வலம்வர இரண்டு கல் தொலைவுள்ளதாக இருக்கிறது.

இவ்வூரைப்பற்றி அருணகிரிநாதர் பாடிய ஒரு திருப்புகழ்ப் பாடலை மேலே கண்டோம். தேவிகாபுர தலமகாத்மியத்தில், தீர்த்தங்களைப்பற்றியும், கனககிரீசர் ஏற்பட்டதைப்பற்றியும், தேவகி, பார்வதிதேவி இவர்கள் தவம் செய்ததைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. சோழமன்னன் ஒருவனால் கோயில் கட்டப்பெற்றதாகத் தலபுராண வரலாறு. ஆனால் அதற்கு ஆதாரமாக ஒன்றும் இக்கோயில்களிலுள்ள கல்வெட்டுக்களில் இல்லை.

பெரியநாயகி அம்மன் கோயிலில் 55 கல்வெட்டுக்களும், மலைமேல் கனககிரீசுவரர் கோயிலில் ஒரு கல்வெட்டும் ஆக 56 கல்வெட்டுக்கள் இருக்கின்றன. மிகப்பழைய கல்வெட்டு விஜயநகர வேந்தர் காலத்ததாக இருத்தலின் இவ்விரண்டு கோயில்களும் அவர்கள் காலத்தில் கட்டப்பெற்றிருக்க வேண்டும். மகராஷ்டிர மன்னர் கல்வெட்டு ஒன்றும், ஆரணி ஜாகீர்தார் கல்வெட்டும் ஒன்றும் போக மற்ற 53 கல் வெட்டுக்களும் விஜயநகர மன்னர் காலத்தவை. வடமொழிக் கல்வெட்டு இரண்டு; மராத்திமொழிக் கல்வெட்டு ஒன்று; மற்றவை தமிழில் உள்ளன. விஜயநகர சாளுவ நரசிங்கராயர் (கி. பி. 1485–1492) முதல், வேங்கட தேவமகாராயர் (கி. பி. 1630) வரையிலும், தஞ்சையரசர் சரபோஜியின் மகன் துளஜராஜா (கி. பி. 1763-87), ஆரணிஜாகீர்தார் சீனிவாசராவ் சாகிப் (கி. பி. 1889) இவர்கள் காலங்களில் வெட்டப்பெற்ற கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவைகளில் பல அரிய செய்திகளைக்காண்கிறோம். மலைமேலுள்ள பெருமான் பெயரை, **திருமலை உடைய நாயனார், ஸ்ரீகிரீசர்** என்றும், அடிவாரக் கோயிலிலுள்ள அம்பிகையின் பெயரை, **பெரிய நாச்சியார்** என்றும் குறிக்கின்றன. 'ஜயங்கொண்டசோழ மண்டலத்துப் பல்குன்ற கோட்டத்து மேல் குன்ற நாட்டு முருகமங்கலப்பற்றைச்சேர்ந்த தேவிகாபுரம்' என்று இவ்வூர் சொல்லப்படுகிறது. சோழநாட்டின் ஒரு பெரும் பகுதியை மண்டலம் என்றும், அதனுள் மாவட்டத்தைக் கோட்டம் என்றும், அதற்குள் பகுதிகளை நாடுகள் என்றும் நாட்டின் பிரிவுகள் கூறப்படும்.

கோயிலுக்கு நிலதானம் செய்தது, கோயில் நிலங்களைக் குத்தகைக்கு விட்டது, உழவுக்காணியாட்சி கொடுத்தது, கோயிலில் பாடுவார்க்கு நிலம், வீடு, உணவு வழங்கியது, கோயில் மேற்பார்வை செய்ய நிலம்விட்டது, வரிகளைக் கோயிலுக்குத் தானமாகக் கொடுத்தது, திருக்கார்த்திகைத் திருநாளில் விளக்குகளுக்கு நெய்கொடுக்க ஏற்பாடு செய்தது, பட்டாடை நூலாயம் என்ற தறிகளின்மேல் விதிக்கப்பட்ட வரிகளைக் கோயிலுக்கு ஈந்தது, ஆற்றுவான் பாடிப்புலவர் திருவேங்கடாசல தேவர் மகன் வடமலையார் என்பவருக்கு தேவகாபுரத்திலுள்ள பிட்சாமடத்துத் தலைவர் விசுவேசுவர சிவாசாரியார் என்பவர் சொரப்பூண்டி என்ற ஊரில் நிலமும் வீடும் வழங்கியது, ஊவத்தூரைக் கோயிலுக்குத் திருநாமக் காணியாகக் கொடுத்தது, சிங்கையராவுத்தன் தாங்கல் என்னும் கிராமக் காணியாட்சி கொடுத்தது, கோயில் தருமகர்த்தர்கள் மற்றொரு கோயிலுக்கு நிலம் விற்றது, சேற்றுப்பட்டு இடையர்களைக்

கோயில் திருவிளக்குக் குடிகளாக ஏற்படுத்தியது, இடையர்கள் கோயிலுக்கு விளக்குக்காக நெய் கொடுத்தது, பங்குனி உத்திரத் திருநாளுக்குப் பொருள் வழங்கியது, கிணறுகள், குளம் வெட்டி கோயில் நிலங்களைத் திருத்தியது, கி. பி. 1889-ல் கோயில் கும்பாபிஷேகம் செய்தது, பிரகந்நாயகி தேவி விக்கிரகப்பிரதிஷ்டை செய்தது, கோயிலுக்கு தேவரடியார்கள் ஏற்படுத்தியது, இன்னும் பல அரிய செய்திகளை இக்கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.

கோயிலில் காணப்படும் கல்வெட்டுக்களில் ஒன்றை எடுத்துக்காட்டாக கீழேதரப்படுகிறது:—

"சாலிவாகன சகாப்தம் 1422-ன் மேல் செல்லாநின்ற இரௌத்திரி வருஷத்து கற்கடக ஞாயிற்று, பூர்வபக்ஷத்து சத்தமியும் சுக்கிரவாரமும் பெற்ற அத்தத்து நாள் ஸ்ரீ மதுரை சாணுயக்கர் உடையார் காரியத்துக்குக் கடவர் ஈசுரநாயக்கர் செயங்கொண்ட சோழ மண்டலத்துப் பல்குன்ற கோட்டத்து மேல் குன்ற நாட்டு முருகமங்கலப்பற்று தேவக்காபுரம் உடையார் திருமலை உடைய நாயனுர்க்கு திருப்பாட்டு ஓதுகிற குருக்கள் திட்டச்சேரி உடையார் பாரமான தேவநாயனுர் மகனுர் காளத்திநாதர்க்கும் மேற்படியார்க்கு உள்ளிட்டிருந்தார்க்கும் இவ்விருவருக்கும் திருமலை உடைய நாயனுர்க்குத் திருப்பாட்டு ஓதி தேவக்காபுரம் இந்நாயனுர் திருநாமத்துக்காணி செம்பியமங்கலம் ஏரிகீழ் நஞ்சை நிலத்திலே ஐந்நூறு குழியும்பெற்று, தேவக்காபுரத்தில் ஒரு மனையும் பெற்று, நாள் ஒன்றுக்கு நாநாழி அரிசி பிரசாதமும் பெற்று, சந்திராதித்தவரையும் திருமலை உடைய நாயனுர்க்கு இரண்டு பேரில் ஒருத்தர் திருப்பாட்டு ஓதிக்கொண்டு சுகத்திலே இருக்கக்கடவராகவும். இந்த தர்மத்துக்கு யாதொருத்தர் அகிதம்பண்ணினவர்கள் கங்கைக்கரையில் காராம்பசுவைக் கொன்ற பாவத்திலே போகக்கடவராகவும். சுவாமி நரசாநாயக்கர் உடையார்க்குத் தன்மமாக எத்தப்ப நாயக்கர் குமாரர் திருமலை நாயக்கர் ஈசுரநாயகரும் பண்ணின தன்மம்"—A. R. 355/1912.

இந்த கல்வெட்டின் விளக்கம்:—விஜய நகர வேந்தரில் துளுவ வம்சத்தைத் தோற்றுவித்த நரசநாயக்கரின் நன்மைக்காக எட்டப்ப நாயக்கரின் மக்களான திருமலை நாயக்கர் ஈசுவர நாயக்கர் என்ற இருவரும் கனககிரீசர் கோயிலில் திருப்பாட்டு ஓதுவதற்காக இரண்டு பேருக்குச் செம்பிய மங்கலம் என்ற ஊரில் ஐந்நூறு குழி நஞ்சை நிலமும், தேவிகாபுரத்தில் ஒரு வீடும், நாள்தோறும் கோயிலில் நான்கு நாழி அரிசிப் பிரசாதமும் கொடுக்க ஏற்பாடு செய்தனர். சாலிவாகன சகாத்தம் 1422 என்ருல் கி. பி. 1500 ஆகும். சாலிவாகன ஆண்டுடன் 78-ஐக் கூட்டினுல் கிறிஸ்துவ ஆண்டு கிடைக்கும். இந்த கல்வெட்டில் தமிழ் ஆண்டு இரௌத்திரி, கடகம்-ஆடி மாதம், பூர்வபட்சம், சப்தமி திதி, வெள்ளிக்கிழமை, அஸ்த நட்சத்திரம் இவைகள் கூறப்பட்டிருக்கின்றன. இதற்குச் சரியான தேதி 3-7-1500 ஆகும். இதில் மண்டலம், கோட்டம், நாடு, பற்று என்ற நாட்டின் பெரும் பகுதி, உட்பிரிவுகள் முதலியவை கூறப்பெற்றிருக்கின்றன. திருநாமத்துக்காணி என்பது சிவன் கோயிலுக்குத் தானமாக விடப்படும் நிலத்துக்குப் பெயர். திருப்பாட்டு ஓதுதலாவது தேவாரம் முதலிய திருமுறைகள் ஓதுதல். திருப்பதிகம் ஓதல் என்றும் வேறு கல்வெட்டுக்களில் குறிக்கப் பெறுவது. ஒருவருடைய நன்மைக்காக மற்றவர்கள் கோயிலில் இத்தகைய ஏற்பாடுகள் செய்வது வழக்கம். சிற்றரசர்கள் பேரரசர்களை 'சுவாமி' என்றழைக்கும் வழக்கத்தை 'சுவாமி நரசாநாயக்கர்' என்ற குறிப்பால் தெரிந்துகொள்ளலாம். சந்திரசூரியர் உள்ளவரையிலும் இந்த தர்மம் நடக்கவேண்டுமென்றும், இதற்கு யாரேனும் இடையூறு செய்வார்களானுல் கங்கைக்கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவத்திற்குள்ளாவரென்றும் கூறப்பட்டிருப்பது இந்த அறக்கட்டளை நிலையாக அழியாமல் இருந்து பயன்படவேண்டும் என்ற பேரவாவையும் நல்லெண்ணத்தையும் உடையவர்களாக அந்த தர்மத்தைச் செய்தவர்கள் இருந்தார்கள் என்பது தெரிகிறது.

---

நாகப்பட்டினம்—சௌந்திரராஜப்பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 13—3—62 முதல் 23—3—62 வரை நடைபெற்றது. இன்னிசையரங்குகளும் நடைபெற்றன.

# சிவஞான போதம்

[திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T.]

(முன்தொடர்ச்சி)

## இரண்டாஞ் சூத்திரம் மூன்றும் அதிகரணம் :

உலகத்தைத் தோற்றுவிக்கும் முதல்வன், அதனைத் தோற்றுவித்தற்கண் உயிர்களின் வேறின்றிக் கலந்து உடனாய் நிற்பன்; அங்ஙனம் இருமையின் ஒருமையில் (அத்துவிதக் கலப்பில்) நின்று, அவ்வுயிர்கள் செய்துள்ள முன்னை இருவினைக்கீடாக அவை பல்வேறு வகைப்பட்டு நிற்குமாறு தோற்றுவிப்பன்—என்னும் இருகருத்துக்கள் இச்சூத்திரத்து முதல் இரண்டு கூறுகளால் முறையே நிறுவப்பட்டன.

இவற்றில் அறிவுடைப்பொருள்களாகிய உயிர்களுக்குத் தோற்றமும் ஒடுக்கமும் உண்டு (அதாவது இறந்த உயிரே மீளப் பிறக்கும்) என்னும் கருத்து அடங்கியிருத்தலின், நித்தம் எனக் கொள்ளப்படும் உயிர்களுக்கு அவை உளவோ இலவோ என ஐயம் நிகழும்; அதனை நீக்கி, உயிர்களே இறந்தும் பிறந்தும் வரும்' எனவும், அங்ஙனம் வருதற்கண் படும் இயல்பும் உணர்த்த எழுந்தது இம் மூன்றும் அதிகரணம்.

### மூலச் சுருதிகள்;

இவ்வதிகரணப் பொருள் பிரம சூத்திரம் மூன்றும் அத்தியாயம் முதற்பாதத்துக் கூறப்படும் பொருளோடு ஒத்திருத்தல் அறியத்தக்கது. ஆண்டு ஆராயப்படும் சுருதிகள் ஈண்டும் கொள்ளப்படும்.

"உறங்கு வதுபோலும்
சாக்கா டுறங்கி
விழிப்பது போலும்
பிறப்பு—"பொதுமறை ௩௩௯
"தோற்றமும் கேடும் வைப்
பார் உயிர்கட்கெலாம்"
—திருமுறை :௩-௬-௧

என்றாற் போலும் தமிழ்மறை இவ்வதிகரணப்பொருளுக்கு மூலமாகியஉரையளவை ஆகும்.

௧. சூத்திரப்பகுதி :—"போக்கு வரவு புரிய"

[(இருவினைப்பயன் நுகரும் எனப்பட்ட உயிர்கள்) இறத்தலையும் பிறத்தலையும் எப்பொழுதும் மேற்கொள்ளும்படி]

௨. வார்த்திகம்:—

"இனி இவ்வான்மாக்கள் மாறிப் பிறந்து வரும் என்றது; தோற்றமும் ஈறும் உள்ளதற்கல்லது உளதாதல் இன்மையான்."

[தோற்றமும் ஈறும் தொடர்ச்சியாக உள்ளபொருளுக்கன்றிப் பிறபொருள்கட்குத் தோன்றுதல் கூடாமையால், இங்கு இருவினைகளைச் செய்து அவற்றின் பயன் நுகரும் எனப்பட்ட ஆன்மாக்களே இறந்து பிறந்து வரும் எனமேற் கொண்டது. மாறுதல்—இறத்தல்; உளதாதல்—தோன்றுதல், பிறத்தல்]

௩. (அ) இங்குத் தன்னாற் கூறப்படும் பொருள் :—

முப்பொருள்களுள், பதி பிறக்கவேண்டாமையானும், பாசம் பிறப்பதனால் பயன் பெறுவதன்று ஆகலானும், ஏனைப் பசு எனப்படும் உயிர்களே (தம் இயற்கைக் குற்றமாகிய மூலத்தின் நீங்கித் தூய்மையுறுதற் பொருட்டு) இறந்தும் பிறந்தும் வரும்.

(ஆ) இதன்கண் ஐயப்பாடு;—

இறந்தும் பிறந்தும் வரும் என்பது உயிர்கள் நித்தப்பொருள் என்பதனோடு முரணுதலின், அவை அவ்வாறு ஆகுமோ ஆகாவோ என இரட்டுறத் தோன்றும் உணர்வு. நம்மனோர்க்கு முற்பிறப்பின் நினைவுணர்வு தோன்றாமையானும் ஐயம் ஆம்.

(இ) பிறர்கூறும் பக்கம்:—

குடத்தின்கண் உள்ள ஆகாயம், அஃது உடைந்த வழி, ஆகாயத் தோடு கூடுமாறு போல, உடம்பு நீங்கியவழி உயிர் பிரமப் பொருளோடு கூடி அடங்கும் எனப்பைங் கலம் முதலிய உபநிடதங்கள் கூறுகின்றன. இவ்வுவமைமையைப் புனைந்துரை என்று கொள்ளுதற்கு இல்லை. ஆதலால், இறந்த உயிரே மீளப் பிறக்கும் எனக்கொள்ளாது பின்வருமாறு கொள்வோம்:—

சச்சிதானந்தமாய் நித்தமாய் வியாபகமாய் ஆகாயம் போல் நிற்பது பிரமம். அதுவே நான். ஆகாயம், குடம் முதலிய பொருள்கள் உள்ளபோது, குடம் ஆகாயம் முதலிய பெயர் பெற்று வழங்குமாறு போல, நான் பல்வேறு வகைப்பட்ட செயற்கைப் பொருள்களோடு கூடிப் பலபடியாக விளையாடுகிறேன்: இவ்விளையாட்டில் மக்கள், விலங்கு, பறவை முதலிய பெயர்களால் அழைக்கப்படுவேன். உடம்புகள் நீங்கும் போது குடம் உடைந்தபோது அதன்கண் உள்ளதாகத் தோன்றிய ஆகாயம் பொது ஆகாயத்தோடு ஒன்று பட்டாற்போல, யான் பிரமமாகவே ஒன்று படுவேன். ஆதலால் இறந்த உயிர் மீளப்பிறக்கும் எனவேண்டா. இங்ஙனம் உணர்வதே வேதாந்த ஞானம்.

இக்கொள்கை ஒருபொருட் கொள்கையின் வகை நான்கனுள் ஒன்றாகிய **கிரீடாப் பிரமவாதம்** (பெரும் பொருள் விளையாடும் என்னும் பேச்சு) எனப்படும். கிரீடா—கிரீடை, விளையாட்டு; பிரமம்—பெரும் பொருள்; வாதம்—பேச்சு.

### (ஈ) இதனைமறுத்துரைக்கும் சித்தாந்தத்துணிபு:

பிரமம் நித்தமாய் என்றும் மாறுதலின்றிச் செம்பொருளாய் உள்ளது. 'எவ்வெவர் தன்மையும் தன்வயிற் படுத்துத்—தனே யாய தயாபரன்எம் இறை' என்பது திருவாசகம். அதன் இயல்பை உணர்ந்து நானே அஃது என்றலும், அது பிறந்தும் இறந்தும் விளையாடும் என்றலும் பகுத்துணர்வில்லார் பேச்சே ஆகும். தோற்றமும் ஈறும் தொடர்ச்சியாக உள்ள உயிர்களுக்கே பிறத்தல் என்பது கூடும்; ஏனைப் பகுதிப் பொருளுக்கும் பாசத்திற்கும் அது கூடாது ஒருவன் உறங்கி மீள விழிக்கும் போது, முன் உள்ளவன் மறைந்து புதியன் ஒருவன் தோன்றினன் எனக்கொள்வதில்லை; ஒருவனுக்கே தொழிற்படுதலும், இளைப்பாறுதலும், தொடர்ச்சியாக மாறி மாறி வருதல் போல, உயிர்களுக்கும் பருவுடம்போடு கூடிப் பிறத்தலும், பின் அதனை விட்டு இறத்தலும் தொடர்ச்சியாக மாறிமாறி வரும் என்பதே சற்காரியக் கொள்கைக்கு ஒத்ததாம். இக்கருத்து உயிர்கள் நித்தம் என்றதனோடு முரணுவதன்று. ஒரு வழக்கை வாதி பிரதிவாதிகள் கூற்றுக்களிலிருந்தும் பிற சான்றுகளிலிருந்தும் நாடி உணரும் ஒரு நடுவணர் இடையிடையே விசாரணையைத்தள்ளிவைக்கிறார். ஆயினும் அவ் வழக்குப் பற்றிய உண்மைகள் அவர் உணர்வில் அடங்கி நின்று பின்னர் மீள நினைக்கும் போது கோவைப்பட வெளிப்படும். அது போல, உயிர் பருவுடம்போடுகூடி உலகில் வழங்கி வரும்போது பெறும் அனுபவம் எல்லாம் அப்பருவுடம்புக்கு மூலமாக உள்ள நுண் உடம்பில் (சூக்கும தேகத்தில்) நுட்பமாய்ப் பதிந்து அடங்கி நிற்கும்; மறுபிறப்பு எய்தும் போது முன்னைப் பயிற்சி யனைத்தும் அதன் நுண்ணுடலைப் பற்றி நின்று வெளிப்படும்.

நுண்ணுடல் முதல்வனால் முதற்கண் படைக்கப்பட்டு ஊழிக்காலம் வரையும் உயிருடன் கூடிநிற்பது. கிழங்கினின்றும் வேறு வேறு முளைகள் தோன்றி மரம் கிளைத்தல் போல, நுண்ணுடம்பிலிருந்து இருவினைக்கீடாக வேறு வேறு பருவுடம்புகள் தோன்றி நின்று மறையும். ஒரு பிறப்பின் இறுதியில் உயிர் தன் பருவுடம்பை விட்டு இறத்தல் ஒருவன் தன்மேற் சட்டையைக் கழற்றி எறிவதுபோன்றதே ஆகும்; இதற்கு வேதங்களில் மிக்கெடுத்துக் கூறப்படும் உவமைகள் மூன்று:—ஒன்று பாம்பு தன் பழையை மீந்தோலை உரித்து எறிந்துவிட்டு வேறொரு தோலைப் போர்த்து உலாவுதல்; மற்றொன்று, அன்றாடம் உறங்கும்போது நனவின்கண் உள்ளதாகிய பருவுடம்பை நம் அறிவால் தோய்ந்து நீத்துக் கனவின்கண் உள்ளதாகிய நுண்ணுடம்பிற் செல்லுதல்; மூன்றாவது, யோகிகள் தாம் வேண்டும்போது தம் உடம்பின் நீங்கிப் பிறிதொன்றன் உடம்பைப் பற்றி நின்று பின் மீளுதல்.

பல்லாறாகப் பரந்து செல்லுதற்குரிய வெள்ளம் அணைகட்டித் தடுக்கும் போது தடைப்பட்டு ஓரிடத்துக் காணப்படுதல் போல, தன் இயல்பில் வியாபகமாகிய ஆன்மா மலத்தால் தடைப்பட்டுத் தனக்குக் கரணமாக வந்த சூக்கும உடம்பு அளவில் ஏகதேசப்பட்டு நிற்கும். சிவஞானத்தால் மலம் நசித்துச் சூக்குமதேகத்தடையினின்று நீங்குவதே முத்திநிலை எனப்படும். பைங்கலம் முதலிய உபநிடதங்களில் கூறப்பட்ட குடஆகாய உவமை முத்தி நிலைக்கண் ஆன்மாச்

சூக்கும உடம்பினின்று நீங்குவதை விளக்குவதற்குக் கூறப்பட்டதேயன்றிப் பிறவி தோறும் சூக்குமவுடம்புதொடர்ந்து உளதாக, மதியின்கண் ஒளிக்கலை வளர்ந்தும் தேய்ந்தும் வருதல் போல உளதாகியும் பிரிந்தும் வரும் பருவுடம்பின் நீக்கமாகிய இறப்பிற்குக் கூறப்பட்டதன்று. இக்கருத்தைப் பின்வரும் உதாரணச் செய்யுளால் மெய்கண்ட தேவர் விளக்குகின்றார்:—

அரவுதன் தோல் உரிவும்
அக்கனவும் வேறு
பரகாயம் போய் வரும்அப்
பண்பும்—பரவில்
குடாகாய ஆகாயக் கூத்
தாட்டாம் என்ப(து)
அடா(து) உள்ளம்
போமா(று) அது.

குடாகாய உவமை மட்டுமன்றிப் பாம்பு தன் தோலை உரித்தல் முதலிய உவமைகளும் வேதங்களுள் கூறப்படுகின்றன. அவற்றுள் பாம்பு தன் தோல் உரித்தல் முதலிய உவமைகளை உயிர்தன் பருவுடம்பை விட்டுச்சென்று வேறு பிறவி எடுத்தற்கும், குடாகாய உவமையைச் சுத்த நிலைக்கண் உயிர் தன் நுண்ணுடம்பான் ஆயதடை நீங்கித் தன் வியாபக நிலை விளங்கப் பெறுதற்கும் கொள்ளுதலே அளவை முறைக்கும் பொருந்துமாற்றிற்கும் ஏற்றது. முன்னையவற்றைப் பொருட்படுத்தாது உயிர் பருவுடம்பை விடுதலைக் குடாகாய ஆகாயம் போன்றதொரு கூத்தாட்டாம் என்பது ஏற்றதன்று என்றபடி. பரவில்—பரவுதற்கண், மிக்கு நிகழ்தற்கண்.

மற்றோர் உதாரணச்செய்யுளால் உயிர்கள் மாறிப் பிறத்தற்கண்படும் இயல்பு கூறப்படுகின்றது:—

ஒருவன் இறக்கும்போது முன்னர்க் கெடுவனகண்ணும் செவியுமே ஆம். கண் செவி முதலிய உறுப்புக்களை உடைய பருவுடம்புகெட்டு, அரவின் தோல் போலவும் மதியின்கண் நின்றகலைபோலவும், நீங்கிய விடத்து, அப்பருவுடம்பிற்குக் காரணமாகப் படைப்புக்காலம் முதல் உடன் உள்ளதாகிய நுண்ணுடம்பு வாயிலாக, நல்வினையை மிகச் செய்த உயிர் பூதசாரமாகிய பருவுடம்பைக் கொண்டு மேல் உலக இன்பத்தை நுகரும்; தீவினையை மிகச் செய்த உயிர்யாதனைஉடல் எனப்படும் பருவுடம்பு கொண்டு இருள் உலகில் துன்பம் துய்க்கும். இரண்டுமன்றி நெடு நாள் உணர்வின்றிக் கிடந்துபின் ஒரு பருவுடம்பைக்கொண்டு இந்நில உலகிலேயே மீளப் பிறத்தலும் உண்டு.

துறக்கம் எய்தி இன்பம் துய்த்த உயிர், இறுதிக்கண் அறிவு திரியப் பெற்று, முன் உடம்பு நீங்கும்போது தான் செய்த வினை எக்கருவைக் காட்டி விரும்பும்படி செய்ததோ அக்கருவில் மனம் செலுத்த ஆண்டு விழுந்து பிறவியை எடுக்கும். நனவிற்கண்டவற்றைக் கனவு நிலையில் முற்றிலும் மறந்து விடுகின்றோம். அதுபோலவே, துறக்கவின்ப நுகர்ச்சி முடிவில் பூதசாரவுடம்பை விட்டவழி உயிர், தான்முன் மக்கள் உடம்பைவிட்டவாற்றையும், பின் வேறு உடம்பு கொண்டு துறக்கம் எய்தியின்பம் நுகர்ந்தையும் மறந்து அறிவு வேறுபடப் பெறும் என்று உணர்தல் வேண்டும். முன்னைப் பிறவியின் நினைவுவாராமைக்கு இதுவே காரணம்.

கண்ட நனவைக் கன
வுணர்வில் தான் மறந்து
விண்படர்ந்து அத் தூடு வினை
யினால்—கண்செவிகெட்டும்
உள்ளதே தோற்ற உளம்
அணுவாய்ச் சென்று மனம்
தள்ள விழுங்கருவில்
தான்—என்பது செய்யுள்.

கண்செவிகெட்டவழி உள்ளதே தோற்ற உளம் (உயிர்) அத்தூடு விண்படர்ந்து (இன்பம் நுகர்ந்து), கண்ட நனவைக் கனவுணர்வில்தான் மறந்து (முன் உடம்பு இறக்குங்கால அடுத்தவினை காட்டுங் கதி நிமித்தம் பற்றி உயிர் அவாவுமாறு) மனம் தள்ள வினையினால் அணுவாய்ச் சென்று (அக்)கருவில் விழும் — எனக்கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளவேண்டும்.

இங்கு அணு—என்றது நுண்ணுடம்பு. பருவுடம்பு தூலபூதம் ஐந்தானும் ஆகி ஐம்பொறிகளால் உலகப்பொருள்களை அறிந்து வருவது. அதுபோல, நுண் உடம்பு சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் எனப்படும் காரண பூதங்களால் ஆக்கப்பெற்று மனம் ஆங்காரம் புத்தி என்னும் உட்கருவிகளால் நுண்ணிய நுகர்ச்சிப்பொருள்களை உணர்ந்து நிற்பது. இவ்வுடம்பே கனவின்கண் உடம்பாக உள்ளது: சூக்குமபூதம் ஐந்தும் அகக்கரணம் மூன்றும் ஆய எட்டால் ஆயது

இக்காரணம் பற்றி இது புரியட்டகம் எனப் படும். இதன் காரியமே பருவுடம்பு என உணர்தல் வேண்டும்.

இவ்வெண்பாவைப் பின்வரும் அப்பர் அருண் மொழியோடு புடைபடவைத்து உணர்தல் நன்று;—

"துறக்கப் படாத உடலைத்
துறந்துவெந் தூதுவரோ(டு)
இறப்பன்; இறந்தால் இருவிசும்
பேறுவன், ஏறிவந்து
பிறப்பன்; பிறந்தால் பிறையணி
வார்சடைப் பிஞ்ஞகன் பேர்
மறப்பன் கொலோ என் றென்
னுள்ளங்கிடந்து மறுகிடுமே"

இவ்திகரணத்தாற் கூறப்பட்டபொருள் மாணுக்கர் உள்ளத்துப்பதிந்து நிலைபெறுதற் பொருட்டு வேதத்துள் பஞ்சாக்கினி வித்தை என்னும் ஒரு தியான முறை கூறப்படு கின்றது.

பருவுடம்பை விட்டிறக்கும் உயிர் துறக்கஞ் சென்று மீளும் போது மேக மண்டலம், நிலம், தந்தை, தாய் என்னும் நான்கு இடத்தும் தங்கிப்பின் பிறக்கும். துறக்கம் முதலிய ஐந்திடத்தையும் ஐந்து அங்கியாகவும், இவற்றின் எய்திய ஆன்மாவை ஆகுதியாகவும் வைத்துத் தியானிக்கும் முறையே பஞ்சாக்கினி வித்தை எனப்படும்.

இரண்டாஞ் சூத்திரத்து மூன்றும் அதிகரணம் முற்றிற்று.

(தொடரும்)

---

திருப்பரங்குன்றம்—ஆண்டவர் சுப்பிரமணியசுவாமி கோயிலில் பங்குனி பிரம்மோற்சவம் 10—3—62 முதல் 26—3—62 வரை நடைபெற்றது.

கோவிலூர்—மந்திரபுரீசுவரர் கோயிலில் பிரம்மோற்சவம் 9—4—62 முதல் 19—4—62 வரை நடைபெறும்.

திருவெண்ணெய்நல்லூர்—கிருபாபுரீசுவரர் கோயிலில் பிரமோற்சவம் 12—3—62 முதல் 23—3—62 வரை நடைபெற்றது.

சிதம்பரம்—தில்லை கோவிந்தராஜசுவாமி கோயிலில் மாசிமக மண்டகப்படி உற்சவம் 18—2—62 முதல் 20—2—62 வரை நடைபெற்றது.

பின்னத்தூர்—கோதண்டராமசுவாமி கோயிலில் மாசிமக உற்சவம் 18—2—62 முதல் 20—2—62 வரை நடைபெற்றது.

வட.பழனி—வடபழனி ஆண்டவர் கோயிலில் 22—3—62 முதல் 24—3—62 வரை தெப்பத்திருவிழா நடைபெற்றது.

கும்பகோணம்—நாகேசுவரசுவாமி கோயிலில் திருத்தேர் உற்சவம் 12—3—62 முதல் 21—3—62 வரை நடைபெற்றது.

பந்தணைநல்லூர்—ஆதிகேசவப்பெருமாள் கோயிலில் பங்குனி உத்திர பிரம்மோற்சவம் 12—3—62 முதல் 22—3—62 வரை நடைபெற்றது.

குடந்தைக்கீழ்கோட்டம்—நாகேசுவரசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 11—3—62 முதல் 22—3—62 வரை நடைபெற்றது.

கடலூர் பழையபட்டினம்—காமாட்சியம்மன் கோயிலில் பிரம்மோற்சவம் 11—3—62 முதல் 24—3—62 வரை நடைபெற்றது.


பண்ணுரி—பண்ணுரிமாரியம்மன் கோயிலில் 18—3—62 சென்னை அறநிலையத் துறை துணை ஆணையர் திரு டி. இராமலிங்க ரெட்டியார், எம்.ஏ. பி.எல்., அவர்கள் புதிய கட்டிடத்தைத் திறந்து நிரந்தர மின்விளக்குகளை ஏற்றியும் வைத்தார்கள்.

திருக்கடிக்குளம்—கற்பகநாதசுவாமி கோயிலில் பங்குனி உத்திர விழா 21—3—62ல் நடைபெற்றது.

சாத்தூர்—மாரியம்மன் கோயிலில் பங்குனிப் பொங்கல் உற்சவம் 18—3—62 முதல் 27—3—62 வரை நடைபெற்றது.

வடுவூர்—கைலாசநாதசுவாமி கோயிலில் பங்குனி உத்திர உற்சவம் 21—3—62-ல் நடைபெற்றது.

தொட்டியம்—மதுரகாளியம்மன் கோயிலில் இரதோற்சவம் 13—3—62 முதல் 3—4—62 வரை நடைபெறும்.



திருவானைக்கா கோயிலில் டாக்டர் C. P. இராமசுவாமி அய்யர் குழுவினரும், அறநிலைய ஆணையர் முதலியவரும்.

## அறிவிப்பு

'திருக்கோயில்' சந்தாதாரர்கள் தங்கள் சந்தாத்தொகையை சம்பந்தப்பட்ட அறநிலையத்துறை உதவி ஆணையர் அவர்களுக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## அடியவர் திருநட்சத்திரங்கள்

### சுபகிருது—சித்திரை


**சைவம்**

6வ—இசைஞானியார்
7வ—திருக்குறிப்புத்தொண்டநாயனார்
16வ—திருநாவுக்கரசுநாயனார்
21வ—சிறுத்தொண்டநாயனார்
23வ—மங்கையர்க்கரசியார்
25வ—விறன்மிண்டநாயனார்

**வைணவம்**

6வ—மதுரகவிஆழ்வார்

Vol. 4. No. 7. THIRUKOIL Reg No. 7039



சென்னை மயிலாப்பூரிலுள்ள திருவள்ளுவர் கோயில் உள்தோற்றம்

Edited and Published by the Commissioner, Hindu Religous and Charitable Endowments (Administration) Department, Madras-34.
Printed at Paari Achakam, 127, Broadway, Madras-1.